# கொங்கு நாட்டுத் தீரன்

தமிழ்நாடு நிதியமைச்சர் மாண்புமிகு

**K. A. மதியழகன்**

**புதுமைப் பிரசுரம்**

திருவல்லிக்கேணி
சென்னை - 5

பெண்ணாடம்
தெ. ஆ. மாவட்டம்

முதற் பதிப்பு, டிசம்பர் — 1969

நூலகப் பதிப்பு

விலை ரூ. 5-00

நண்பர்கள் அச்சகம் சென்னை-18

# பதிப்புரை

"கழகத்தின் எழிலுருவம் அமைந்த காலை கருத்தளித்துக் காவல் நின்றான் இந்தக் காளை!"

பேரறிஞர் அண்ணா அவர்கள் இந் நூலாசிரியரை இப்படிப் பாட்டு மொழியிலே நமக்கெல்லாம் அறிமுகப்படுத்தி இருக்கிறார்.

அண்ணாவின் அடி தொடர்ந்து கடந்த இருபது ஆண்டுகளாகத் தமிழுக்கும், தமிழ் மண்ணிற்கும் இவர் ஆற்றி வந்துள்ள தொண்டினைத் தமிழர்கள் அறிவார்கள்.

கல்லூரியிலே பட்டம் பெற்று வெளி யேறிய நாள்முதல் தன்னைப் பொதுப்பணிக்கு அர்ப்பணித்துக் கொண்ட இந்நூலாசிரியர் திருமிகு கே. ஏ. மதியழகன் பி. ஏ. அவர்கள் எண்ணற்ற சிரமங்களுக்கும், எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கும் இடையே தொய்வில்லாது தேசத் தொண்டாற்றியவர். தியாகத் தழும்பு களையும் சிறை வாழ்வையும் அந்தத் தொண் டிற்குப் பரிசாகப் பெற்றவர். அந்தப் பரிசுக்

களைப் பெற்றதால் பூரிப்பும் அடைந்தவர். பெருமையுற்றவர்.

படிப்பது — சிந்திப்பது — ஒரு நாளின் பெரும் பகுதியை பொதுத்தொண்டிற்குச் செலவிடுவது என்ற பழக்கம் இளமையிலேயே இவரைப் பிடித்துக்கொண்டது. இன்றுவரை அந்தப் பழக்கத்திலிருந்து அவரால் விடுபடவே முடியவில்லை.

கொங்கு மண்டலம் — கணியூரில் — வள மான விவசாயக் குடும்பத்தில் அரும்பிய மலர் களிலே நாட்டுக்கு மணம் தர வந்த ஒரு லட்சிய மலர் இவர்.

திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கிய அண்ணாவின் கரத்திற்குத் துணைக்கரமாய் — கருத்திற்கு உருவாய் — அவரின் நிழல் போல நின்று அவரின் எல்லா அரசியல் முடிவுகளுக் கும் — திட்டங்களுக்கும் — உருக்கொடுத்து — அவரின் உள்ளத்திலே தனியானதோர் இடத்தைப் பெற்றவர்.

இன்று அண்ணா அவர்களின் உள்ளத்தைத் தனதாக்கிக் கொண்டு — அவரின் நிதானத் தையும் — அவரின் ஆழ்ந்த புலமையையும் — பிரச்சினைகளில் அவர் கையாண்ட, அணுகும் முறையையும் — பின்பற்றி — இன்று அவர் அமைத்துக்கொடுத்த தமிழக அமைச்சரவையில் நிதியமைச்சராக பொறுப்பேற்றுப் பணியாற்றி வருகின்றார்.

ஆட்சிச் சக்கரத்தை இயக்குவதற்கு இவரின் திறமை அச்சாணியாக விளங்குகிறது என்று அரசியல் வட்டாரத்தில் வெளிப்படை யாகக் கூறுகின்றனர்.

தமிழக அரசில் நெடுங்காலம் பணியாற்றி வரும் திறமைமிக்க உயர்தர அதிகாரிகள் — இவரை, "நிர்வாகப் புலி!" என்று மனமாரப் பாராட்டி மதிப்பளித்து வருகின்றனர். இது உண்மை, மிகையல்ல.

தமிழ்ப் பேச்சில் தனக்கென தனி நடை யும் தனி வழியும் அமைத்துக்கொண்டு பேச்சுக் கலையிலே எழுச்சியை உருவாக்கிய இவர் — பொருளும் பொருள் வழியே அழகும் சேர்த்து ஆங்கிலம் எழுதுவதிலும் — பேசு வதிலும் புலமை மிக்கவர் — இவர் அறிக்கை களில் ஆழம் இருக்கும் — அழுத்தம் இருக்கும்.

இசை — கலை — இரண்டிலும் ரசனை மிக்க இவர் பொருளாதார நூல்களையும் — வரலாற்று ஏடுகளையும் — உலக அரசியல் வித்தகர்களின் வாழ்க்கைச் சரிதங்களின் நுணுக்கங்களையும்— கற்றறிந்தவர். தலை சிறந்த எழுத்தாளர் — சிறு கதைச் சிற்பி — நாவலாசிரியர் — பத்திரிகை யாளர் — என்பதையும் நாடறியும்.

'மதி' என்று லட்சக்கணக்கான தமிழர் களால் அன்போடும் பாசத்தோடும் அழைக்கப் பட்டு வரும் அரசியல் மேதையாம் — மாண்புமிகு நிதியமைச்சர். கே. ஏ. மதியழகன் பி. ஏ. அவர் களை இங்கே மேலும் அறிமுகப்படுத்த

முயற்சிப்பது — நிலவைக்காட்ட அகல் விளக்கைக் கையிலே எடுப்பது போன்ற வேடிக்கையாகும் என்று அஞ்சுகின்றோம்.

பத்திரிகைத் துறையில் புதிய சிந்தனைகளின் ஊற்றிடமாய் அறிவொளி பரப்பி வரும் "தென்னகம்" வார ஏட்டில் இவர் தீட்டிய ஓவியம்தான் — கொங்கு நாட்டின் வீரமறவன் - "தீரன் சின்னமலை!" கொங்கு மண்டலம் விடுதலை விரும்பிகளின் தாழ்வாரம்! வீர உணர்ச்சிகளின் விளைநிலம்! மானப் பூக்கள் மொட்டவிழ்ந்து மணம் பரப்பும் மண்! அந்த மண்ணிலே முளைத்து வெள்ளையருக்கு எதிராகத் துந்துபி முழக்கிய முதல் வீரன் தீரன் சின்னமலை.

அவனைக் கருவாகக்கொண்டு — அவனைச் சுற்றி உலவிய பாச உள்ளங்களை உயிருள்ள பாத்திரங்களாகப் படைத்து, தனக்கே உரிய, அருவி நடையில் — அழகு நடையில் — அறிவு நடையில் ஆசிரியர் இந்த வரலாற்று ஓவியத்தைத் தீட்டியிருக்கிறார்.

உணர்வுகளாலும் — விடுதலை வேட்கையாலும் உந்தப்பட்ட பாத்திரங்களின் நடமாட்டத்தை நேருக்கு நேர் நம் கண்களால் பார்ப்பதுபோல் சித்தரித்திருக்கிறார்.

கதையில் வரும் சின்னமலை — ஆசிரியரின் எழுத்துக்களிலே இருந்து எழுந்து வந்து நம்மைக் கை குலுக்குகிறான். கட்டித் தழுவுகிறான். உறவாடுகிறான். உள்ளத்தைத் திருடு

கிருன். அந்த உள்ளத்திலேயே உட்கார்ந்து கொள்கிருன்.

'பெரிய தம்பி'யின் பாசமும் — 'வள்ளி நாயகி'யின் வெள்ளை மனமும் — முத்து வேலரின் கம்பீரமும் நம் நெஞ்சைவிட்டு அகலாத படைப்புக்கள்.

அருவி நடை, அழகு நடை, அறிவு நடை— இந்நூலாசிரியரின் தனி உடமை! எண்ணங் களில் எழுச்சியும் உணர்ச்சியும் எக்காள மிடுகின்றன.

ஆம்! 'சென்னிமலைக்கும் — சிவன்மலைக் கும் இடையிலே உள்ள சின்னமலை' உங்களைச் சந்திக்க விரும்புகிருன். உள்ளே செல்லுங்கள்.

பதிப்பகத்தார்

# 1

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி. அந்தக் காலம் பொற்காலமா, இருட்காலமா என்ற சந்தேகம் வாழ்ந்தவருக்கும் எழவில்லை; வரலாற்று ஆசிரியனுக்கும் தோன்றவில்லை.

நெடிய இரவா? அருணோதயத்தின் வைகறையா? நம்பிக்கை என்னும் வசந்தமா? நம்பிக்கையின்மை என்னும் மாரிக்காலமா? மூடநம்பிக்கையின் சகாப்தமா? அறிவின் தலைமுறையா?

இந்தக் கேள்விகளுக்கு இடம் இல்லாத அளவிற்கு நாட்டின் நடைமுறை படம் தீட்டிக் காட்டியது.

தென்றல் தவழும் தென்னகத்தில் புயல் புகுந்தது. நாடெங்கும் அல்லோல கல்லோலம்.

முகலாய முடி மன்னர்களின் தகதகப்பும் ஜொலி ஜொலிப்பும் மங்க ஆரம்பித்தன.

தென்னகத்தில் ஐதராபாத் நிஜாம் பெயரளவில் டில்லி பாதுஷாவின் பிரதிநிதி. ஆனால் அரண்மனைக்குள் குத்து வெட்டு. அவனுக்குக் கட்டுப்பட்டவன் ஆற்காடு நவாப். அவன் ஆட்சியின் கீழ் அடக்கம் தமிழ் மண். ஆனந்த அமளி மிசையில் லயித்திருந்தான், ஆற்காட்டான். அந்த சுகபோகத்திற்குக் கடன் பெறவே நேரம் போதவில்லை. அரசுக் கடமை நினைவு எங்கே இருக்கப் போகிறது ?

தஞ்சைத் தரணியோ, இமயத்தில் இலட்சினையையும் எல்லையற்ற அலைகடலுக்கப்பால் புகழ்க் கொடியையும் பொறித்த ராஜராஜன், ராஜேந்திரன், குலோத்துங்கன் வழிமுறை பட்டுப் போய், விஜயநகரப் பேரரசன் தளநாயகர்களின் கோட்டமாயும், மராட்டிய சர்தார்களின் சபா மண்டபமாயும் மாறியது. இரகுநாத நாய்க்கன், விஜயராகவ நாய்க்கன் — இப்படிப்பட்ட பெயர்களைத் தஞ்சைநகர மக்கள் உச்சரிக்க வேண்டியிருந்தது.

சரபோஜி என்ற மன்னன் ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு குத்தகை என்று பேசி அரச நிர்வாகத்தையே வாடகைக்கு விட்டான். வர்த்தகம் செய்ய வந்த வெள்ளையனுக்குப் புதிய வேலைகள் துவங்கின.

சென்னையிலும் தேவனாம்பட்டினத்திலும், புதுச்சேரியிலும் லண்டன்காரனும், பாரீஸ்காரனும் கூடாரம் அடித்தான். சில நாட்களில் கூடாரம் கோட்டையாக வளர்ந்தது. கப்பற் தளத்தில் நின்றுகொண்டு இந்தியக் கரையைப் பார்த்த வெள்ளையன் நினைத்ததெல்லாம் இதுதான் :

இங்கோர் பூபாகம் உண்டு. இதில் ரோம் நகர பீட்டர் தேவாலயத்தையும், வெனிஸ் நக்ர பீட்டர் ஆலயத்தையும் தோற்கடிக்கும் கோவில்கள் உண்டு. சிற்பியின் உளியால் இங்கே கல்லும் கவிதை சொல்லும். அந்த விக்ரகங்களுக்கு வைரமும், வைடூரியமும், கோமேதகமும், மரகதமும் இழைத் திருப்பார்கள். கலாப மயில் உண்டு. அதன் ஆயிரம் கண்களைப் பார்க்க நம் கண் போதாது. சந்தனக் காடுகள் உண்டு. அங்கே சர்ப்பங்கள் உண்டு. அவை தீண்டினல் உடனே மரணம். காலைப் பனிப் படலத்தை நினைவூட்டும் மெல்லிய பட்டாடை இந்த மண்ணின் கைத்திறன். எனினும் மூட நம்பிக்கை யென்னும் முடைநாற்றம் போகவில்லையாம். நரபலி இடுவார்களாம். மிருகங்களெல்லாம் வணங்கும் கடவுளராம். இறந்த கணவனுடன் மனைவியையும் தீக் குண்டத்தில் கொழுத்துவார்களாம். எது இருந் தால் நமக்கென்ன? வாணிபம் நமது நோக்கம். அவரது வழி பாட்டுமுறை குறித்து நமக்கென்ன?'

'வெள்ளையன் வந்தான்; துறைமுகத்தில் இறங்கி ஞன். தென்னை மரங்களின் வரிசை தென்பட்டது. கிணற்றடியில் தவளைகளின் கூச்சல் கேட்டது. தெருக் களிலே கட்டை வண்டிகள் கடகடவென சக்கரங்களைச் சுழற்றிக்கொண்டு ஓடின. குதிரைக்குப் பதில் மாடுகள் வண்டியை இழுத்தன. யானைகள் துதிக் கையை அசைத்துக் கொண்டு பாதைகளிலே ஊர்ந் தன. கட்டிளங்குமரிகள், குளத்தங்கரையிலும், ஆற்றுப் படிகளிலும் குடங்களிலே தண்ணீர்மொண்டு தலையிலே வைத்துக் கைகளை வீசி, குடத்தில் நீர் தழும்ப, இதயத்திலே ஆசை தழும்ப ஒயிலாக நடந்து போகும் காட்சி ரம்மியமாகப் பட்டது.

ஆனல் அமைதியற்ற அரசியல் கண்களுக்குத் தெரிந்தது; 'வாய்ச் சொல் வீரர், வலிவில்லாதார், கோழைகள்' என்ற முடிவுக்கு வந்தான். எண்ணத் தொலேயாத பேதத்தைக் கண்டு சிரித்தான். 'இந்த உழைச் சேற்றை, ஏருத ஆழத்தைக் கடந்து நம்மை எதிர்ப்பது எப்போது?' என்ற கர்வம் அவன் உள்ளத்தில் பாய்ந்தது.

நாட்டில் நல்லரசில்லே. அரசுக் கட்டிலுக்காக அமுளி. தடியெடுத்தவன் தண்டல் நாயகமானன். கோலெடுத்தவன் குறுநில மன்னன் ஆனன். ஆற்காடு நவாப் பெயரளவில் மன்னன். ஆட்சித் திறம் பூஜ்யம்.

கள்ளிக்கோட்டையில் சாமோரின். கேரளக் கரையில் வேறு அரசு. தென் பாண்டி மண்டிலத்தில் நாயக்க வம்சம். அது எட்டாத இடங்களில் பல பாளேயக்காரர்கள்.

மைசூர் மண்டிலத்தில் கொய்சால பரம்பரையின் வீழ்ச்சிக்குப் பிறகு விஜயநகர தளகர்த்தர்கள் ஆட்சி பீட மேறினர். அவர்கள் வம்சமும் வலிவிழந்து புது நிலே உருவாகியது.

போருக்குக் கிளம்புமுன் நாள் நட்சத்திரம் கேட்டனர் ராஜாக்கள். தளபதியின் ராணுவ நுணுக்கத்திற்கு இருந்ததைவிட சோதிடனின் ஆருடக் கணக்கிற்கு அதிக மதிப்பு இருந்தது.

போரென்ருல் பரிவாரங்களுடன் மன்னர் முகாமிட்டனர். குழந்தை குட்டிகள், பெண்கள், பாடகர்கள், நடனமாதுக்கள் ஆகியவர் சகிதம் பண்டி ஊர்ந்து செல்லும். பொட்டல் வெளியில் கூடாரங்கள்

அடிக்கப்படும். அந்த இடம் சில மணி நேரம் கடைத் தெரு, நாட்டிய அரங்கு முதலியவைகளுடன் திருநகர மாகக் காட்சியளிக்கும்.

போரில் மன்னவன் யானை மீது அமர்ந்து கணை தொடுப்பான். மன்னனின் பாதுகாப்புக்காக அவனைப் போல் ஐந்தாறு யானைகளில் வேஷம் போட்ட மன்னர்கள் போர் புரிவார்கள். நாடகத்தில் 'இரட்டை வேடம்' போல் களத்திலேயும் உயிர் அவ்வளவு கரும்பாக இருந்தது.

போர் புரியும் வீரர்களின் ஒரு கண் எப்போதும் யானை மீதுள்ள அரசன் மீது இருந்தது. யானைமீது ஆள் இல்லையென்றால் அந்த வினாடியே போர் தோற்று விட்டது என்று பஞ்சாய்ப் பறந்தனர். போர்க்களத்தில் யார் மாண்டார்கள், எவரின் கை, கால் ஒடிந்தன என்று எவரும் கவலைப்பட்டதில்லை.

மன்னனின் கவனம் எல்லாம், 'பாடி வீட்டில் பாடகியின் கீதம் மதுரமாக இருந்ததா ?', 'நடனமாது, அன்றைய நாட்டியத்தில், 'போர்புரியும் பார்த்திபனே! என் பொன்னவர் மேனிக்குத்தான் இந்தச் சுடர் என்று கருதி விடாதீர்; என் புன்னகையின் ஜொலிப்பு அந்த மின்னலில் ஏது, தலைவனே ! எனது விழி வீச்சுக்கு உங்கள் வாள்வீச்சு எம்மாத்திரம் !' என்ற பாவங்களுக்குப் பதம் பிடித்தாளா ?' என்பதிலே தான் இருந்தது.

தென்னகத்தின் அரச உரிமைப் போராட்டங்களில், தங்களுடைய ஆதிக்க உரிமைப் போராட்டம் தொக்கி யிருப்பதாகப் பிரெஞ்சுக்காரனும் ஆங்கிலேயனும் ஜோப்பம் பிடித்தனர்,

'ஆற்காடு நவாப் முகமதலி எங்கள் செல்லப் பிள்ளை' என்றான், ஆங்கிலேயன்.

'இருந்தால் என்ன? சந்தாசாகிப் எங்கள் மண வாளன்' என்றான் பிரெஞ்சுக்காரன்.

'நாசிர்ஜங் — அவனுக்குத்தான் நைஜாமின் மணிமுடி' — வெள்ளையன் சொன்னான்.

'முஜபர்ஜங் — அவனே பட்டத்துக்கு உரிமை யாளன்'—பிரெஞ்சுக்காரன் பிடிவாதம் பேசினான்.

# 2

நாடு வேட்டைக் காடாகியது. நாசத்தின் நர்த்தனம் எங்கும் தாண்டவமாடியது. பூவார் சோலை சூழ்ந்த பொன்னி நதித் தண்ணீர் வீரர்கள் கொட்டிய குருதியில் செந்நிறமாக மாறி ஓடியது; பாலாற்று மணலின் வெண்மை நிறம், இரத்தக் கறை படிந்ததால் பாதிக்கப்பட்டுப் பழுப்பு வர்ணம் பெற்றது.

செந்நெல்லும் கரும்பும் வண்ணத் தடாகங்களும் நிறைந்த தஞ்சைத் தரணியில் வயல்கள் வெடித்துக் கிடந்தன. வாய்க்கால்கள் வறண்டு கிடந்தன. வைக்கோல் போர்களும் தானியக் களஞ்சியங்களும் இருந்த இடங்களில் சாம்பல் மலை குவிந்தது. பெருந்தீ பரவியது. அணைகள் உடைக்கப்பட்டன. உழவர்

களின் கலப்பை தூங்கியது. ஊர்கள் கொளுத்தப் பட்டன.

உயிரும் உடைமையும் மிகவும் மலிவான பொருளாகக் கருதப்பட்டன. சட்டமும் அமைதியும் நாட்டிலிருந்து விடை பெற்று எங்கோ மேக மண்டலத்தில் ஒளிந்து கொண்டன. அந்தக் கொடுமையையும் கோரத்தையும் அது நாள் வரை தமிழகத்தில் எந்தக் கண்களும் பார்த்ததில்லை.

எந்தக் கம்பனும் அந்த அழிவின் திருவிளையாடலைக் கற்பனை செய்ததில்லை. ''வெல்லும் சொல்'' படைத்த எந்த வீரனும் அந்த வேதனையைச் சொல்லும் முயற்சியில் தோல்வியையே தழுவி யிருப்பான்.

மாடு கன்றுகள் இறந்தன. வீடு, வாசல் இழந்தவர்கள் வேற்றிடம் ஓடினர். அவர்களில் பலர் குதிரைகளின் குளம்படியில் சிக்கி மாண்டனர். பலர் ஈட்டிக்குப் பலியாயினர். மகனை இழந்த மாதா, கணவனை இழந்த காரிகை, தங்கையைப் பறிகொடுத்த தமையன், தாயைப் பிரிந்த மகள் — இப்படி நாதியற்றவர்களாகக் கோவெனக் கதறி நின்றனர்.

தீக்கும் தீயவரின் வாளுக்கும் தப்பியவர் பஞ்சம் பட்டினி என்னும் கொடுமைகளின் கோரப் பற்களுக்கு இரையாயினர். சோழநாடு சோறுடைத்து என்று யாராவது அந்தப் பரிதாபத்துக்குரியவர்களிடம் சொல்லியிருந்தால் சொன்னவனைச் சும்மா விட்டிருக்க மாட்டார்கள். எதிரிக்கு உணவு கிடைக்குமோ என்பதற்குத் தானியங்களையே அழித்து விட்டனர்.

நாட்டில் உழவுத் தொழில் நடைபெறவில்லை. நல்லவர் கொடுத்த கஞ்சி எத்தனை நாளைக்கு வரும்? தஞ்சைத் திருநகரில் எழுபது எண்பது பேர் உண

வில்லாததால் பிணமாயினர். நெற்களஞ்சியத்தில் ஏற்பட்ட இந்த நெருக்கடி கண்டு எந்த அரண்மனையும் நெஞ்சு கொதிக்கவில்லை.

பல மாதங்கள், ஆண்டுகள் சென்னையிலிருந்து தஞ்சை வரையுள்ள நெடுஞ்சாலைகளில் மனித வாடையே வீசவில்லை. நாலுகால் பிராணிகள்கூடத் தென்படவில்லை.

நெடுஞ்சாலையில் அர்த்த ராத்திரியில் அட்டிகையைத் திருடியவன் பகல் வேளையில் அங்காடித் தெருவில் விலை கூறி நின்றான். தங்கச் சங்கிலிக்காகக் குழந்தையின் கழுத்தை நெரித்தவன் தண்டனையின்றி ஊரிலே உலவினான். கொலைகாரன், கொள்ளைக்காரன் இவர்களின் கொற்றம் நடைபெற்றது.

"நாடாளுகிறார்களாம் நாடு! உதவாக் கரைகள்!" என்றனர் கொஞ்சம் கோபக்காரர்கள்.

"நம்மால் ஆகுமா?" என்று பெருமூச்சு விட்டனர் சிலர்.

தன்னம்பிக்கை யில்லாதவர்கள் — கோழைகள்.

# 3

"எப்படி முடியும் எதிரியின் ஆற்றலின் முன்பு ?" — இப்படி ஆருடம் கூறினர் சிலர். கையாலாகாதவர்கள். சுயநலக்காரர்கள்.

"முடியுமா, முடியாதா என்பதல்ல. தேவையா, தேவையில்லையா ? இந்த அக்கிரமம் தவிடு பொடியாக வேண்டாமா ? எத்தனை நாள் அதிகாரத்திற்குப் பணிவது ?" — இப்படிக் குரல் எழுந்தது.

அந்தக் குரல் — விடுதலை வீரரின் முழக்கம். எந்த நாட்டுக்கும் தேவையானது.

ஒரு திசையிலே இல்லை; திருநெல்வேலிச் சீமையிலேயிருந்து வந்தது; கொங்கு நாட்டு மண்ணிலே

யிருந்து எதிரொலித்தது. அது தெளிவாகக் கேட்கச் சில நாட்கள் பிடித்தன.

மைசூர் மண்டிலத்திலே யிருந்து ஒரு சூருவளி கிளம்பியது. அந்தக் காற்றில், "வெள்ளையருக்கு என்ன வேலை? வியாபாரிகள் வேந்தர் உரிமை கொண்டாடுகின்றனரா?" என்ற கேள்வி எதிரொலித்தது.

"எங்கிருந்து வந்தான்? எப்படிப் பெற முடிந்தது இவனால் இந்த ஆற்றலை!" என்று எவரும் திகைப் படைந்தனர்.

அணிதேர் புரவி ஐயாயிரத்துடன் சென்னையை நோக்கி, 'ஆங்கிலேயரை எதிர்த்து ஒருவன் கிளம்பி னான். படித்தறியாதவன். ஆனால் உலகப் போர் வீரர்களில் எவரிடமும் அவன் கற்றிருந்த ராணுவக் கலையில்லை. ஹைதர் அலி எனும் பெயராளன் மைசூர் மணிமகுடத்தைச் சூட்டிக் கொண்டான். அவனது ஆற்றல் முன் தென்னகம் மரியாதை செலுத்தக் காத்து நின்றது.

திண்டுக்கல் கோட்டைக்குக் காவல் நின்றான் இந்தக் காளை. மராட்டியரை மருட்சி கொள்ள செய் தான் என்று பலரும் பேசினர்.

ஆங்கிலேயருக்கு எதிராக முதன் முதல் போர்க் கொடி உயர்த்தினான். அவன் குதிரைகள் எழுப்பிய புழுதி தமிழகத்தையே மறைத்தது. செங்கம் கண வாயைத் தாண்டி, திருவண்ணாமலையில் ஆங்கிலப் படையை முற்றுகையிட்டான் அவன்.

ஆம்பூர்க் களத்தில் அவனது அசகாய சூரத்தனம் வெளிப்பட்டது. சென்னை எல்லையிலேயே நுழைக்

தான். பரங்கிமலையில் இருந்த ஐதரிடம் ஆங்கிலேயர் சமரசம் பேசினர்.

சின்னாட்களில் ஆற்காட்டை முற்றுகையிட்டான். தோல்விமுகம் கண்ட ஆங்கில தளபதி மன்ரோ, தனது காலாட் படையைக் காஞ்சிபுரம் குளத்தில் மூழ்கடித்து விட்டு வெறுங்கையோடு சென்னைக்கு வந்தான். தெருவிலுள்ளோரெல்லாம் கைகொட்டிச் சிரித்தனர்.

ஆற்காடு முற்றுகையில் வெற்றி கிட்டியது. நாட்டு மக்கள் வெள்ளையன் ஒழிவான் என்று ஐதரை வரவேற்றனர். சில ஆண்டுகள் உருண்டோடின.

கலிங்கத்துப் பரணியில் கேள்விப்படுகிறோமே, அதுபோல், கல்கத்தா நகரிலிருந்த ஹேஸ்டிங்ஸ், சர் அயர்கூட் எனும் தளகர்த்தனைக் கடல் மார்க்கமாகவும் வேறோர் தளபதியைத் தரைமார்க்கமாகவும் அனுப்பினான்.

வந்தவாசியில் போர்க்களம் அமைந்தது. சின்னாட்களில் சிதம்பரத்தைத் தாக்கினான். தில்லைக்கோவில் ஐதரின் ஆயுதக் கிடங்காக அமைந்தது. அந்த ராணுவ தளத்தை ஆங்கிலேயனால் அசைக்க முடியவில்லை. ஆனால் அதனைத் தொடர்ந்த பரங்கிப் பேட்டைப் போரில் ஐதர் பின்வாங்க நேரிட்டது.

பின்னர் பழவேற்காடு, புள்ளலூர், சோழிங்கபுரம் ஆகிய இடங்களில் கடும்போர் நடைபெற்றது. ஐதர் அழிந்துவிடுவானோ எனப் பலர் அஞ்சினர். ஆனால் ஐதர் அவனது எல்லையை விரித்தான். கடலூரைக் கைப்பற்றினான். ஆங்கிலேயரிடம் சிக்கிய நாகப்பட்டினத்தை விடுவிக்க உதவிபுரிந்தான்.

ஐதரின் திருநாமத்தை லண்டனும் பாரிசும் உச்சரித்தன. ஐரோப்பிய மண்டிலம் அவன் பெயரைக் கேட்டு நடு நடுங்கியது. வடக்கே வெள்ளையரை எதிர்த்துச் சிப்பாய்க் கலகம் என்ற பெயரிலே எதிர்ப்புக்கொடி உயர்த்துவதற்கு எழுபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாகப் போர்க்கோலம் பூண்ட ஐதர் கொடியவன் ஒருவனின் வஞ்சக எண்ணத்தால் அவனது இலட்சியம் நிறைவேறும் முன்பே கொலை செய்யப்பட்டான்.

அவன் மைந்தன் திப்பு மைசூர் அரியணை ஏறினன். தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆங்கிலேயருக்கு ஓர் அபாய அறிவிப்பு ஆனன்.

கோவை சேலம் வட்டங்கள் மைசூர் மண்டிலத்தில் அந்த நேரம் அடங்கியிருந்தன. கொங்கு நாட்டுக் காடு கரைகளும், தோட்டம் துரவுகளும், உழைப்பில் திறமையான உழவர் பெரு மக்களால் செழித்துக் குலுங்கின.

சோளக் கொல்லையில் கதிர்கள் விட்டிருந்தன. கவண் வீசி ஆலோலம் பாடினர், வேளாளக் குமரிகள். வெட்டுக்கிளிகள் விரண்டோடின. நாட்டுப் பயிரை அழிக்கப் புதியதாக வந்துள்ள வெட்டுக் கிளிகளை அவர்கள் ஆலோலத்தால் துரத்த முடியாது என்பதை அந்தப் பட்டிக் காட்டுப் பாவைகள் தெரிந்திருக்கவில்லை.

வேலியிலே ஒரு கடவு ஏற்பட்டால் தோட்டத்திற்கே ஆபத்து என்பதை அறிந்திருந்தனர். 'வேலியே பயிரை மேய்ந்தால் வெள்ளாமையின் விளைவு என்னகும்?' என்ற பழமொழியை அடிக்கடி பரிமாறிக் கொண்டே இருந்தனர்.

தோட்டத்துச் சாலைகளிலே பூசனிக் கொடி படர்ந்திருந்தது. மார்கழித் திங்களில் மலர்ந்த பூசனிப் பூக்கள் நிறத்தில் பொன்னைப் போட்டிக்கு அழைத்தன.

சாலைக் கூரையிலே நின்று சேவல் தினமும் வைகறையைக் கூவியது. கலப்பையுடன் காடு கரை சென்றனர் கட்டுமஸ்தான கொங்குநாட்டு இளை ஞர்கள். துளி காலடி சத்தம் கேட்டதால் நாய் குரைத்தது.

மாடுகளைப் பட்டியில் அடைக்குமுன் 'படல்' சரியாக இருக்கிறதா, இல்லாவிட்டால் ஓநாய் புகுந்து விடுமே என எச்சரிக்கையாய் இருந்தனர்.

ஆனைமலைக் காடுகளில் தேக்கு மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. அதனை ரம்பம் கொண்டு தச்சர்கள் அறுத்தனர். யானைகள் தேக்கை அடிவாரத்துக்குச் சேர்த்தன. அதுவே லண்டன் நகரம் போய் மேஜை யாகி, அதன்மீது தங்களது அடிமைச் சாசனம் எழுதப் பட இருந்தது என்பது அதனை அறுத்த தச்சனுக்குத் தெரியாது. தமிழகத்தின் அல்லோலகல்லோலத்தின் சாயல் அவ்வளவாக அவர்களுக்குப் படவில்லை. கொங்கு நாட்டுக் குடியானவன் மற்றவர்களைக் கவனிக்கவில்லை.

அந்த நேரத்தில்...காங்கேயத்திற்கும் ஈரோட் டிற்கும் இடையே உள்ள வட்டாரத்தில்......

# 4

நொய்யலாறு கிழக்கு நோக்கி ஓடிக் கொண்டுள்ளது. அதன் தென்கரையில் புதிய கோட்டை ஒன்று எழுந்தது. ஆனூர் என்பது அந்த இடத்தின் ஆரம்ப நாள் பெயர். அதுதான் காலமென்னும் கருழ் பட்டு நமக்குப் பழக்கப்பட்ட பழையகோட்டை என்ற திருப் பெயரிலே வழங்குகிறது.

பாண்டிய மன்னனின் படைத் தலைவன், கரியான் சர்க்கரை என்பான். சோழனுக்கும் பாண்டிய னுக்கும் நடந்த போரில் அவனது வீரதீரம் வெளிப் பட்டது. பாண்டிய மன்னன் அவனது ஆற்றலுக்கு அன்பளிப்பாக அவனைக் காங்கேய நாட்டு அதிபதி யாக்கினான். அவன் வழி வந்தோர் அந்த மண்ணுக்கு

மன்னராயினர். அவர் கொற்றம் நடந்தது; கொடி உயர்ந்தது.

எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்து அந்தக் குடியில் பிறந்தோர் கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த இருபத்து நான்கு நாட்டு வேளாளர்களுக்கும் தலைவராகப் பட்டம் சூட்டப் பெற்றனர். பட்டக்காரர் என்ற சிறப்புப் பெயரினைத் தங்கள் பெயருடன் இணைத்துக் கொண்டனர்.

ஐதர் அலி அரும்பு மீசை வாலிபனாக வளர்ந்து கொண்டிருந்த நேரம்; ஆனூர்க் கோட்டைக்குக் கொற்றவேல் சர்க்கரை மன்றாடியார் அரசரானார். தங்கமானவர் என்று ஊரார் பாராட்டினர்.

காங்கயத்தில் மண முடித்தார். ஆனால் கோட்டை அரசனின் வாரிசாக அவருக்குக் குழந்தை யில்லை. இரண்டாந்தாரமாக ஆரியப்பட்டியில் வேறோர் பெண் கொண்டார். அந்த அம்மைக்கும் சந்ததியில்லை.

கொற்றவேலர் மனம் வாடினார். இந்தக் குறையைப் போக்க உறவினர் முறையில் இரண்டு பிள்ளைகளை எடுத்து வளர்ப்புப் பிள்ளைகளாக்கிக் கொண்டார். மூத்தாளிடம் ஒருவனும் இளையாளிடம் மற்றவனும் வளர்ந்தனர். பெரியவனுக்குச் சேனாபதியென்றும் இளையவனுக்கு இரத்தினம் என்றும் பெயர் சூட்டினார்.

வயது வந்ததும் சேனாபதி ஆனூர் பட்டக்காரர் ஆனார். இரத்தின கவுண்டர் ஆனூருக்கு மேற்கேயுள்ள மேலப்பாளையம் என்ற ஊரில் பெருமையுடன் வாழ்ந்து வந்தார்.

மேலப்பாளையம் பெரிய வீடு! பெயருக்கேற்ற கம்பீரத்துடன் நின்றது. பேரூர் கோவிலில் காணப் படுவது போன்ற பெரிய பெரிய கல் தூண்கள். அதன்மீது பருத்தி மாரிளுல் வேயப்பட்ட அழகுப் பந்தல். கல்தூணைச் சுற்றி வளைந்து எழுந்துள்ள மல்லிகைக் கொடியின் மலர்கள் கம்மென்ற மணத்தை வாரி இறைத்தன. மல்லிகையின் வெண்மை நிறம் வீட்டாரின் துல்லிய மனத்தினைச் சுட்டிக் காட்டியது. மல்லிகைக் கொடியின் தண்டு, அதை நட்டு நெடுநாளாகிறது என்பதைத் தெளிவாகக் காட்டியது.

"இரத்தின கவுண்டர் ஆனூர் பட்டக்காரராக இல்லாவிட்டால் என்ன? அவருக்கு என்ன குறை? ஐந்துபேர் மக்கள்மார். யாரைத்தான் சோடை, சொட்டை சொல்ல முடியும்? குழந்தைசாமி — பெரிய இடத்துப் பிள்ளை போலவா தெரிகிறது? என்ன அடக்கம்! என்ன அமைதி! பிள்ளையென்ருல் அப்படி யல்லவா இருக்க வேண்டும்!"

"தீர்த்தகிரி — இந்தக் குடும்பத்திற்கே நந்தா விளக்காவான். அவனது நடை, நொடி, பாவனை அப்படித்தான் சொல்லுகிறது."

"பெரிய தம்பி, கிலேதார், குட்டிச்சாமி — அவர் களுக்குத் தீர்த்தகிரி என்ருல் மதிப்பு. அண்ணன் தம்பிகள் என்ருல் இவர்களிடம் பண்பு பயில வேண்டும்."

"மகள் மயிலாத்தாள்! என்ன குறை சொல்ல முடியும்? அழகுக்கேற்ற அருங்குணவதி. உலக புரத்தில் நல்ல சம்பந்தம் கிடைத்துள்ளது." — இப்படிப் பேசி மகிழ்ந்தனர் ஊரார்.

இரத்தின கவுண்டர் கண்ணை மூடினார். புதல்வர்களில் குழந்தைசாமிக்கு ஆரியப்பட்டி தாய் மாமன் இல்லத்தில் மணமாகியிருந்தது. குட்டிச்சாமிக்கு வேலூர் இடத்தில் பெண் எடுத்தார்கள். தீர்த்தகிரி, பெரிய தம்பி, கிலேதார் மூவரும் கலியாணமாகாத கட்டைகள். குழந்தைசாமியும் குட்டிச்சாமியும் தோட்டம் துரவுகளையும் காடு கரைகளையும் கவனித்து வந்தனர். 'விளைந்துள்ள பருத்தி எத்தனை பொதியாகும்? வேப்பமரத் தோட்டத்தில் புதிதாகக் கிணறு தோண்டினால் புகையிலை பயிரிடலாம். இந்த ஆண்டு காளைமாடுகளின் தீவனத்திற்குக் காட்டையே நம்பிப் பலன் இல்லை; கரூர் நஞ்சை வெளியில் வைக்கோல் வாங்கவேண்டும்' என்ற விவரங்களிலே கவலை.

தம்பிமார்கள் மூவரும் செல்லப் பிள்ளைகளாயினர். தீர்த்தகிரி, இரண்டு தம்பிகளுக்கும் தலைவனானான். கட்டுமஸ்தான தேகமும் கண்டோர் மயங்கும் காந்தக் கவர்ச்சியும், தீர்த்தகிரியை வெகு விரைவில் அனைவருக்கும் அறிமுகப்படுத்தின.

மேலப்பாளையம் மந்தைவெளி சகோதரர்களின் விளையாட்டு மைதானமாகியது. அவர்களின் குதிரையின் குளம்படிச் சப்தம் கேட்டால் தாய்மார்கள் விலகி நின்றனர். குமரிப் பெண்கள் பெருமூச்சு விட்டனர். கால்கட்டை விரலால் தரையில் கோடிழுத்தனர். கலியாண வயதுடைய பெண்ணின் பெற்றோர், மேலப்பாளையம் பெரியவீட்டு சம்பந்தம் கிட்டுமானால், என்ன காணிக்கை செலுத்தவும் தயாராயினர்.

**அ**ன்று ஆடிப் பதினெட்டு. பவானி கூடுதுறையில் ஒரே மகளிர் கூட்டம். காவிரியும் பவானியும் கலக்கும்

கட்டத்தில் காவிரியில் கலக்குவதற்காகக் கொங்கு நாட்டுக் குமரிகள் 'முளைப்பாரி' கொண்டு வந்திருந்தனர். நவதானியங்கள் முளை விட்ட தட்டுகளை அவர்கள் கரங்களிலே ஏந்தி நகரத் தெருக்களிலே உற்சாக சிந்து பாடி வந்தது அலாதியாக இருந்தது.

வானம் பொத்துக் கொண்டிருந்ததால் காவிரியின் பிரவாஹம் பேரிரைச்சலுடன் சென்றது. பவானியும் அதனுடன் போட்டியிட்டது. இன்னும் சில மணி நேரங்களில் பவானி நகரம் மூழ்கிவிடுமோ என்று அஞ்சினர்.

கூடுதுறையில் ஒரே கும்மியும் கொம்மாளமுமாய் இருந்தன. புத்தாடை புனைந்து, நறசாந்து பூசி, மலர்க்காடெனத் தக்க பூக்களைக் கூந்தலில் சூடி அழகுக்கு அழகு சேர்த்தனர் ஆரணங்குகள்.

திடீரென்று கரையில் ஒரு குதிரை வந்து நின்றது. அதன் மீதிருந்த வாலிபன் மேடையைக் கடந்து எதிர்க்கரையை நோக்கினான்.

'இந்தப் பெருவெள்ளத்தில் எந்தப் பைத்தியக் காரன் காவிரியில் இறங்குவான்?' — இப்படி யாரும் சொல்லவில்லை. ஆனால் அவன் தோற்றத்தைக் கண்டு நினைத்தனர்; எல்லாப் பாறைகளையும் மறைத்துக் கொண்டு காவிரி சீறிக்கொண்டிருந்தது.

திடீரென்று தண்ணீரில் குதித்தான் அந்த வாலிபன். கும்மியும் கொம்மாளமும் நின்றன. பவானி காவிரியின் பேரிரைச்சலைத் தவிர வேறு சப்தம் இல்லை.

"என்ன ஆவானோ! எதிர்க்கரை சேரவா போகிறான்? யார் இந்தத் துடுக்குக்கார இளைஞன்?

இவனைப் பெற்ற அன்னை எவ்வளவு வருந்துவார்கள் !'' — தாய்மார்களின் கருணைப் பேச்சு.

வாலிபன் காவிரியின் நடுவே தத்தளித்தான். சுழலில் அவன் மூழ்கிவிட்டான் என்று கருதும் நேரத்தில் அவன் தலை வேறோர் இடத்தில் தெரிவதுமாக அரைமணி நேரம் நடந்தது. பயங்கரமான சோக நாடகத்தைப் பார்க்கும் உணர்வு அவர்களுக்கு இருந்தது. கடைசியாகக் கைகள் ஓய்ந்து, பாறை மோதியதால் தலையில் காயத்துடன் கரை சேர்ந்தான்.

"வேறு யாரும் இவ்வளவு நேரம் நீந்தியிருக்க மாட்டார்கள். யார் இவன் ?'' என்று ஏககாலத்தில் குரல் எழுந்தது.

தெற்கே போய் வந்த ஒருவன் சொன்னான், " இவர்தான் ஆனூர் குடும்பத்தார் — மேலப்பாளையம் பெரிய வீட்டுப் பிள்ளை — தீர்த்தகிரி '' என்று.

ஊமையாக நின்றவர் உதவிக்கு ஓடோடி வந்தனர்.

" ஆனூர்க் கோட்டை ஐதருக்கு இனி அடங்கி நடக்காது. கொங்கு நாட்டானின் கொடி இனி கோட்டை கொத்தளமெங்கும் பறக்கும். வீரன் தோன்றி விட்டான். விடிவெள்ளி உதயமாகி விட்டது. இருள் கலைகிறது !'' என்று சகலரும் பேசிக் கொண்டனர்.

குறி வைத்தான் தீர்த்தகிரி. ஏரி கரையிலேயிருந்த நாரைக் கூட்டம் பொல பொலவெனக் கீழே வீழ்ந்தது. 'இன்று காலை சென்னிமலைப் பள்ளத்தாக்கிலே பார்த்தோம்', 'இன்று பகல் தாராபுரம் அருகே அமராவதிக்கரையிலே புரவியுடன் நின்று கொண்டிருந்தான்', 'மாலை கருமலைச் சாரலிலே பார்த்தேன்' என்று பேசிக் கொண்டனர்.

கொங்கு நாட்டின் வடக்கு எல்லையிலே கும்பினி யாருக்கும் மைசூரானுக்கும் கடும்போர் நடந்து கொண்டிருந்தது. கோவைக் கோட்டத்தின் மீது மைசூரின் பிடிப்பு இருந்தது. சங்ககிரிக் கோட்டை, சத்தியமங்கலம் கோட்டை ஆகியவை மைசூர் அரசின் கேந்திரங்கள். கோவைக் கோட்டத்தின் தலைமை அதிகாரி சங்ககிரிக் கோட்டையில் கொலு வீற்றிருந்தான்.

ஒரு நாள் சிவன் மலையருகே தீர்த்தகிரி குதிரை மீது சென்று கொண்டிருந்தான். எதிரே ஒரு குதிரை வீரன் குறுக்கிட்டான். அவன் கையிலே பணமுட்டை இருந்தது.

"நீ யார் ?" என்றான் தீர்த்தகிரி.

"வரி வசூலிப்போன்" என்றான் வழிப்போக்கன்.

"யாருக்கு ?"—இது தீர்த்தகிரியின் கேள்வி.

"இதுகூடத் தெரியாதா, தம்பி! கோவைக் கோட்டம் மைசூர் அரசாணைக்குக் கட்டுப்பட்டது. சங்ககிரிக் கோட்டையில் மைசூர் மன்னனின் அதிகாரி இருக்கிறார். பார்த்தால் விவரம் புரிந்தவன்போல் தோன்றுகிறாய்; இதுகூடத் தெரியாதா! நேரமாகிறது, கொஞ்சம் விலகி நில்" என்றான் குதிரைவீரன்.

"வரி வசூலிப்போனே! நான் கூறும் விவரத்தைத் தெரிந்துகொள். கொங்குநாட்டில் ஆண்மையே பட்டு விட்டது என்று மைசூர் மன்னனின் எண்ணமா? கோழைகளின் கூடாரமல்ல கோவைக் கோட்டம். குமுறும் உள்ளங்கள் இங்கு உண்டு என்பதைத் தெரிந்துகொள். உன் மன்னனிடமும் தெரியப்படுத்து. அது கிடக்கட்டும்; பணமுடிப்புப் பையை இங்கே கொடு" என்றான்.

குதிரை வீரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. வியர்த்துக் கொட்டியது. எவ்வளவோ முறை அந்தப் பாதையில் பணமுடிப்புடன் சென்றுள்ளான். எவரும் இப்படிப்பட்ட கேள்விக் கணை தொடுத்ததில்லை. எனவே பயத்தால் பேசினுன்.

"தம்பி! நான் ஊழியம் செய்து வயிறு வளர்க்கும் பணியாள். என்னை மிரட்டி என்ன செய்வது? நான் வெறுங்கையோடு போனுல் சும்மா விடுவார்களா? பெண்டு பிள்ளைக்காரன். என்னை விட்டுவிடு. நேரமாகிறது. வருகிறேன்" என்றுன்.

"கொங்குநாட்டு உழவர் விதைக்கிருர்கள்; அறுக் கிருர்கள். மைசூருக்கு வரிப்பணம் கொட்டியழுவது என்ன நியாயம்? எனக்குத் தெரிந்து ஒரு வெள்ளிப் பணமும் போவதை நான் அனுமதிக்கமாட்டேன்" என்றுன் தீர்த்தகிரி. தொடர்ந்து "என்னை யாரென்று கேட்கிருயா? சொல்கிறேன் கேள்" என்று சொல்ல லானுன்.

"சென்னி மலைக்கும் சிவன் மலைக்கும் நடுவில் உள்ள சின்னமலை வாங்கிக்கொண்டதாகச் சொல்" என்றுன்.

வெறுங்கையோடு குதிரைவீரன் சங்ககிரிக் கோட்டை சென்றுன். விவரம் கேட்ட அதிகாரியின் கண்களில் கோபக்கனல் வீசியது.

அவமானம் நடந்த திசையை நோக்கிச் சிறுபடை கிளம்பியது.

தீர்த்தகிரியிடம் அதை எதிர்க்கும் ஆற்றல் வாய்ந்த படை இல்லை. சங்ககிரிக் கோட்டையான் சேனையை எதிர்த்துத் தீர்த்தகிரிக்குத் துணைபுரிய வேருேர் படையும் இதே நேரத்தில் வந்தது. யாரு டையது அந்தப் படை?

# 5

"சென்னி மலைக்கும் சிவன் மலைக்கும் நடுவி லுள்ள சின்னமலை வாங்கிக் கொண்டதாகச் சொல்!"

இந்த வாசகங்கள் கொங்கு நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவி விட்டன.

வேலா மரத்தடியிலே குழுமியிருந்த மாட்டுக்காரச் சிறுவர்கள் பேசிக்கொண்டார்கள்.

விறகொடிக்கும் வயோதிகத் தாய்மார்கள் கிசுகிசு வென்று பேசிக் கொண்டார்கள்.

கவலையிறைக்கும் கட்டிளைஞனும், களத்து மேட்டில் தாம்படித்த வாலிபனும் இந்தச் சம்பவத் தையே சிந்தித்துக்கொண்டிருந்தார்கள்,

ஊர்க் கிணறுகளிலே நீரெடுத்து வரும் குமரிப் பெண்களின் வளைகுலுங்கும் கரங்கள் ஒலித்த நேரத்தில், தண்ணீர்த் தடத்தில், "சின்னமலை வாங்கிக் கொண்டதாகச் சொல் என்று கூறினராமேடி! ஊரிலே இத்தனை ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள்; எவருக்கு வந்ததடி அந்த தைரியம்!" என்றாள் ஒருத்தி.

"எனக்கு அப்போதே தெரியும். அன்றைக்குத் தீர்த்தகிரி தடத்தில் குதிரையின்மீது போகும்போது விழுங்கிவிடுபவள்போல் பார்த்துக்கொண்டிருந்தாள், திருடி! இப்போது புரிந்துவிட்டது. தீர்த்தகிரியைப் புகழ்வதிலே அவளுக்கு எவ்வளவு துடிப்பு!" என்று கிண்டல் செய்தாள் வேறோர் குறும்புக்காரி.

"சங்ககிரிக் கோட்டையானின் ஆளிடம் என்ன இருந்தாலும் தம்பி இவ்வளவு வேகமாக நடந்து கொண்டிருக்கக் கூடாது. எங்களுக்கெல்லாம் தெரியாதா என்ன? மைசூரானுக்குக் கட்டுப்பட்டு நடப்பது எங்களுக்கு ஒன்றும் கரும்புப் பாகல்ல! என்ன செய்வது? ஆள், அம்பு, கோட்டை, கொத்தளம் அவனிடம்! அரண்மனைக்கு எதிர் மனையா? என்ன நேரப் போகிறதோ! எந்தத் தோட்டத்தின் பயிர்களை மாடுகளை விரட்டிப் பாழ் படுத்தப்போகிறார்களோ! தீர்த்தகிரியோடவா முடிந்து விடும்? யார் யாரைத் தீர்த்துக் கட்டப்போகிறதோ! நாசம் தலைவாசலிலே நிற்கிறது. நாலுபேர் போல நாமும் போனாலென்ன என்று இருந்துவிட்டிருக்கக் கூடாதா? ஊராருக்கு இல்லாத அக்கறை இவனுக்கு மட்டும் என்ன வந்துவிட்டது! என்ன செய்வது! தினை விதைத்தவர் சோளத்தையா அறுக்க

முடியும்?'' என்று வயோதிகத்தையும், சலிப்பையும் குழைத்துப் பேசினர்கள், சுடுகாட்டில் ஒரு காலேயும் வீட்டுத் திண்ணையில் ஒரு காலேயும் வைத்துக் கொண்டிருந்த நரைத்த கிழவர்கள்.

நொய்யலாற்றங்கரை மேட்டிலே குதிரையை நிறுத்திவிட்டு வேப்பங்குச்சியால் பல் துலக்கிக்கொண் டிருந்தான் தீர்த்தகிரி.

நுரைதள்ள, குதிரையைவிட வேகமாக ஓடி வந்தான் ஒரு சிறுவன். தீர்த்தகிரி முன்ஞலே விழுந்தான். மேல் மூச்சு, கீழ்மூச்சு வாங்கியது. "அண்ணு! வடக்கேயிருந்து பட்டாளம் வருகிறது. பனங்குலே வெட்டிக்கொண்டிருந்தேன். பார்த்ததும் ஓடோடி வந்தேன்'' என்று சொல்லிவிட்டு மீண்டும் மூச்சு வாங்கினன்.

தீர்த்தகிரி குதிரையில் ஏறி விரைந்தான். உடன் பிறந்தோர் தயாராயினர். ஆற்றுக்கு வட கரையிலேயே சங்ககிரிக் கோட்டையானின் படையைச் சந்தித்தான்! எனினும் தீர்த்தகிரிக்குத் துணைபுரியக் கொஞ்சம் ஆட்கள் தான் இருந்தனர்.

தீர்த்தகிரியையும் அவன் தோழர்களேயும் கைதாக்கிச் செல்லத்தான் சங்ககிரியானின் சேனே வந்திருந்தது.

'இன்னும் சில மணி நேரத்தில் சின்னமலே ஓய்ந்து விடுவான். சங்ககிரிக் கோட்டை அதிகாரி முன்பு இந்தக் 'கூண்டுப்புலியை' நிறுத்துவோம்' என்று எக்காளம் கொண்டது எதிரிப்படை. தீர்த்த கிரிக்கும் நிலேமை விளங்கிவிட்டது.

சூரியன் நாலு பனே உயரத்திற்குமேல் போய் விட்டான். திடீரென்று களத்தில் ஒரு மாறுதல்,

சங்ககிரிக்காரனுக்கும் புரியவில்லை; தீர்த்தகிரிக்கும் வியப்பாக இருந்தது. நூறுபேர் கொண்ட ஒரு படை களத்தில் நுழைந்தது.

அந்த ஆட்கள் தீர்த்தகிரி பக்கம் போரிட்டனர். சங்ககிரிப் படையின் அணி குலைய ஆரம்பித்தது. தீர்த்தகிரியைக் கைது செய்ய முடியாது என்பது தெளிவாகத் தெரிந்து விட்டது. இன்னும் சில மணி நேரம் கழிந்தால் நொய்யல் மணல் படுகையில் அனைத்தைப் பிணங்களாகக் கழுகும், காகமும் கொத்தித் தின்னும் நிலை பிறந்துவிடும் என்பதைப் படையை நடத்தி வந்த தலைவன் ஊகித்து விட்டான். படை பின்னோக்கிப் பறந்தது.

தீர்த்தகிரியும் பெரிய தம்பியும் கிலேதாரும் உதவி புரிந்த ஆட்களை நன்றியறிதலோடு பார்த்தனர்.

"நீங்கள் இல்லாவிட்டால் கொங்குநாட்டு மண்ணுக்கே அபகீர்த்தி சூழ்ந்திருக்கும். உங்கள் உதவி காலத்தினால் பெரியது; எதிர்பாராதது; கேட்டுப் பெறாதது! எங்கிருந்து வந்தீர்கள்? ஏன் உதவினீர்கள்? எப்படித் தெரியும் இந்த ஆபத்து?" என்று மளமளவென்று அடுக்கிக்கொண்டே போனான் தீர்த்தகிரி.

சுடர் விடும் கண்களும், தொங்கிக் கொண்டிருந்த அடர்ந்த கேசமுமுடைய சுந்தரமான வாலிபன் ஒருவன் ஆட்களைக் கிழித்துக் கொண்டுவந்து சொன்னான்.

"அண்ணா! நாங்கள் சென்னிமலை முத்து வேலப்ப கவுண்டரின் ஆட்கள். எங்கள் 'அய்யா' நெடு நாட்களாகவே உங்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகிறார். உங்களால் கொங்குமண்டலம் புதிய புகழ் பெறப் போகிறது என்று அடிக்கடி

கூறுவார். அப்போதெல்லாம் அவர் கண்களிலே ஒரு புதிய ஒளி மின்னும். 'மேலப்பாளையம் தம்பி தான் நம்பிக்கை நட்சத்திரம்' என்பார். சங்ககிரிக் கோட்டை ஆளிடம் வரிப்பணத்தை எடுத்துக் கொண்டீர்கள் என்ற சேதி கேட்டவுடன், 'செந்தேன் வார்த்ததுபோல் இருக்கிறது' என்று துள்ளிக் குதித்தார். 'வேங்கைக் காட்டில் இனி நரியாட்சிக்கு இடமில்லை' என்று கர்ஜித்தார். 'தம்பிக்கு எந்த நேரமும் ஆபத்து நேரலாம். நமது பணியும் சிறு உதவியாய் இருக்கும். ஆயத்தமாய் இருங்கள்' என்று எங்களை எச்சரித்தார். அவையனைத்தும் நடந்தன. சங்ககிரிப் படை தங்கள்மீது பாயப் புறப் பட்டுவிட்டது என்று தகவல் தெரிந்தது. புயலென வந்தோம். அய்யாவின் ஆணையை நிறைவேற்றியதில் எங்களுக்கு ஆனந்தம். மிகவும் புகழ்ந்து விட்டீர்கள். நாங்கள் வருகிறோம். அய்யாவிடம் சென்று விவரம் கூறவேண்டும்'' என்றான்.

''நல்லது நண்பர்களே! நாளை நண்பகல் நானே வந்து முத்துவேலப்பரிடம் நேரில் நன்றி கூறுகிறேன்'' என்றான் தீர்த்தகிரி.

**செ**ன்னிமலை முத்துவேலப்ப கவுண்டரின் மாளிகை அன்று புதிய சோபை பெற்று விளங்கியது. பெண் பார்க்கவரும் மாப்பிள்ளையை வரவேற்கும் பரபரப்புத் தென்பட்டது.

மாளிகை கூடத்தில் தான் வளர்க்கும் வண்ணப் புறாக்களுக்குத் தீனி இறைத்துக் கொண்டிருந்தாள் முத்துவேலப்பரின் ஒரே செல்வமகள் வள்ளிநாயகி.

''என்னம்மா, வள்ளி! விருந்தினர்கள் வரும் நேரமாயிற்று. தலைவாரி நமது தோட்டத்து ரோஜாவில்

இரண்டு சூடிக்கொண்டால் எவ்வளவு அலங்காரமாய் இருக்கும் !" என்றார் முத்து வேலப்பர்.

"என்னப்பா ! நான் அழகாய் இல்லை என்கிறீர்களா ?"

"அப்பாவிப் பெண்ணம்மா நீ ! யார் உனக்கு அழகில்லை என்று சொல்வார்கள் ? நீ சூடும் ரோஜா மலருக்கு வாயிருந்தால், 'என்ன இருந்தாலும் வள்ளியின் வதனத்தின் வண்ணம் எனக்கு இல்லையே !' என்று அரற்றி வருந்தும். அசைந்தாடும் கொடி முல்லை தினந்தோறும் உன் பல் வரிசையின் வெண்மையை 'இரவல்' கேட்கிறது மகளே ! அதுவல்லம்மா, நான் சொல்வது. உலக நடைமுறைப்படி இல்லாவிட்டால் நம்மைப்பற்றி என்ன நினைத்துக் கொள்வார்கள் ?"

"என்னப்பா ! விருந்தினர் உங்களைப் பார்க்க வருகிறாரா? என்னை விலைபேச வருகிறாரா ?"

"அப்படியெல்லாம் சொல்லாதேம்மா ! ஆனூர் குடும்ப சம்பந்தமென்றால் அது கிடைக்காதா என்று அத்தனை ஊர் வேளாளர்களும் தவம் கிடக்கிறார்கள். அதிர்ஷ்டம் உன்னை அணைக்க வரும்போது. . ...."

"அப்பா ! என் தந்தை ஆபத்பாந்தவர், அனாதை ரட்சகர், கருணாமூர்த்தி, கைம்மாறு எதிர்பார்க்காதவர் என்றெல்லாம் எண்ணியிருந்தேன். தீர்த்தகிரிக்கு உதவி போனதில் மகளின் திருமணம் தொக்கியிருக்கிறது. அப்படித்தானே அப்பா ? எனக்குத் திருமணமே பிடிக்கவில்லை. அதிலும் பெரிய இடத்து சம்பந்தமென்றால் வேண்டவே வேண்டாம். ஆனூரிலேயே வேறு சாதாரண குடும்பம் இல்லையா அப்பா ! காங்கயம் கால்நடைச் சந்தையில், மயிலை, செவலை,

நிறம் பார்த்து, குறியிருக்கிறதா, கோடு இருக்கிறதா, கொம்பு சீவியிருக்கிறதா என்று மாடுகளைக் காண்பிப்பதுபோல் உங்கள் மகளையும் ஆக்குகிறீர்கள் !'' என்றாள் மகள்.

''போக்கிரிப் பெண்ணே ! என் வாழ்வு சுகம் எல்லாம் உன்........!'' என்றார் தந்தை.

சென்னிமலை நெடுஞ்சாலையில் குதிரையின் குளம்புச் சத்தம் கேட்டது.

''சின்னமலை, சின்னமலை !'' என்ற சொற்களை எல்லா வாய்களும் முணுமுணுத்தன.

தலைவாயிலிலே முத்துவேலப்பர் நின்றார். தீர்த்தகிரி குதிரையிலேயிருந்து இறங்கினான்.

''சின்னமலை !'' என்று வாஞ்சை ததும்ப அழைத்தார் முத்துவேலப்பர்.

''நீங்கள்கூடச் சின்னமலை என்று அழைக்கிறீர்கள் !''

''வேறு யார் அழைப்பது தம்பி ? இன்றுமுதல் சின்னமலை என்பது என் செல்லப் பெயராக, செல்வப் பெயராக வழங்கட்டும்'' என்றார் அவர்.

தீர்த்தகிரி புன்னகை புரிந்தான். கூடத்திற்குள் நுழையும்போது தீர்த்தகிரியின் 'மேயும்' கண்கள் கோவில் மதிற்சுவரிலே யிருந்து கோபுர அறைக்குத் தாவும் தோகை மயில்போல ஒரு துடியிடை உள்ளே ஓடி மறைவதைப் பார்த்தன. மீண்டும் அவள் தலை காட்டவே யில்லை.

உணவு முடிந்தது. சூலூர் வெற்றிலையில் சுண்ணும்பைத் தடவிக்கொண்டே முத்துவேலப்பர்

பேச்சை எப்படித் துவங்குவது என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

"நீங்கள் செய்த கைம்மாறுக்கு நான் கிரம்ப நன்றியுடையவன்!"

"கைம்மாறு அல்ல சின்னமலே! என் கடமையை நான் செய்தேன்; அவ்வளவுதான். இருந்தாலும் ஒரே ஒரு ஆசை."

"தயக்கமில்லாமல் சொல்லுங்கள் பெரியவரே! சின்னமலே வாக்குறுதியை என்றும் நிறைவேற்றியே தீருவான்."

"பெண்ணைப் பெற்றவர் தயங்காமல் இருக்க முடியுமா? உங்கள் குடும்பத்தில் திருமணத் தொடர்பு கொள்ளவேண்டும் என்பது எனது நெடுநாளைய ஆசை. குழந்தை கொடுத்து வைத்தவளாய் இருக்க வேண்டும்."

"இதற்கா இவ்வளவு தடுமாற்றம்? உங்களைப் போன்ற நற்பண்பாளர்களின் இல்லங்களில் எங்களுக்கு உறவு முறை கிடைக்க வேண்டுமே? ஊர் சென்றதும் தம்பியைக் கலந்து கொண்டு விரைவில் பதில் அனுப்புகிறேன்."

குதிரையிலே சென்று கொண்டிருந்த சின்னமலேக்கு எதிர் காலத்தில் நடக்க இருக்கும் திருமணத்தில் மனம் லயித்திருந்தது. 'நாதஸ்வரத்துக்கு யாரை ஏற்பாடு செய்வது? புரவி ஆட்டம் வைக்கலாமா? காளைமாட்டு ஜதைகளின் ஊர்வலத்தைச் சேர்க்கலாமா?' என்பன போன்ற நூறு அம்சங்களை யோசித்தான்.

"பெரிய தம்பி ! முக்கிய சேதியுடன் வந்துள்ளேன். எனது வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும்."

"சொல்லுங்கள் அண்ணா ! புலிப் பாலா ? புரவிக் கொம்பா ? அலைகடலுக்கப்பால் வையகத்தின் கடைசிக் கோடிக்குப் போக வேண்டுமா ? அண்ணன் ஆணை எதுவானாலும் நிறைவேற்றியே தீருவான் தம்பி !"

"வாக்கு அளித்து வந்துள்ளேன். முத்து வேலப்பரின் மகளை நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும்."

"அண்ணா ! அது ஒன்றை மட்டும் சொல்லாதீர்கள். திருமணம் — நான் திருமணம் செய்து கொள்வதாய் இல்லை."

எதற்கும் மறுமொழி பேசாத பெரிய தம்பி தடை சொல்லியது சின்னமலைக்கு ஆத்திரத்தைக் கிளறியது. ஒன்றும் பதில் பேசவில்லை. நேராகப் படுக்கை யறைக்குப் போனான். படுத்துப் புரண்டான். கண்கள் உறங்கவில்லை.

வெளியே மையிருட்டு. அவனது உள்ளமும் அப்படித்தான் இருந்தது. திடீரென்று சோவென மழை பெய்தது. அது அவனது ஊமை அழுகைக்கு ஒத்திகை போல் தோன்றியது.

நள்ளிரவு. வேலையாள் ஓடிவந்தான். சின்ன மலையிடம் ஓலையொன்றைக் கொடுத்தான். அது என்ன ஓலை ?

# 6

ஓலையை வாங்கிச் சின்னமலை படுக்கையிலே போட்டான். அது தலையணைக்கு அருகே கிடந்தது. அதனைப் படிக்க வேண்டுமென்ற பரபரப்பே அவனுக்கு ஏற்படவில்லை. மூலையிலே குத்து விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. எண்ணெய் வற்றி விட்டதால் திரி கருகுவது தெரிந்தது. 'மேலப் பாளையம் குடும்பத்தின் நிலையும் இப்படி அணையும் தீபமாக மாறிவிடுமோ!' என்ற பீதி அவனைப் பிடித்துக் கொண்டது.

அண்ணன் தம்பிகள் ஐவரென்றாலும் தம்பி மார்கள் இருவரும் சின்னமலையிடம் உயிரையே வைத்திருந்தனர். குழந்தைசாமியும், குட்டிச்சாமியும்

தோட்டம் துரவுகளைக் கவனித்ததால் மாடு கன்றுகள் சரியாக உள்ளனவா, வேளாண்மையில் என்ன மிச்சம் என்ற கணக்குப் பார்ப்பதிலேயே காலங்கழித்தனர்.

ஆனால் பெரிய தம்பியும் கிலேதாரும் சின்னமலை கீறிய கோட்டைத் தாண்டினதில்லை. அவனது விருப் பங்களை நிறைவேற்றும் இயந்திரங்களாக மாறியிருந் தனர். வேறு வேறு உடல்களானாலும் ஒரே உயிர்தான் என்று ஊரார் அவர்கள் ஒற்றுமையைப் பாராட்டியது வெறும் புகழ்ச்சி மொழியன்று; உண்மைப் படப்பிடிப் பாகவே இருந்தது.

ஒரு சமயம் சின்னமலை அதிக நேரம் காவிரி ஆற்றில் நீந்தி விளையாடிக்கொண் டிருந்ததால் காய்ச்சல் கண்டது. வழக்கம்போல், 'என்ன செய்து விடும் ?' என்று அவன் அலட்சியமாக இருந்தான். ஆனால் காய்ச்சல் அவனை விடுவதாயில்லை. இருபது நாட்கள் படுத்த படுக்கையாக்கிவிட்டது.

அந்த இருபது நாட்களும் இரவு, பகல் பாராது, கண் துஞ்சாது, உணவு கொள்ளாது தாயைவிடப் பரிவாக நடந்துகொண்ட தம்பிமார்களின் அன்பைச் சின்னமலை நினைக்கும்போதெல்லாம் அவனை யறியாமலே புளகாங்கிதம் அடைந்தான். இந்தத் தம்பிமார்கள் இருக்கும்போது எந்தப் படைக்கும் அஞ்ச வேண்டியதில்லை என்று இறுமாப்புக்கொண் டிருந்தான்.

சின்னமலையைக் குறித்துக் கொஞ்சம் தரக்குறை வாகப் பேசிய பொறுப்பில்லாத இருவர் பெரிய தம்பி யிடம் மாட்டிக் கொண்டனர். அவர்களுக்கு அவன் நடத்திக் காட்டிய தண்டனையை அவர்கள் வாழ்நாள் முழுதும் மறந்திருக்க மாட்டார்கள். "யாகாவராயினும்

நாகாக்க" என்ற குறளின் பெருமை, பெரிய தம்பியால் ஒருபடி உயர்ந்தது. இவைகளெல்லாம் சின்னமலே யின் மனத்திரையில் ஓடியபோது அவனுக்குக் குழப்பமாயிருந்தது.

"பெரிய தம்பி, அப்படிப் பிடிவாதமாகச் சொல்வான் என்று நான் கருதவேயில்லே. எவ்வளவு வாஞ்சையுடன் கூறினேன். கொஞ்சம்கூட மரியாதை இல்லே. இவ்வளவு நாள் என்னிடம் காட்டிய பரிவெல்லாம் வெறும் வேஷம்! ஓலே அனுப்பி இருக்கிருன். ஏதாவது நொண்டிச் சமாதானம் இருக்கும். என்னுடைய நொந்த உள்ளத்திற்கு மருந்து கிடைக்கவா போகிறது?" என்று தனக்குத் தானே பேசிக் கொண்டான். இருந்தாலும் ஓலேயைப் படித்துத்தான் விடுவோமே என்ற ஆவல் உள்ளத்தில் எங்கோ ஓர் இடத்திலிருந்து தூண்டியது. விளக்கைத் தூண்டினன். ஓலேயைப் படிக்க ஆரம்பித்தான்.

"அன்பு நிறைந்த அண்ணனே! பிழை பொறுக்க வேண்டும். தந்தையினும் மேலானவர் நீங்கள். உங்கள் சிறு சொல்லிற்கும் விரோதமாக நடந்தவனல்ல. நான் கண்ணீர் வடித்துக் கொண்டுள்ளேன். அருள் கூர்ந்து மன்னியுங்கள், அண்ணு!

"தமையனும் தம்பியும் தர்க்கிக்கக் கூடிய விஷய மல்ல. ஒரு தையலிடம் என் மனத்தைப் பறிகொடுத்து விட்டேன், அண்ணு.

"'தம்பி! பழனிமலே மீது ஒரு கண் வை. உன் பக்தி பெருக வேண்டுமென்பதற்கல்ல; இப்போதெல் லாம் நம் பக்கத்து மக்களுக்கு முருகபக்தி அதிகமாகி விட்டது. கொங்குநாட்டு வேளாள வாலிபர்கள் கும்பல் கும்பலாகக் கூடுகிருர்கள். அவர்களேத் தேசபக்தி

கொள்ளச் செய்ய, நம் வரிசையில் சேர்க்க, சந்திப்பதற்கு அருமையான இடம். சந்தர்ப்பங்களைத் தேடிப் பெற வேண்டும். சந்தர்ப்பங்கள் நமக்காக ஓடிவாரா.

" 'கார்த்திகை தீபம், மார்கழி ஆதிரை, தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்திரம், அக்கினி நட்சத்திரம்— எதையும் விட்டு விடாதே! ஆண்டு முழுதும் கிரி சுற்றுபவர்களும், மலைமீது ஏறி இறங்குபவர்களும் இருக்கிறார்கள். குமர வேலரின் அருளை நினைத்து அவர்கள் அங்கே மொய்க்கிறார்கள். நீ போய் வருவதால் கொங்குநாட்டுக் குமரவேலர்கள் சிலராவது நிச்சயம் கிடைப்பார்கள்' என்று சொல்லி வைத்தீர்கள்.

"கடந்த கார்த்திகை தீபத்தன்று பழனிக்குக் கிளம்பினேன். புறப்படும்போதே இருட்டிவிட்டது. தாராபுரம் அருகே அமராவதிக்கரையில் சென்று கொண்டிருந்த நான் வழிதவறிக் கொழுமம் போய்ச் சேர்ந்து விட்டேன். பிறகு திரும்பிப் பழனியை நோக்கினேன். நான் பழனியைச் சேரும்போது அர்த்தஜாம பூசைக்கு அரைநாழிகைதான் இருந்தது.

"ஊர் முழுவதும் ஒளி மண்டலமாய்க் காட்சி யளித்தது. வானத்து நட்சத்திரங்களெல்லாம் பூலோகத்திற்கு வந்து பழனி உப்பரிகைகளில் வாசம் செய்ய ஆரம்பித்துவிட்டனவோ என்ற சந்தேகம் எழுந்தது.

"எல்லா வீட்டு மாடங்களிலும், கூடங்களிலும் சரவிளக்கு வரிசை ஜகஜ்ஜோதியாய் மின்னின. பல வீட்டுத் திண்ணைகளிலும் வாயிற்படிகளிலும் தீபம் மினுக் மினுக்கென எரிந்து கொண்டிருந்தது. வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் தூங்கியும் அவை தூங்கவில்லை.

"கோவில் மணியடித்தது. அர்த்தஜாம பூஜை ஆரம்பமாகி விட்டது என்று புரிந்து கொண்டேன். அந்த நள்ளிரவிலும் முருக தரிசனத்துக்காக மலையுச்சியிலே பக்தர்கள் பரவசத்துடன் காத்துக் கிடந்தனர். திருவாவினன் குடியிலுள்ள வேளாளர் மடத்தை நோக்கிக் குதிரை விரைந்துகொண்டிருந்தது. என் கண்களில் நித்திரையும் உடலில் அயர்வும் நெளிந்தன. எப்போது போய் ஓய்வெடுப்போம் என்று இருந்தது.

"வேளாளர் மடத்தின் மாடிச் சுவர் முழுவதும் வரிசை வரிசையாகச் சுட்டிகள் எரிந்தன. அந்த வரிசைக்குத் தலைமை வகிப்பதுபோல் ஆயிரம் சூரிய பிரகாசத்துடன் ஓர் எழில் மங்கை அங்கிருந்து தெருவை நோக்கிக் கொண்டிருந்தாள். 'அவள் கண்களிலுள்ள ஒளி அதிகச் சுடரா, மேனியின் பளபளப்பு அதிக ஜொலிப்பா, கார்த்திகை தீபத்தின் ஒளி நாக்குகள் அதிக வெளிச்சமா?' என்று வித்தியாசம் சொல்ல முடியாதபடி ஒன்றை யொன்று போட்டியிட்டது.

"ஒரு கண நேரத்தில் கண்ட காட்சிகளை இப்படி விரித்துக் கூறிக் கொண்டுள்ளேன். மடத்தைத் தாண்டி அடுத்த வாயிலில் குதிரையைக் கட்டுவதற்காகத் திரும்பிவிட்டேன்.

" 'அய்யோ! அப்பா!' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டேன். அந்த எழிலரசி நின்றுகொண்டிருந்த திசையிலிருந்து குரல் வந்திருந்தது. அந்தப் பெண்ணின் சேலை பற்றி எரிந்துகொண்டிருந்தது. அவளுக்கு மேலே தீப் பிழம்பு பறந்துகொண்டிருந்தது. மறுவிநாடி அந்த மாடி மீதிருந்தேன்.

''அண்ணு! நான் எப்படி அந்த மாடிக்குச் சென்றேன், அவ்வளவு உயரமான கட்டிடத்தை ஒரு நொடியில் எவ்வாறு தாவினேன் என்பதை இப்போது யோசித்துப் போர்த்தால்கூட எனக்கு விளங்கவில்லை.

''சிறுவயதில் அரண்மனைப் பள்ளிக்கூடத்தில் நீங்களும் நானும் தமிழ் பயின்றபோது அரசன் மகள் அமராவதியைச் சந்திக்கக் கவிஞன் மகன் சாளரத்தின் வழியாக ஏறி அந்தப்புரம் சென்ருன் என்பதைத் தமிழாசிரியர் உருக்கத்துடன் எடுத்துச் சொல்வாரே, நினைவிருக்கிறதா, அண்ணு? அப்போதெல்லாம் அதிலே பொதிந்துள்ள பொருள் எனக்குப் புரிந்த தில்லை. 'இது என்ன கோழைத் தனம்! இந்தக் களவு முறை கூடாது; நேர்மையாகாது' என்று எண்ணிக்கொள்வேன். 'இன்னும் சில நேரங்களில் இதையெல்லாம் ஒழுங்காக நினைவுபடுத்திக் கேள்வி நேரத்திலே சொல்லித் தொலைக்க வேண்டுமே!' என்று வருத்தப்பட்டுக்கொள்வேன்.

''உங்களுக்குக் கவனமிருக்குமென்று கருது கிறேன், நமது தமிழாசிரியருக்கு 'மிருச்சகடிகம்' என்ருல் எவ்வளவு பிரியம் என்று.

''ஒருமுறை கேலியாக, 'தமிழ் அய்யாவின் திரு நீற்றுப் பூச்சையும் சந்தனப் பொட்டையும் கண்ட வர்கள், 'இந்த சைவத் திருமேனி மனத்தில் பொன்ஞர் மேனியனைத் தவிர வேறு சிந்தனையே இருக்காது; போக போக்கியங்களில் கற்பனைக்காகக் கருத்துச் செலுத்தும் ஆர்வம்கூட இராது' என்றுதான் எவரும் எண்ணுவர். ஆனல் சாருதத்தன்-வசந்தசேனை காதல் பிரதாபத்தை அவர் கூறும்போது — பொற்கொடி வசந்தசேனையின் அங்க லாவண்யங்களை விளக்கும் போது — வசந்த சேனையின் வெறிபிடித்த காதலன்

கூட இவ்வளவு வர்ணித்திருப்பானு என்ற சந்தேகம் வருகிறது' என்று சொன்னீர்கள்!

"அப்போது நான் நினைத்ததெல்லாம், 'தமிழ்ப் யாவை அன்பாக வேடிக்கை செய்வதில் அண்ணுவுக்கு அலாதி ஆவல்' என்பதுதான்.

"வசந்தசேனையும் சாருதத்தனும் என் மனத்தில் பதிந்ததேயில்லை. ஓலை தீட்டும் இந்த நேரத்தில் உணர்கிறேன்; இடியும் மின்னலும் பெருமழையும் அந்தக் காதலனை ஏதும் செய்யவில்லை. பாம்பைப் பசுங்கொடி என்று கருதி அவன் மாடிமீது ஏறினுன் என்பது கற்பனையாக இல்லாமல் நிகழ்ச்சியாய் இருந்தது என்று சொன்னுலும் நம்ப மறுக்க மாட்டேன்.

"சேலையின் முன்றானை பற்றிக் கொண்டிருந்தது. அந்தப் பெண் பதறிப்போய்க் கால்களை அடித்துக் கொண்டு கரங்களை உதறிக்கொண் டிருந்தாள். இன்னும் ஒருகண நேரத்தில் அவள் மேனி முழுதும் பற்றியிருக்கும். யோசிப்பதற்கு நேரமில்லை. சரசர வென அவள் சேலையைப் பற்றியிழுத்தேன். அந்த ஆபத்தான நேரத்திலும் புடவையைப் பற்றிக்கொண்டு போராடினுள். எனது முரட்டுத் தனத்தின் முன்பு அவள் நாணம் எவ்வளவு நேரம் சமாளிக்கும்? பற்றி யெரிந்துகொண்டிருந்த சேலை ஓர் ஓரத்திலே வீழுந்தது. நெருப்புத் தொடர்ந்துகொண்டிருந்தது. அதன்மேல் குதித்துக் கால்களால் தீயை அணைத்தேன்.

"அதுவரையில் அவளைக் கவனிக்கவில்லை. திரும்பிப் பார்த்தேன். அவள் உள் ஆடையுடன் தரையிலே மூர்ச்சை போட்டுக் கிடந்தாள். சுற்று முற்றும் பார்த்தேன். எங்கும் நிசப்தம். மாடிக்கு

வரும் படிக்கதவு மாடிப்பக்கம் சாத்தப்பட்டிருந்தது. இக்கட்டான நிலைமை புரிந்தது.

"'அய்யோ! அப்பா!' என்று அபயக்குரல் கேட்டு ஓடிவந்ததில் எவ்வளவு ஆபத்தில் மாட்டிக் கொண்டேன் என்பதை யூகிக்க முடிந்தது. பத்துப் பேர் என்னை எதிர்பாராதவிதமாய்த் தாக்கியிருந்தால் கூட அவ்வளவு பயந்திருக்கமாட்டேன். ஓடிவிடவும் முடியாது; உதவி செய்யவும் தெரியவில்லை.

"நல்லவேளையாக என் தோளிலே எப்போதும் இருக்கும் தோற் பையில் கொஞ்சம் தண்ணீர் இருந்தது. அதைத் திறந்து அவள் முகத்திலே தெளித்தேன். பேச்சு மூச்சில்லை.

"எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது. கீழே அமர்ந்து மெதுவாக முகத்தைத் தொட்டேன். என் கரங்கள் நடுங்கின. அவள் மூச்சு விடுவதை உணர்ந்தேன். சிறிது நிம்மதி பிறந்தது. என்னிடமிருந்த மீதித் தண்ணீரையும் அவள் முகத்தில் கொட்டினேன். அவள் கண் விழிப்பதற்குச் சிறிது நேரமாயிற்று.

"உடம்பெல்லாம் வியர்த்திருந்தது. மிகவும் அதிர்ச்சியடைந்தவள்போல் காணப்பட்டாள். சுய நினைவு வந்ததும், யார் மடியிலோ தலை புதைந்திருப்பதை உணர்ந்து மீண்டும் தீ பற்றியவள்போல் திடீரென எழுந்திருக்க முயன்றாள். ஆனால் அவளின் அயர்வால் நினைத்ததைச் செய்ய முடியவில்லை. எங்கோ பார்த்தாள்.

"'ஆபத்திற்குத் தோஷமில்லை. பேசாமல் இரு. அலட்டிக்கொள்ளாதே!' என்றேன்.

‘‘கார்த்திகைச் சரவிளக்குச் சுட்டிகள் சில அவிந்து விட்டன. சில அணையும் தறுவாயில் பிரகாசமாகச் சுடர் விட்டுக்கொண்டிருந்தன. வேறு சில பரிதாபமாய்ப் பார்ப்பதுபோல் குறுகிக்கொண்டிருந்தன.

‘‘எதிர்பாராத இடத்தில், எதிர்பாராத சூழ்நிலையில், எதிர்பாராத பெண் என் மடியில் கிடக்கிறாள்! முற்றிலும் புதிதான இந்த அனுபவத்திற்குத் தகுந்தாற்போல் எனக்கு நடக்கத் தெரியவில்லை. பெண்களுக்குமில்லாத அவ்வளவு வெட்கத்தை எப்படிப் பெற்றேன் என்று தெரியவில்லை.

‘‘உண்மையாய்ச் சொல்லுகிறேன், அண்ணா! அதுவரையில் எந்தப் பெண்ணையும் நான் சரியாக உற்றுப் பார்த்தது கிடையாது. பெண்ணின் கவர்ச்சியை அன்றுதான் அறிந்துகொண்டேன்.

‘‘வாளிப்பான உடல். சுருண்ட கேசங்கள். இமை மூடியிருந்தும் சுடர்விடும் வதனம். ஒழுங்கின்றிப் பறந்து கிடந்த ஆடை. அதற்குள்ளே ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்த அங்கங்களின் பூரிப்பு!

‘‘எவ்வளவு நேரம் பார்த்துக்கொண்டிருந்தேன் என்று சரியாகச் சொல்ல முடியாது. பெண்ணின் ஸ்பரிசத்திற்கு எவ்வளவு சக்தியிருக்கிறது என்பதை அன்றுதான் முதன் முறையாக உணர்ந்தேன்.

‘‘ஆரம்பத்தில் அவள் மூர்ச்சை தெளியவேண்டும் என்று எவ்வளவு துடிதுடித்தேனோ, அதற்கு நேர் மாறாக ஆயுள் முழுதும் இப்படியே அவள் படுத்திருந்தால்கூடத் தாங்கி நிற்கலாம்போல் தோன்றியது. விவரிக்க முடியாத, இனந்தெரியாத ஒரு புத்துணர்வு என்னை ஆட்கொண்டது. அதுநாள்வரை என்னிட

மிருந்து ஒளிக்கப்பட்டு வைத்திருந்த இன்பப் பெட்ட கத்தை உணர்ந்து கொண்டேன்.

"அவள் மெல்லக் கண் விழித்தாள். பிற ஆடவனின் மடிமீது தலை கிடக்கிறது என்ப தாலே சாவது தெரிந்தும் விடுவித்துக்கொள்ள இயலாதவள்போல் திண்டாடினுள். என்னைப் போன்றே அவளும் ஆணின் ஸ்பரிச சக்தியின் முன் கட்டுண்டு கிடந்தாள்.

"நமது நந்தவனத் தோட்டத்தில் கிணற்று வாரி யருகே மனோரஞ்சிதச் செடி உண்டல்லவா? மனோ ரஞ்சித மலர்களின் கம்மென்ற மணத்தின் சக்தியின் முன்பு கருநாகமும் கட்டுவிரியனும் செடியைச் சுற்றி அசையாது படுத்திருப்பதைப் பலமுறை பார்த் திருக்கிறேன்.

"எங்களில் யார் மனோரஞ்சித மலர் என்ற விவாதத்தில் நான் இறங்கவில்லை. அப்படிப்பட்ட ஒரு கவர்ச்சி அங்கு ஆட்சி புரிந்தது.

"திடீரென எழுந்து ஒதுங்கி நின்றுள். அவ்வளவு நேரம் நடந்த செயல்களுக்கு வெட்கப்படுவதுபோல அவள் முக மண்டலம் சிவந்திருந்தது. என்னைச் சரி யாகக்கூட உற்றுப் பார்க்கவில்லை. வேறு எங்கெங்கோ அவள் கண்கள் அலைந்தன. கால் கட்டைவிரலால் தரையைக் கீறினுள்.

" 'அப்பப்பா! நினைத்தாலே பயமாக இருக்கிறது. நீங்கள் மட்டும் வராதிருந்தால்...'

" 'அமைதியாய் இரு! இது என்ன பெரிய காரியம்? 'அய்யோ! அப்பா!' என்ற அபயக் குரல் கேட்கும்போது, அதுவும் தீப்பிழம்பின் மத்தியில்

ஓர் அபலைப் பெண் ஆதரவற்றவளாகக் கதறும்போது எந்த ஆண்மகனும் நான் செய்ததையேதான் செய் திருப்பான் !'

"தட்டுத்தடுமாறிப் பேசத் தொடங்கினாள். இப் போது அவள் கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டவள்போல் பேசினாள்.

" 'உபசாரத்திற்காகச் சொல்கிறீர்கள். ஆணாகப் பிறந்த எல்லோருக்குமே, இந்த இரக்க சிந்தை வந்து விடுவதில்லை.'

" 'அது கிடக்கட்டும். இப்படி அஜாக்கிரதையாய் விளக்கு வரிசை அருகே புடவைத் தலைப்பை விடலாமா? உனது வேடிக்கை விபரீதத்தில் அல்லவா முடிய இருந்தது !'

" 'அதற்காக நான் வருந்தவில்லை. இந்த ஆபத்து வந்ததனால்தானே 'நல்லவர்'களைக் கண்டுகொள்ள முடிந்தது !'

" 'அவ்வளவு விரைவில் நல்லவர்கள் கெட்ட வர்கள் என்று முடிவு செய்துவிடாதே ! நான் 'நல்லவன்' என்பது இந்த இரண்டு நாழிகையிலே விளங்கிவிட்டதா?'

" 'ஆயிரம் யுகம் வேண்டுமாக்கும் ! அணங்கு களுக்கு அரைநொடி போதும் ஆண்களைத் தெரிந்து கொள்ள !'

" 'அப்படியென்ன தெரிந்துகொண்டாய் என்னைப் பற்றி ?'

" 'ஊகூம் ! நான் சொல்லமாட்டேன் !'

" 'சொல்லாமல் நீ தெரிந்துகொண்டாய் என்பதை நான் எப்படித் தெரிந்துகொள்வது ?'

"'எந்தக் கோட்டைக்கோ தளபதி, குதிரைவீரர். பேச்சைப் பார்த்தால் நம்முடைய கொங்கு நாடு என்று தெரிகிறது.'

"'பரவாயில்லை! பரிட்சையில் பாதி தேறிவிட்டாய்—ஆனால் முழுதும் சரியல்ல. நான் எந்தக் கோட்டைக்கும் தளபதியல்ல. சாதாரணக் குதிரைவீரன். அவ்வளவுதான்! அதையும் எப்படிச் சொன்னாய் என்பது புரிகிறது. நான் தெருவிலே குதிரையில் வரும்போது பார்த்திருப்பாய்! குதிரையிலே வருபவன் குதிரை வீரன்! அப்படித்தானே!'

"'ஏன்? இன்னும் கொஞ்சம் சொல்லுங்களேன். 'குதிரையிலே வரும்போது பார்த்திருப்பாள்; அந்த ரம்மியமான காட்சியிலே லயித்திருப்பாள்; புடவைத் தலைப்பையும் கவனிக்கவில்லை; அது நெருப்புடன் ஆலிங்கனம் செய்த காட்சியும் அவளுக்குத் தெரியவில்லை' என்று முடியுங்களேன்.'

"'சேச்சே! அப்படிச் சொல்வதற்கு நான் ஒன்றும் அகம்பாவக்காரனல்ல!'

"'இதிலென்ன அகம்பாவமாம்! உண்மை அதுதான்!'

"'பெரிய கெட்டிக்காரி போல் இருக்கிறது. ஏதோ உபகாரத்திற்கு வந்தால் இந்த உபத்திரவத்திற்கு நீதான் காரணம் என்று குற்றம் சாட்டுவாய் போல் தோன்றுகிறது.'

"அதற்கு அவள் ஒன்றும் வாய்மொழி பேசவில்லை. மௌனம் நிலவியது. விழிவாசல் வழிவந்து பேசினாள்! அந்தச் சில விநாடிகளில் எவ்வளவோ பேசிவிட்டாள். உணர்வு வந்தவள் போல் தொடர்ந்து, 'குதிரை வீரர்

என்றீர். எந்த ஊர், என்ன பேர் என்று சொல்ல வில்லையே?' என்றாள். எதிர்க்கேள்வி கேட்பதுபோல், 'நீ மட்டும் யார் என்று சொன்னாயா? யாருடன் வந்தாய்? அவர்களெல்லாம் எங்கே? நீ மட்டும் தனி யாக இங்கே மாடிமீது....' என்றேன்.

"'என் வீட்டாருடன்தான் வந்தேன். அவர்களெல் லாம் அர்த்தஜாம பூஜைக்கு மலைமீது போயிருக்கிறார் கள். 'கூட்ட நெரிசலில் உன்னை அழைத்துப் போகக் கூடாது. அறையிலேயே இரு, அம்மா' என்று என்னை விட்டுச் சென்றார்கள்.'

"'இதுதான் அறையாக்கும்!'

"'வேடிக்கை பேசுகிறீர்கள்! அம்பலம் என்று வைத்துக்கொள்ளுங்கள். கார்த்திகை தீபம் பார்க்க மாடிக்கு ஓடிவந்தேன். யாரும் ஆடவர்கள் வந்து விடுவார்களோ என்று படிக்கதவை இப்பக்கம் தாளிட்டேன்' என்றாள்.

"'அதற்கப்புறம்?' என்றேன்.

"'நீங்கள் சொன்னால்தான்' என்றாள்.

"நேரமாகிவிட்டது. மலையிலிருந்து பூஜை முடிந்து மக்கள் கலைந்துகொண்டிருந்தனர். தெருவில் மக்கள் சந்தடி கேட்டது. தாமதிக்க நேரமில்லை.

"'ஆனூர்க் கோட்டையில் வேலை!' என்றேன்.

"'எங்கள் பக்கம்தான்!' என்று குதித்தாள். படிக்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. பயந்து விட்டோம். அங்கிருப்பது நல்லதன்று. காலையில் பார்த்துக் கொள்வோம் என்று கிளம்பினேன். வந்த வழியிலேயே இறங்கினேன்.

“வேளாளர் மடத்தை அடுத்து நாம் வழக்கமாய்த் தங்கும் விடுதியை அடைந்ததும் என் உள்ளங் காலெல்லாம் தீ பட்டுப் புண்ணாகியிருப்பதை உணர்ந்தேன். படுக்கைக்குப் போனேன். மறுநாள் அவளைப்பற்றி மேலும் தெரிந்துகொள்ள மடத்திற்குச் சென்றேன்.

“மடம் வெறிச் சென்றிருந்தது. அங்கே தங்கி யிருந்த நாலைந்து குடும்பங்கள் விடியற்காலையே கிளம்பிவிட்டதாகச் சேதி கிடைத்தது. வேறு சரியான தகவல் அகப்படவில்லை. எனக்கும் விசாரிக்கும் துணிவில்லை. எப்படியும் அவளைக் கண்டுபிடித்து விடுவேன் என்ற நம்பிக்கையில் ஊர் திரும்பினேன்.

“அந்த அசட்டுத்தனம் தவறு என்று இப்போது புரிகிறது. அண்ணா! நானும் தேடுகிறேன், தேடு கிறேன், தேடிக்கொண்டே யிருக்கிறேன்; இன்னும் அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

“எப்படியோ அவள் என் நெஞ்சில் இடம் கொண்டு விட்டாள். அவளை அங்கிருந்து அகற்ற முடியாது திண்டாடுகிறேன்.

“களையெடுக்கும் குமரிக் கூட்டத்தைக் கண்டால், கிணற்றிலிருந்து தண்ணீர் மொண்டு செல்லும் தையலரைப் பார்த்தால், எங்காவது பெண்கள் சிரிப்பொலி கேட்டால் அவள் முகம் தெரியாதா என்று தேடுகிறேன். இன்னும் அகப்படவில்லை.

“அண்ணா! இந்த பலவீனத்திற்காக என்னை மன்னித்துவிடுங்கள். அவளைப் பெறுவிட்டால் என் வாழ்வு நிறைவு பெறாது. என்றும் தங்கள் சொல் தட்டாத தம்பிக்கு இந்த ஓர் அனுமதி வழங்குங்கள். அவள் எப்படியும் எனக்குக் கிடைத்தே தீருவாள்.

"முத்துவேலப்பரிடமே நாளைக் காலை சென்று மன்னிப்புக் கேட்க இருக்கிறேன். அத்துடன் தங்கள் திருமணம் நடைபெறுமல் நான் மணம் செய்வதாக இல்லை. எனக்குத்தான் பெண் கொடுப்பதாக அவர் சொல்லியிருக்க முடியாது. 'அண்ணன் சம்மதித்தால் அவருக்கும் உங்கள் மகளுக்கும் திருமணம் நடை பெறப் போவது உறுதி' என்று கூறிவர இருக்கிறேன். இப்படிக்கு உங்கள் அன்பு, பெரிய தம்பி" என்று ஓலை முடிந்திருந்தது.

# 7

சின்னமலை ஓலையைப் படித்து முடித்தான். மீண்டும் ஒருமுறை படித்தான். கடைசியாகச் சில சில வரிகளைப் படித்தான். விடியற்காலை ஆகிவிட்டது.

அவனது நெஞ்சில் இருந்த பாரம் ஏதோ குறைக்கப்பட்டது போல் உணர்ச்சி தென்பட்டது. காலில் முள் குத்தியிருந்தால், அதைக் களைந்து விட்டபின் ஏற்படும் சுகத்தை அவன் பெற்றிருந்தான். பெரிய தம்பியின் மேல் இருந்த கோபம் எங்கேயோ பறந்துவிட்டது.

'தம்பி தன் மனத்தில் இவ்வளவு இரகசியங்களை மறைத்து வைத்துக் கொண்டிருந்தான் என்பதே புரியாமல் போய்விட்டது. இளைஞன்! ஆசை துளும்பும் பருவம்தானே!'

'மனத்திற்கிசைந்த மங்கை நல்லாள் கிடைக்க வேண்டும்; மா, பலா, கமுகு ஆகிய கனிகளால் முடைந்த மணப் பந்தலின் கீழ் தோரண வரிசைகளைக் கிழித்துக் கொண்டு வந்து அமரும் புதுமணப் பெண்ணிற்கு மணமாலை சூட்ட வேண்டும், மத்தளங்கள் முழங்க வேண்டும், சங்குகள் ஒலிக்க வேண்டும், சதிரிளம் மங்கையர் ஆட வேண்டும், கோடியுடுத்த வேண்டும், அன்னைமார் வாழ்த்துக் கூறவேண்டும், மணமகளோடு வீதிவலம் வர வேண்டும், இருமருங்கும் சூழ்ந்து நிற்கும் மகளிர் விழியால் பல்லாண்டு கூறவேண்டும்' என்றுதான் எல்லா வாலிபனும் வனிதையும் கருதுவார்கள். பெரியதம்பி மட்டும் விதிவிலக்கா, என்ன?' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

"அண்ணன் சம்மதித்தால் அவருக்கும் உங்கள் மகளுக்கும் திருமணம்" — இந்த வாசகங்களை அவன் உதடுகள் திருப்பித் திருப்பி முணுமுணுத்தன. அவனையும் அறியாமல் சிரித்துக் கொண்டான்.

'அண்ணனுக்குத் தம்பியே பெண் பேசும் நிலை! பெரிய தம்பி மீதும் தவறில்லை. என் மனத்திரையிலே ஓடும் எண்ணங்களை அவன் தெரிந்திருக்க நியாயம் இல்லை.

'பெரிய தம்பி இரவு, பகல் என்னுடனேதான் இருக்கிறன். நான் இடும் கட்டளைகளை நிறைவேற்று வதற்கே அவனுக்கு நேரமிருப்பதில்லை. இருந்தாலும் பழனிப் பாவை தம்பியின் இதயத்திலே செய்யும் நர்த்தனத்தை என்னல் தெரிந்துகொள்ளவா முடிந்தது?

'பரவாயில்லை. பெரிய தம்பி முத்துவேலப்பரைச் சந்திக்கக் கிளம்புமுன் அவனைக் கண்டு தடுக்க

வேண்டும். ஒரு தவறுடன் இன்னென்றும் சேர்ந்து விடக் கூடாது. எப்படியும் பெரிய தம்பி எழுந்து சென்னிமலே கிளம்புவதற்கு நாலு நாழிகை ஆகும். இருந்தாலும் அஜாக்கிரதையாக இருக்கக்கூடாது. அவன் கண் விழித்ததும் அவனைக் கண்டு நிலைமையை விளக்கவேண்டும்.

'பெரிய தம்பி! உன் மீது எனக்குத் துளியும் கோபமில்லேயடா. காதலின் தூய்மையை உணர முடியாத கயவனல்லடா உன் அண்ணன்! உன் விருப்பப்படி திருமணம் நடைபெறும். உன் கருத்தைக் கவர்ந்த அந்தக் காரிகை எந்த மூலேயில்தான் இருக்கட்டுமே! கண்டு பிடிப்பது என் வேலே. அதுபற்றிக் கவலே வேண்டாம்.

'ஆனால் ஒரு வேண்டுகோள். நீ முத்துவேலப் பரைச் சந்திக்க வேண்டியதில்லே. ஏனென்றால் எனக்கு ஏற்பட்ட சிக்கலே உனக்கும் ஏற்பட்டுவிடும். 'தம்பியைக் கலந்து கொண்டு' என்று நான் வாக்களித்ததைபோல், 'அண்ணனைக் கலந்து கொண்டு' என்று நீ வாக்களித்து மாட்டிக் கொள்வாய். ஏனெனில் உன் அண்ணன் திருமணம் செய்து கொள்வதாகவே இல்லே.

'திடுக்கிட்டு விடாதே! இத்தனை நாளும் மிக நெருங்கியவருக்கும் தெரிவிக்காததற்கு வருத்தப் படாதே! அண்ணன் ஏதோ சாது சந்நியாசியோ, 'பெண்கள் பாவ மூட்டைகள்; சம்சார சாகரம் சஞ்சலம் நிறைந்தது' எனக் கருதும் தாய்க்குல விரோதியோ என்று எண்ணி ஏமாந்து விடாதே! அல்லது எந்தப் பெண்ணிடமோ நான் உள்ளத்தைப் பறிகொடுத்து, அவள் கிடைக்காததாலோ, இனிமேல், கிடைக்க முடியாத நிலே ஏற்பட்டு விட்டதாலோ,

விரக்தி மனப்பான்மை பெற்றுவிட்டேன் என்றே, உன் கற்பனையை ஓட்டாதே !

''நல்ல வேளையாக அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை நான் சந்திக்கவில்லை. ஆனால் நான் திருமணம் செய்து கொள்வதில்லை என்பதை நெடுநாட்களுக்கு முன்பே உறுதியாக்கிக் கொண்டேன். ஆபத்துகளிலேதான் விளையாடவேண்டும். மரணத்தைத் திரணமாக மதிக்க வேண்டும். வீட்டைப்போல் நாட்டையும் நேசிக்க வேண்டும். 'கொங்குநாடு கூனி விட்டதோ? இது கோழைகளின் கூடாரமோ? மக்கள் கூட்டம் ஆமைக் கூட்டம் ஆகிவிட்டதோ?' என்று எவரும் கேட்காத வகையில், 'அங்கே ஆண்மகன் தோன்றி விட்டான்; அவன் அசகாய சூரன்; அவனுக்கு வீடு, வாசல், மனைவி, மக்கள் எல்லாம் நாடுதான்; நாட்டு மக்களின் இதயங்களிலே அவன் கொலு வீற்றிருக்கிறான்; அவன் இருக்கும் வரையில் கொங்கு நாட்டில் அந்நியன் ஆதிக்கம் வேரூன்ற அனுமதியான்; அதனைக் கரு வறுக்கும் பணியில் உயிரையே பணயம் வைத்திருக் கிறான்' என்று எதிரிகளும் பகைவர்களும் அஞ்ச வேண்டும்.

''இப்படிப்பட்ட ஆற்றல் மறவன் இருக்கும்போது, நமது உரிமை வாழ்வுக்கு எந்த ஊறும் நேர்ந்துவிடாது' என்று நம்மவர் பெருமைப்பட வேண்டும் என்ற லட்சி யத்தை வெறியாக்கிக் கொண்டேன்.

'நீதான் சொல்லு தம்பி! வடக்கு எல்லையிலே கும்பினியாருக்கும் மைசூரானுக்கும் நடைபெறும் போராட்டம் வேறு திசையிலே திரும்பி விடுமா? கொங்குநாட்டு வீட்டு வாசற்கதவுகளைத் தட்டுவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்? இப்போதிருக்கும் மந்த நிலையே எவ்வளவு நேரம் நீடிக்கும்? போர்க்களத்திலே

இருக்க வேண்டிய வீரனின் கரங்கள்—கனல் தெறிக்கும் கண்களுடன் ஒழுகும் இரத்தத்தைப் பற்றிக் கவலைப்படாமல் வாளைச் சுழற்ற வேண்டிய என் கரங்கள்—கண்கள் சொரியும் புனலைத் துடைப்பதற்குப் பயன் பட்டால் நாம் சாகாத் தலைமுறையாய்க் காத்த மானம் என்னுவது?

'இல்லறத்திற்கு நான் விரோதியல்ல. அதன் இனிமையை உணராதவனல்ல. எனினும் என்னைப் போன்ற சில 'விதிவிலக்கு'கள், எல்லாச் சமுதாயத்திற்கும் வேண்டும் என்ற முடிவில் இருக்கின்றேன். இந்த என் எண்ணத்தை மாற்ற முயலாதே! தோல்வியே அடைவாய்! நாட்டுக்கும் நல்லதன்று.

' 'நான் மட்டும் என்னவாம்! அண்ணன் போர்க்களத்தில் ஈட்டி முனைக்கு எதிரே நிற்கும்போது நான், போகக்களத்திலே புரளுவதா? அண்ணன் பயிற்சியும் ஆனூர்க்கோட்டைப் பண்பாடும் எனக்குத் தியாக சுபாவத்தை அளிக்கவில்லையா?' என்று கேட்டு விடாதே!

'நம் குடும்பத்திற்கு நான் ஒருவன் போதும் தம்பி! முத்துவேலப்பரை நீ சந்திப்பதில் புதிய குழப்பம் விளையும். நான் சமாளித்துக் கொள்கிறேன்.

'நமது குடும்பத்தில் சம்பந்தம் என்றுதானே சொன்னார்? கிலேதார் எங்கே போய்விட்டான்? அவசரப்பட்டு அகப்பட்டுக் கொள்ளக்கூடாது. உபகாரம் செய்ய வந்தவர்களுக்கு உபத்திரவம் கொடுக்கக் கூடாது. உன் வேலையை நீ பார்க்கலாம். கவலைப்படாதே தம்பி.'

இவ்வாறு, காலையில் எழுந்ததும் கூறிவிடுவது என்ற முடிவுடன் நிம்மதியோடு உறங்கினான் சின்னமலை.

# 8

காலையில் கண் விழித்ததும் நேராகப் பெரிய தம்பியின் அறைக்குப் போனான். இந்த மாதிரி தருணங்களில் தாமதம் எத்தகைய பேராபத்தைக் கொடுக்கும் என்பதைச் சின்னமலை உணர்ந்திருந்தான்.

ஆனால் அவனது ஜாக்கிரதை பயன்படவில்லை. பெரியதம்பி அங்கில்லை. விடியற்காலையே குளித்து விட்டுச் சென்னிமலைப் பக்கம் சென்றதாகச் சேதி கிடைத்தது.

சின்னமலைக்கு என்ன செய்வதென்றே தோன்ற வில்லை. அங்குமிங்கும் உலவினான். 'தம்பியைப் பின் தொடர்வதானால் அவன் முத்துவேலப்பரைச் சந்திப் பதற்குமுன் அவனைச் சந்திக்கவேண்டும். அது சாத்திய

மானதல்ல. அவன் சந்தித்துக் கொண்டிருக்கும்போது அங்கே செல்வதும் உசிதமல்ல' என்று மனத்திலே முடிவு செய்தான்.

'நடப்பது நடக்கட்டும்; ஒன்றும் கெட்டுவிடாது' என்று நினைத்துக் கொண்டான். வீட்டுத் தோட்டத்துக் கிணற்றுப் பக்கம் அவன் கால்கள் நகர்ந்தன.

அண்ணன் குழந்தைசாமியும் அண்ணி கெம்பாயம் மாளும் பேசிக்கொண்டிருக்கும் குரல் கேட்டது.

"இனிமேல் ஒரு நொடிகூட இந்த வீட்டில் குடித் தனம் நடத்தமுடியாது'' என்ருள் கெம்பாயம்மாள்.

"அப்படி என்ன நடந்துவிட்டது, கெம்பாயி? காலையிலே எழுந்ததும் துவங்கிவிட்டாய்!'' குழந்தை சாமியின் வார்த்தைகளிலே பணிவு இருந்தது.

"என்னைக் குறை சொல்வது என்ருலே உங்க ளுக்கு மிக்க சந்தோஷம். எது நடந்தாலென்ன, குடும் பத்தைப் பற்றியே உங்களுக்கு அக்கறை கிடையாது.''

"ஏன் இப்படிச் சீறுகிருய் விடிந்ததும் விடியாதது மாய்......?''

"என் நிலைமை விடியாதுபோலத்தான் இருக் கிறது. நீங்கள் உண்டு, உங்கள் தம்பிகள் உண்டு. நான் சொல்லுவது உங்களுக்கு எங்கே ஏறுகிறது? என்ன இருந்தாலும் நான் பிறத்தியாள்தானே?''

"ஏன் இப்படியெல்லாம் பேசுகிருய்! விஷயத் திற்கு வா.''

"புதிதாக எதைச் சொல்லப் போகிறேனும்? இனி மேல் இதையெல்லாம் பார்க்க முடியாது. வேறு ஆள் யாராவது வைத்துப் பாருங்கள். நான் ஆரியப்பட்டிக்

குப் போகிறேன். பெற்ற பொண்ணுக்குச் சோறு கூடவா போடமாட்டார்கள் !''

"ஏன் ? விருந்தே கூடப் போடுவார்கள்.''

"கேலிக்குக் குறைச்சலில்லை. தம்பிமார்களைத் தட்டிக் கேட்கத் தைரியம் இல்லாவிட்டாலும் இதி லெல்லாம் ஒன்றும் குறைவில்லை.''

"என்ன கேட்கவில்லை என்கிறாய்?''

"அதுகூட நான் சொல்லித் தர வேண்டுமாக்கும். இது வேறு கெட்ட பெயர்! ஊரிலே உள்ள குடும்பங் கள் போலவா நம் குடும்பம் நடக்கிறது ? அவர்களுக்கு என்ன அக்கறை இருக்கிறது ? வருகிறார்கள்; போகிறார்கள். சமாராதனைபோல் தினமும் ஆக்கித் தொலைக்க வேண்டும். குபுகுபு என்று நாற்பது ஐம்பது பேர்களை அழைத்து வருகிறார்கள். இது என்ன சத்திரமா என்ன ? நேரம், காலம் உண்டா ? உங்களுக் குத் தம்பிமார்கள் என்றால் உயிர். ஒரு சிறு சொல்கூடச் சொல்லக் கூடாது. தோட்டம், துரவு, காடு, கரை இவைகளைப் பற்றிக் கொஞ்சமாவது அக்கறையுண்டா? இப்படியிருந்தால் எந்தக் குடும்பம்தான் உருப்படும் ? அவர்கள் பரவாயில்லை; தனிக்கட்டைகள். நமக்குக் குழந்தை குட்டிகள் இருக்கின்றனவே ! இப்படியே இருந்தால் நாளை நடுச்சந்தியில் நிற்க வேண்டியது தான் !''

"இப்படியெல்லாம் ஏன் அலட்டிக் கொள்கிறாய் ? நாம் வேறு, அவர்கள் வேறா ? நாம்தானே அவர்களுக் குத் தாயும் தந்தையும்? உன்னை 'நங்கை'யாகவா கருது கின்றார்கள் ? அவர்களுக்கு நீதான் தாய்போல. 'மேலப் பாளையம் பெரிய வீட்டான் போலல்லவா இருக்க வேண்டும் ! அண்ணன் தம்பிகள் என்றால் அப்படி

யல்லவா ஒற்றுமைவேண்டும்!' என்று ஊரார் பேசிக் கொள்வது உனக்குத் தெரியாதா, என்ன? தம்பிகள் தான் என்ன? பெற்ற தாயைவிட உன்னை மதிக்கிருர்கள். இவ்வளவு நாள் இருந்த நல்ல பெயருக்கு மாசு சேர்த்துவிடாதே, கெம்பாயி! உரத்த குரலிலே நான் பேசுவதே கிடையாது. இந்த உன் சுபாவம் நம் குடும்பத்துக்கே நல்லதல்ல!"

"நீங்கள்தான் பெருமைப்பட்டுக் கொள்கிறீர்கள், தம்பி தம்பி என்று. வீட்டுக்குப் பெரியவர் நீங்கள் தானே! உங்களை எங்கே மதித்தார்கள்? தீர்த்தகிரிக்குச் சென்னிமலை முத்துவேலப்பக் கவுண்டர் வீட்டில் பெண் பேசியிருக்கிருர்கள். ஒரு வார்த்தை உங்களிடம் சொல்லி யிருப்பார்களோ! இப்போது கூடப் பெரிய தம்பி சென்னிமலை போயிருக்கிறது. இந்தக் கெம்பாயம்மாள் அடுப்பங்கரையில் இருப்பவள் தானே என்று எண்ணிக் கொண்டிருக்கிருர்கள். எனக்கு எல்லா விஷயங்களும் சொல்ல ஆட்கள் இருக்கிருர்கள். நீங்கள் தான் கண்ணை மூடிக் கொள்கிறீர்கள். அக்கம்பக்கத்தைப் பற்றியே கவலை இல்லை. நாளைக்கு இந்த வீட்டிற்குப் புதிய மருமகள் வரப்போகிருள்! பெரிசு, சிறிசு என்ற மரியாதை உண்டா? தாயைப்போல பாவிக்கிருர்களாம்! எல்லாம் என்னை ஏமாற்ற நீங்கள் கூறும் வார்த்தைகள். தம்பிகளுக்கு வாஞ்சையிருந்தால் என் காதில் ஒரு வார்த்தை போட்டிருக்க மாட்டார்களா? ஊர் சொல்லி நான் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது."

"நிஜமாகவா? எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? தம்பிமார்களுக்கு நல்ல இடத்தில் திருமணமாகி, குடியும் குடித்தனமும் ஆகிவிட்டால்...."

"நான் ஒருத்தி உளறிக்கொண்டேயிருக்கிறேன். உங்களுக்குக் குதூகலம் பொத்துக் கொள்கிறது. கொட்டு முழக்குக்கூட வைப்பீர்கள்போல் இருக்கிறது."

"ஏன், கெம்பாயி, எரிச்சல் படுகிருய்? உனக்கும் நல்லதுதானே! பெண் பார்க்கும் வேலையும் குறைந்திருக்கிறதே! தம்பிக்கே பிடித்தமானது என்ருல் வேறு பொருத்தமே தேவையில்லை."

"ஏன் சொல்லமாட்டீர்கள்? ஆரியப்பட்டி நடு அண்ணன் மகள் நல்லாத்தாளுக்கு என்ன பொருத்தக் குறைவாம்! மூக்கும் முழியுமாய் எலுமிச்சம் பழம்போல். அப்படிப்பட்ட பெண் நம் குடும்பத்துக்குக் கிடைக்க வேண்டுமே! என்ன இருந்தாலும் இது புது சம்பந்தம்."

"உன் கோபத்திற்குக் காரணம் புரிகிறது. பெண்கள், என்ன இருந்தாலும் பிறந்த இடத்துப் பெருமையை விட்டு விடுவதில்லை."

"அப்படியெல்லாம் மாப்பிள்ளை கிடைக்காது என்று நினைத்து விடாதீர்கள். அவளைக் கொடுக்க மாட்டார்களா என்று எத்தனையோ குடும்பங்கள் தவம் கிடக்கின்றன."

"பிறகு ஏன் வளைத்து வளைத்துப் பேசுகிருய்?"

"எங்களைக் கண்டால் உங்களுக்கு அவ்வளவு அலட்சியம். அவர்கள் படுத்துகிறபாடு போதாமல் நீங்கள் வேறு என்னை அவமானப் படுத்துகிறீர்கள் — என்னுல் இனி ஒரு கணமும் இங்கே இருக்க முடியாது. விடியற் காலையிலேயே மூட்டை முடிச்சுகளெல்லாம் கட்டி வைத்துவிட்டேன். வெளியே வண்டி தயாராக இருக்கிறது. ஆள்காரன் காளை பிடித்துவரப் பட்டிக்குப்

போயிருக்கிறன். நான் ஆரியப்பட்டி போவதை நிறுத்த முடியாது !" என்று ஆவேசமாகக் கூறினுள் கெம்பாயி.

குழந்தைசாமி ஒன்றுமே பேசவில்லை. திக்பிரமை பிடித்தவர்போல் நின்ருர். இவ்வளவு நேரமும் செடி யருகே நின்ற சின்னமலையைப் பேச்சு வேகத்தில் அவர்கள் கவனிக்கவில்லை. சின்னமலை அப்படியே திரும்பி ஆற்றங்கரைக்கு நடந்தான்.

அண்ணன், அண்ணி மனேபாவம் மீண்டும் சின்னமலையின் உள்ளத்தில் பெரு வருத்தத்தைக் கொடுத்தது. கெம்பாயம்மாள் கோபக்காரி. குழந்தை சாமியின் அடக்கத்துக்கும் கெம்பாயம்மாளின் ஆத்திர குணத்திற்கும் மலைக்கும் மடுவிற்குமுள்ள வித்தியாசம் இருந்தது.

சின்னமலையின் கண்களிலே நீர் சுரந்தது. வீடு திரும்பிக் கொண்டிருந்தான்.

சலங்கை மாடு பூட்டிய வில்வண்டி பாதையிலே போய்க் கொண்டிருந்தது. வண்டியில் கெம்பாயம்மாள் மூட்டை முடிச்சுக்களுடனும் குழந்தை குட்டிகளுடனும் அமர்ந்திருந்தாள். வண்டி மறையும் வரை, சின்னமலை அந்தத் திக்கைப் பார்த்துக் கொண்டே நின்ருன்.

# 9

முத்துவேலப்பரின் மாளிகை சோபை இழந்து காணப்பட்டது.

கொஞ்ச நாட்களாய் வள்ளிநாயகி துரும்பாய் இளைத்திருந்தாள். அவள் மெலிவுக்குக் காரணம் தெரியாத முத்துவேலப்பர், செல்வமாக வளர்த்த சிங்கார மகள் தன்னைப் பிரிந்து போக வேண்டியுள்ளதே என்ற ஏக்கம் அவள் உடலைப் பற்றிக் கொண்டதாகத் தனக்குத் தானே காரணம் சொல்லிக் கொண்டார்.

"இப்படியெல்லாம் இருக்கக் கூடாதம்மா! சுறு சுறுப்பாய் வாரிமுடித்துக்கொண்டு அழகாய் இருக்க வேண்டாமா? கலியாணமாகப் போகிற பெண்!

என்னம்மா செய்ய முடியும்? பெண்களென்ருல் யார் வீட்டுக்காவது போய்த்தானே ஆக வேண்டும்? தகப்பன் வீட்டிலேயேவா இருக்க முடியும்?'' என்று அடிக்கடி சொல்லுவார்.

சமாதானம் சொன்னுரே தவிர, அவரது நிலேயே பரிதாபமாய்த்தான் இருந்தது. கண்களின் ஓரத்திலே தேங்கும் கண்ணீரை அவசர அவசரமாக வள்ளி நாயகிக்குத் தெரியாமல் மேல் துண்டால் துடைத்துக் கொள்வார்.

வள்ளிநாயகி முன்போல் கலகலவெனப் பேசுவ தில்லே. எதையோ பறிகொடுத்தவள்போல் ஏங்கி நின்ருள். எங்கிருந்தோ ஏதோ குதிக்கப்போகிறது, அது அவளின் நம்பிக்கை நட்சத்திரமாய் அமையப் போகிறது என்று கருதியவள் போலவும் தோன்றிஞள்.

பழனியிலிருந்து திரும்பியதும் அவள் ஆட்ட மெல்லாம் அடங்கி விட்டது. ஆரம்பத்தில் எதிர் காலத்தில் தான் வாழப்போகும் இன்ப வாழ்வை நினேத்து மனம் மகிழ்ந்தாள். இத்தனே நாளும் அவள் பார்த்துக் கொண்டிருந்த வெண்ணிலாவும் நட்சத்திரக் கூட்டமும் புதுப் புதுக் கற்பனேகளேக் கிளறின.

''எத்தனேயோ பௌர்ணமிகள் வீணுகிவிட்டன. இன்னும் எத்தனே பௌர்ணமிகள் வீணுக வேண்டுமோ!'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

நட்சத்திரங்கள் கண் சிமிட்டுவதை, தன் அருமைக் காதலன் தன்னேப் பார்த்துச் சிரிப்பதாக எண்ணி அவளும் சிரித்துக் கொள்வாள்.

மலர்கள் எப்போதும்தான் மணத்தை வாரி வழங்கிக் கொண்டிருந்தன. ஆனால் இப்போதெல்லாம் அந்த சுகந்தத்தில் புதிய சுகத்தை அனுபவித்தாள்.

புள்ளினங்களின் மதுரகீதம், புதிய புதிய நினைவுகளைத் தந்தன. ஆரம்பத்தில் ஆனூர்க்கோட்டை வாலிபர் அவசியம் தன்னைச் சந்திப்பார் என்ற உறுதி இருந்தது. பழனியை விட்டு விடியற்காலை கிளம்பும் போதுகூட இனி அவரைக் காணமுடியாதே என்ற அவநம்பிக்கை அவள் உள்ளத்தில் எழவில்லை. 'மிகவும் கெட்டிக்காரர்; எப்படியும் என்னைக் கண்டுகொள்வார்' என்று அசட்டுத் தைரியம் கொண்டிருந்தாள்.

ஆனால் மாதங்கள் பல ஓடிவிட்டன. அவரைக் காணோம். அவள் பேதை உள்ளம் என்னவெல்லாமோ எண்ணத் தொடங்கியது.

'ஒரு வேளை அந்தவீரர் என்னை மறந்திருப்பாரோ ...! சேச்சே ! அவர் பார்வையைப் பார்த்தால் அப்படியில்லை. ஒருகாலும் இருக்க முடியாது !

'ஒரு வேளை எங்காவது வேறு இடத்திற்குப் போர் செய்ய அனுப்பி விட்டார்களோ !' —

இந்த நினைவு வரும்போது அவள் உடம்பெல்லாம் சில்லிட்டது. ஒளிவீசும் வாட்கள் — கூக்குரல் — கதறல் — செம்பருத்தி நிறமமைந்த ரத்த ஆடை — பிணவாடை — அழிவு — கோரம் — அதற்கு மேல் அவள் சிந்திக்கவேயில்லை.

'ஒரு வேளை வேறு எந்தப் பெண்ணையாவது மணந்திருப்பாரா ? நிச்சயம் அவர் செய்யமாட்டார். ஆனால் அவர் வீட்டாரின் வற்புறுத்தலுக்கு இணங்கி மாலை சூட்டி யிருந்தால்' —

அவளுக்குச் சிந்தனை ஓட மறுத்தது.

'ஆண்களே அப்படித்தான்! அக்கறையே இருப்பதில்லை. அவர்களுக்கு மட்டும் என்னைப்போன்ற பேதைப் பெண் நெருப்பிலேயிட்ட புழுப்போலத் துடிப்பதை உணர முடிவதில்லை. இந்த இம்சையைவிட அன்று நான் நெருப்புப்பட்ட நேரத்தில் இறந்திருந்தால் எவ்வளவோ நன்றுயிருந்திருக்கும்!

'நான் கதைகளிலே கேட்டிருக்கிறேன். ஆண்களே சபல புத்திக்காரர்கள்; விரைவில் மறந்து விடுவார்களென்று. ஆனால் ஆனூர்க் கோட்டை வாலிபரை இந்த ரகத்தில் நான் சேர்க்கவில்லை. என் உள்ளம் இன்னமும் ஏனோ அவர் பக்கம்தான் சேர்ந்து கொள்கிறது.

'ஒருவேளை காடுமேடெல்லாம் தேடி அலுத்து விட்டாரோ! நான் அவ்வளவு 'அடம்' பண்ணி யிருக்கக் கூடாது!

''யாருடன் வந்தாய்? அவர்களெல்லாம் எங்கே? நீ மட்டும் தனியாக இங்கு மாடிமீது......' என்று எவ்வளவு ஆவல் ததும்பக் கேட்டார்! பாவி நான்! கடைசியிலே சொல்லிவிடுவோம் என்று காலங்கடத்தி வேடிக்கை செய்தேன்.

'வேடிக்கை என் வரையில் எவ்வளவு வேதனை யாகி விட்டது! காலமும் கடந்து கொண்டே இருக்கிறது. அந்த வேளையில்தானு சனியன் படிக் கதவைத் தட்டித் தொலைக்க வேண்டும்? நான் விவரம் கூறியிருந்தால் இவ்வளவு சிரமம் நேர்ந்திருக்காது.

'இப்போது மேலப்பாளையம் குடும்பத்தில் சம்பந்தம் செய்யவேண்டும் என்று அய்யா ஒற்றைக் காலில் தவம் கிடக்கிறுர். அவர் காலில் விழுந்து, கண்ணீர் பெருக்கி, 'உங்கள் ஒரே மகளின் ஆசையை நிர்மூலமாக்கி விடாதீர்கள்!' என்று கெஞ்சிக்

கதறுவதாக இருக்கிறேன். என்னவோ எனது மனத் திருப்திக்கு விரோதமாக நடக்க மாட்டார் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

'அவர் பிடிவாதமாய் இருந்து மேலப்பாளையம் குடும்பத்திற்கு நான் வாழ்க்கைப்பட்டு என் இதயம் கவர்ந்தவரை அங்கே சந்தித்தால் எவ்வளவு லட்சணமாயிருக்கும்! அய்யோ! என் வாழ்க்கையே இருண்டுவிட்டது போல் தோன்றுகிறதே!

'சாதாரண வீட்டுப் பெண்ணுயிருந்தாலும் அக்கம் பக்கத்தில் கேட்டு விசாரித்திருக்கலாம். நானோ பெரிய இடத்துப் பெண்!...நல்ல பெரிய இடம்!...எந்த ஏழை வீட்டிலாவது பிறந்திருந்தால் வானம்பாடி போல் உலவி வந்திருப்பேன். இங்கோ பாலும் பழமும் அளிக்கப்பட்டாலும் கூண்டிலேயிருக்கும் பஞ்சவர்ணக் கிளியானேன்.

'எப்படி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, 'என் உள்ளத்தைக் கொள்ளைக்கொண்ட கள்வன் ஆனூர்க் கோட்டையைச் சேர்ந்தவன்; அந்த இரக்க மற்றவனைப் பார்த்தால் பரிதாபத்திற்குரிய ஓர் அப்பாவிப் பெண் உனக்காகச் செத்து மடிந்து கொண்டிருக்கிறுள்; சீக்கிரம் போய்க் காப்பாற்று' என்று சொல்லி அனுப்புவது!'

இவ்வளவு எண்ணங்களும் அலைமோதிய வள்ளி நாயகிக்கு மாளிகை பெரும் சிறைச்சாலை போலத் தோன்றியது. சாளரக் கம்பிகளெல்லாம் காரா கிருகத்தை நினைவூட்டின. இதயத்தில் அதிகமாகத் துக்கம் ஏற்படும் போதெல்லாம் அவளுக்கு ஆறுதல் அளித்தது, மாளிகையைச் சேர்ந்துள்ள மாமரச் சோலைதான்! அங்கே சென்று மர நிழலிலோ,

வரப்பின் மேலோ மணிக் கணக்கிலே அமர்ந்து விடுவாள்.

அதிகாலையிலேயே இவ்வளவு சுமை இருப்பது அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது. முந்தினநாள் இரவு முழுவதும் தூங்கவில்லை. அழுது அழுது அவள் கண்கள் வீங்கியிருநதன. தோட்டத்துப் பக்கம் கிளம்பினாள்.

கிணற்று மேட்டின் அருகில் ஒரு தண்ணீர்த் தொட்டி உண்டு. கிணறு இறைக்கவில்லை. தொட்டியில் பாதி தண்ணீர் நிறைந்து இருந்தது. கண்ணாடிபோல் நீலவானமும், மேகங்கள் நகருவதும் தொட்டியில் தெரிந்தன.

தொட்டிச் சுவரில் கையை ஊன்றி உள்ளே உற்று நோக்கினாள். வள்ளிநாயகியின் உருவம்தான் பிரதிபலித்தது. தனது சொந்த உருவமென்று தன்னாலேயே நம்பமுடியவில்லை. அவள் கண்கள் வீங்கியிருந்தன. சுடர்விடும் வதனத்தில் சோக ரேகைகள் படிந்திருந்தன. பயங்கரமான இந்த மாற்றத்தைப் பார்த்துக்கொண்டே யிருந்தாள். பக்கத்தில் குதிரையின்மீது ஓர் ஆள் வந்து நின்ற அரவம் அவள் காதுகளிலே படவில்லை.

திரும்பிப் பார்த்தாள். அவளால் நம்ப முடிய வில்லை! கண்களைக் கசக்கிக் கொண்டாள்.

"நீங்களா ?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள். கேட்டுவிட்டு, சரிதானா என்று அவசர அவசரமாகப் பார்த்தாள்.

"நீயா ?" என்றான் பெரியதம்பி.

அவன் குரலைக் கண்டு கொண்டாள். "அவரே தான் !" என்று சொல்லிக் கொண்டாள். ஆரம்பத்தில்

அவனையே தியானம் செய்து கொண்டிருந்ததால் ஒரு வேளை உருவெளித் தோற்றமோ என்று பயம் இருந்தது. அந்தச் சந்தேகம் பறந்துவிட்டது.

" 'யாருடன் வந்தாய்? இவர்களெல்லாம் யார்? நீ மட்டும் இங்கே தனியாக மாமரச் சோலையில் ......' என்று கேட்கப் போகிறீர்களா? ஒரு முறை வந்த ஆபத்தே போதும். இனி விளையாடமாட்டேன்!"

"கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது!"

"நான் தெய்வமும் ஆக வேண்டாம்; நீங்கள் கும்பிடவும் வேண்டாம். சாதாரணப் பெண்ணாகவே இருந்தால் போதும்."

"நான் நினைக்கவே யில்லை!"

"நீங்கள் நினைத்திருந்தால் இப்படித் தவிக்க விட்டிருப்பீர்களா? போர் வீரர் தானே? அவர்களுக்குப் பச்சாத்தாபம் எங்கே இருக்கப் போகிறது? நீங்கள் மட்டும் அன்று என் வாழ்வில் குறுக்கிடாது இருந்தால் எவ்வளவோ நிம்மதியாக இருந்திருக்கும். இப்போது மட்டும் ஏன் நினைத்தீர்கள்?"

"நான் அதைச் சொல்லவில்லை. இங்கே உன்னைச் சந்திக்கப்போகிறேன் என்று நினைக்கவில்லை என்றேன்."

"நான் சொல்லியதில் தவறில்லை."

"கோபித்துக் கொள்ளாதே" என்று சொல்லி விட்டு நிறுத்தினான் வீரன். "எவ்வளவு நேரம் உன்னை மொத்தமாகவே அழைத்துக் கொண்டிருப்பது? உன் பெயர் என்ன? எவ்வளவு நாழிகை மறைக்கப் போகிறாய்?"

"என் பெயர் இல்லாததுதான் குறையாம்!" என்றாள் வள்ளி நாயகி.

அருகே யிருக்கும் மாமரத்தின் கனிகள் பழுத்துக் குலுங்கி நின்றன. அவைகளின் மீது அவள் பார்வை தெறித்தது.

"என் பெயர் மாங்கனி" என்ருள்.

"மாங்கனி! மதுரமான பெயர். ஆனுல் அந்த மரத்திலேயிருக்கும் மாங்கனிகள் உன்னுடைய கன்னக் கதுப்புகளிலே உள்ள சிவப்பு நிறத்தை இரவல் வாங்குகிறதாக்கும்!"

"இங்கு ஒன்றும் இரவல் வேலையில்லை. சரி! என்னைப் பார்க்க வரவில்லை என்றீர்கள். பின்பு ஏங்கே வந்தீர்கள்! நாஞேர் பைத்தியக்காரி! உங்களைப் பார்த்ததும் பார்க்காததுமாய்ப் பரவச மடைந்துவிட்டேன். 'உன் அன்பரின் மேல் நீ வைத் திருந்த நம்பிக்கை பாழாகவில்லை; பாரடி அந்தப் பார்த்திபன் உன்னைத் தேடி வந்திருக்கும் திருக் கோலத்தை!' என்று என் மனம் கர்வம் கொண்டது."

"மாங்கனி! நீ அறிய மாட்டாய் என் மனநிலையை! கார்த்திகை தீபம் கழிந்தது. என் வாழ்வின் தீபத்தையே எடுத்துக்கொண்டு வந்துவிட்டாய். இனி, நீ திரியேற்றி எண்ணெய் ஊற்றிஞல்தான் என் வாழ்வுத் தீபமே எரியும். நான் தேடாத இடமில்லை, திரியாத திக்கில்லை. நீ எங்கோ மாமரச் சோலையிலே ஒளிந்து கொண் டுள்ளாய்."

"சொல்வதற்குள் ஓடிவிட்டீர்களே. அவசரக் காரர். இந்த ஆண்களே பயங்காளிகள்."

"சரி, சரி. இதுதானே முத்துவேலப்பரின் மாளிகை? இங்கே ஆள் அரவமே கிடையாதா? குரல் கொடுத்தாலும் பதில் இல்லை. எல்லாம் திறந்துபோட்

டிருக்கிறது. நீ இங்குதான் இருப்பதா? உன் வீடு எங்கே இருக்கிறது? இங்கு என்ன வேலை?"

"இது முத்துவேலப்பரின் மாளிகைதான்! சந்தேகப்படவேண்டாம்! நான் பிறந்தது முதல் இங்கே தான் இருக்கிறேன். வேலைக்காரி என்று வேண்டு மானாலும் வைத்துக் கொள்ளுங்கள்; வீட்டுக்காரி என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள் ளுங்கள்."

"விடுகதையிலேதான் இருக்கிறாய்! விவரமாய்ச் சொல்லு. இந்த வீட்டுக்கு நீ உறவு முறையா?"

"நல்லவேளை! புள்ளிமானைத் தேடி வந்தேன். இங்கு வள்ளிமான் அகப்பட்டது என்றாராமே முருகன்; அதுபோல்......"

"நான் முருகனுமல்ல; நீ வள்ளியுமல்ல."

"நீங்கள் முருகனல்லதான்; ஆனால்..." என்று களுக்கென்று சிரித்தாள் அவள். தொடர்ந்து, 'மானைத் தேடி வரவில்லை; மாங்கனி தேடி வந்தேன்; இந்த மாங்கனி அகப்பட்டது' என்று சொல்லுவீர்கள்போல இருக்கிறது."

"நான் சொல்லித் தெரிய என்ன இருக்கிறது, மாங்கனி?"—கூறிக்கொண்டே கீழே இறங்கினான்.

கண்ணும் கண்ணும் கலக்கும்போது வாய்ப் பேச்சு மதிப்பிழந்துவிடுகிறது. மாவிலை மெத்தையில் பெரியதம்பி அமர்ந்திருந்தான். அவன் மடியில் மாங்கனி. அவன் பார்வை பட்டவுடன், பத்தரை மாற்றுத் தங்கமானாள். அவள் பசலை ஒரு நொடியில் பறந்துவிட்டது.

"கண்ணாளா! நெடிய இரவு தொலைகிறது. நம் வாழ்வில் மறுபடியும் இருள் சூழ்ந்து கொள்ளாதே!"

"பெரியதம்பி, நம்பி வந்த பெண்ணை நட்டாற்றில் விடும் பரம்பரையினனல்ல !"

"பெரியதம்பி ! கண்டு பிடித்துவிட்டேன். அது தானே உங்கள் பெயர் ! சொல்ல மாட்டேன் என்றீர்களே ! தோல்வியை ஒத்துக் கொள்ளுங்கள் ! அடடா ! கணவர் பெயரைச் சொல்லக்கூடாதே ! பரவாயில்லை, இன்னும் நீங்கள் என் கணவரல்ல !"

"மாங்கனி ! வேடிக்கையிலேயே விஷயத்தை மறந்துவிடக் கூடாது. ஒரு முறை செய்த தவறை மீண்டும் செய்யக் கூடாது. முத்துவேலப்பர் எங்கே ? அவரை நான் சந்திக்க வேண்டும்."

"ரொம்பவும் அவசரமா ? முத்துவேலப்பர் ஊரிலில்லை. ஒரு வேளை மாலை வரலாம். நீங்கள் இப்போது சந்திக்க முடியாது."

"ஓகோ !..."

"ஏன் ?... அவரிடம் என்னைப் பெண் கேட்கப் போகிறீர்களா ?"

"இல்லை, இல்லை. முத்துவேலப்பருக்கு வள்ளி நாயகி என்ற மகளுண்டாமே ! உனக்குத் தெரியுமா ? நான் பார்க்க முடியுமா ?"

"என்ன ! வள்ளிநாயகியா ? ஆமாம். இருக்கிறார்கள். சாதாரணமாய்ப் பார்க்க முடியாது. ஆனல் நான் விரும்பினல் காணமுடியும். ஒன்று சொல்லி விடுகிறேன். உங்கள் எஜமானர் குடும்பத்துச் சம்பந்தத்தையே அம்மா வேண்டாம் என்கிறார்கள். உங்களுக்கு எங்கே ?" என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

பெரியதம்பிக்கு வேடிக்கை புரியவில்லை. படபட வென்று சொன்னன்; "மாங்கனி, நான் மறைக்க

விரும்பவில்லை. நான் மேலப்பாளையம் குடும்பத்துப் பிள்ளை. உன்னிடம் பொய்யாகச் சொல்லிவிட்டேன். என் அண்ணன் சின்னமலை, முத்துவேலப்பரின் மகளைப் பெண் பேசிவிட்டார். என் மாங்கனியைத் தவிர வேறொருத்தியை எப்படி மணப்பேன்? அண்ணனுக்கும் இன்னும் திருமணமாகவில்லை. முத்துவேலப்ரிடம் கூறி ஏற்பாட்டை மாற்ற வந்துள்ளேன். அந்தத் திருமணம் நடந்தவுடன் நமது திருமணம்! வள்ளிநாயகி குணவதிதானு? என் அண்ணனுக்கு ஏற்றவளா? பேசக்கூட வேண்டாம்; பார்த்தால் போதும்" என்று அடுக்கிக் கொண்டே போனுன்.

வள்ளிநாயகிக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ஒரு பக்கம் பெரு மகிழ்ச்சி; வேறொரு பக்கம் அதிசய உணர்வு. சகலமும் அவளுக்குப் புரிந்தது. இருப்புக் கொள்ளவில்லை.

"ஒரு நிபந்தனை" என்ருள்.

"ஆயிரம் நிபந்தனை போடு; நிறைவேற்றி வைக்கிறேன்."

"வள்ளிநாயகியைப் பார்க்கவேண்டும் என்கிறீர்கள். பார்த்தவுடன் அவள் அழகில் மயங்கி அவளையே திருமணம் செய்வது என்ற முடிவுக்கு வந்து விட்டீர்களானுல் என்கதி என்னுவது?"

"என்னையும் மாங்கனியையும் யாராலும் பிரிக்க முடியாது."

"என்னவோ; நம்புகிறேன். பெண்பாவம் பொல்லாதது. மாளிகை முற்றத்திற்குப் போங்கள். வள்ளிநாயகியை அழைத்து வருகிறேன்."

பெரியதம்பி மாளிகைக்குச் சென்றான். மிக்க அடக்கத்துடன் வள்ளிநாயகியும் மாங்கனியும் வருவார்கள் என்று எதிர்பார்த்துக்கொண் டிருந்தான்.

சிறிது நேரத்தில் பட்டாடை அணிந்து, ஆபரணங்கள் பூண்டு, மலர்சூடி, திலகமிட்டு, புதுப் பெண்போல மாங்கனி வந்தாள். மாங்கனி இவ்வளவு அழகியா எனப் பெரியதம்பிக்கு ஆச்சரியமாய் இருந்தது. வந்த வேலையையும் கவனிக்கக் கருதி, "மாங்கனி! வள்ளிநாயகி எங்கே? வருகிறார்களா?" என்று வினவினான்.

"வந்துவிட்டார்கள்! இனி வரமாட்டார்கள். நான்தான் வள்ளிநாயகி!" என்றாள்.

பெரியதம்பியின் கால்களும் உடலும் பூமியிலே இல்லை. வானமண்டலத்திலே, உயரத்திலே பறந்து கொண்டிருந்தன.

# 10

பெரியதம்பி அவனது வாழ்நாளில் இப்படி ஒரு பேருணர்வைப் பெற்றதில்லை. ஆனந்தமும் ஆர்வமும் அவனது திருமுகத்திற்கு அழகூட்டின. வள்ளி நாயகிதான் நிசப்தத்தைக் கலைத்தாள்.

"பறவை நெடுநேரம் வானமண்டலத்திலேயே பறந்து கொண்டிருக்க முடியாது. பூமியில் மரக் கிளையிலேயுள்ள கூட்டிற்கு வந்துதாளுக வேண்டும்."

"கூடே இன்னும் கட்டவில்லை. அதற்குள் முட்டை யிட்டுக் குஞ்சுபொரித்து, அதற்கு இரைதேடும் கட்டத்திற்குப் போய்விட்டாய்!"

"போங்கள்! என்னை வேடிக்கை செய்வதென்றல் உங்களுக்கு வெல்லமாக இருக்கிறது!"

உபசாரத்திற்குப் பிடிக்காததுபோல் கூறினளே தவிர வள்ளிநாயகியின் உள்ளத்தில் தாய்மை உணர்வு சுரந்தது.

"நீதான் பெரிய வேதாந்தியாய் இருக்கிருயே! இதுவெல்லாம் எங்கே கற்ருய்?"

"எல்லாம் இந்த வேலனிடம்தான் கற்றேன்!"

"புராணத்து வேலவன் வேடஞக, விருத்தனுக வந்து வள்ளியை ஏமாற்றினன். ஆனல் இந்த வள்ளி, வேலைக்கார வனிதைபோல நடித்து வேலவனை ஏமாற்றிவிட்டாள்!"

"நடித்து ஏமாற்றிவிட்டேனு! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். நீங்கள்தான் ஆனூர்க் கோட்டைப் படைவீரன் என்று சொல்லி இத்தனை நாளும் பதைக்க வைத்தீர்கள்!"

"அதனுலென்ன நட்டமாம்?"

"உங்களுக்கென்ன? நன்ருகக் கேட்பீர்கள்! நான் பட்ட வேதனையில் ஒருதுளி அனுபவித்திருந்தால் இப்படியெல்லாம் செய்திருப்பீர்களா?"

"பெண்ணின் உள்ளம் எனக்கெப்படித் தெரியும்? இனிமேல்தான் தெரியவேண்டும்."

"தெரியாமலா உங்களுக்கு இவ்வளவு தைரியம் பிறந்திருக்கிறது!"

"வள்ளிநாயகி! நான் உடனே ஊர் செல்ல வேண்டும். அண்ணனைச் சந்தித்து விஷயத்தைக் கூற வேண்டும்! அப்படியே, மகிழ்ச்சியால் பூரித்துப் போவார்!"

"என் சந்தேகம் சரிதான்! வள்ளிநாயகியைப் பார்க்கவேண்டும் என்றீர்கள். பார்த்தவுடன் அவள்

அழகில் மயங்கி, அவளையே திருமணம் செய்வது என்று முடிவுக்கு வந்து விட்டீர்களானால் என் கதி என்னவது? என்று கேட்டேனே! இப்போது வள்ளி திருமணத்திற்கு நாள் குறிக்க விரைகிறீர்! அப்படித் தானே! என் நிபந்தனை யென்னவது!''

''என்ன நிபந்தனை?''

''பார்த்தீர்களா? 'ஒரு நிபந்தனையென்ன? ஓராயிரம் நிபந்தனைகள் போடு; நிறைவேற்றி வைக்கிறேன்' என்றீர்! அப்பப்பா! வாக்குறுதிகள் வழங்குவதிலும் அதைக் காற்றிலே பறக்க விடுவதிலும் இந்த ஆண்கள் மிகவும் சமர்த்தர்கள்போல் இருக்கிறது. 'என்னையும் மாங்கனியையும் யாராலும் பிரிக்கமுடியாது' என்று சத்தியம் செய்தீர். நாலு நாழிகை ஆகவில்லை!''

மாங்கனி நிகழ்ச்சி வள்ளிநாயகியின் உள்ளத்தில் எவ்வளவு சுவையான நினைவுகளைச் சேர்த்திருக்கிறது என்று நினைத்த மாத்திரத்தில் பெரிய தம்பியின் உடலெல்லாம் புல்லரித்தது.

''ஓ அதுவா! மாங்கனிதான் வள்ளிக் கிழங்கு ஆகிவிட்டதே!''

''உரக்கச் சொல்லாதீர்கள்! யாராவது சிரிக்கப் போகிறார்கள். கனி கிழங்காகுமா?''

'ஆகாதென்று சொல்லுபவர்கள் என் முன் வரட்டும்! பதில் சொல்லுகிறேன். இப்போது யாராவது, 'பிஞ்சு, பூவாயிற்று; மரம் மலர்க்கொடி யாயிற்று' என்று சொன்னால்கூட நம்ப மறுக்க மாட்டேன்!''

''நான்கூடத்தான் பழனியில் நீங்கள் ஆனூர்க் கோட்டையின் சாதாரணப் படைவீரர் என்று

சொன்னதும் அப்படியே நம்பிவிட்டேன். அப்பாவோ பெரிய இடத்துச் சம்பந்தத்திற்குத் துடியாய்த் துடிக்கிறார். என் உள்ளமோ மனங் கவர்ந்தவர் பின்னாலே சென்றுவிட்டது. அப்பாவின் ஆசைக்கு நான் இணங்குவது என்பதோ நான் உயிரோடிருக்கும் போது இல்லை. நெருப்புக்கும் நீருக்கும் மத்தியிலே தத்தளித்தேன். என்னால் அப்பாவுக்குப் பெரிய இடத்துப் பொல்லாப்பு வரப்போகிறது. உங்களுக்கும் ஆனூர்க்கோட்டையில் வேலை தொலையப்போகிறது என்று பயந்துகொண்டிருந்தேன்!''

"வேலை போயிருந்தால் வேறு வேலை சம்பாதித்துக் கொடுத்திருப்பாயா?''

"வேலையா? எங்களுக்குக் கொடுத்துவைக்க வேண்டுமே! முத்துவேலப்பரின் மாளிகையில் அருமை மாப்பிள்ளையாக அழைத்துக்கொள்ள இருந்தோம்!''

"நீயும்தான் மாங்கனியை மறந்து விட்டாய். முத்துவேலப்பரின் திருநிறைச் செல்வி வள்ளிநாயகி அம்மையாராகத்தான் அதிகாரத்துடன் பேசுகிறாய்!''

"இப்பவே மண ஓலை தயாரிக்க ஆரம்பித்து விட்டீர்கள் போல இருக்கிறது. திருநிறைச் செல்வி யெல்லாம் அப்போது வைத்துக்கொள்ளலாம். வந்த விருந்தினரை உணவருந்துங்கள் என்று கூடச் சொல்ல வில்லை. என்னையே நான் மறந்துவிட்டேன்!'

"நேரமாகிவிட்டது வள்ளி! நான் உடனே சென்று அண்ணாவைக் காணவேண்டும். சாப்பிடு வதற்கு நேரமில்லை!''

"நேரம் போகிறதே தெரியவில்லை. உங்களுக்கோ நேரமாகிவிட்டதாம்! அப்பாவைச் சந்திப்பதற்காக

வந்தேன் என்றீர்கள் ! மாலைக்குள் அப்பாவும் வந்து விடுவார் !"

"மகளையே சந்தித்து விட்டேனே ! இனி அப்பா எதற்கு ? நான் சந்திக்காததே நல்லது. அவரைக் காண்பது முறையுமல்ல. அண்ணனை அனுப்பு கிறேன்."

"அப்பாவிடம் என்ன கூறுவது ? தாங்கள் வந்ததாகச் சொல்லவா ?"

"வேண்டவே வேண்டாம் ! இந்த வேடிக்கை நம்மோடு இருக்கட்டும்."

"இல்லை. சொல்லத்தான் போகிறேன் !'

"என்ன சொல்லப் போகிறாய் ?"

" 'அப்பா ! நீங்கள் பார்த்திருக்கும் மாப்பிள்ளை மிகப் பொல்லாதவர் ! நமது மாளிகைத் தோட்டத் திலேயே மாங்கனி என்ற மாதுடன் சரசமாடக் கண்டேன். 'மாங்கனி ! என்னையும் உன்னையும் யாராலும் பிரிக்க முடியாது !' என்று அவள் கைமேல் அடித்துச் சத்தியம் செய்து கொண்டிருந்தார்'......"

"அத்துடன் நிறுத்தாதே ! 'மாவிலை மெத்தையிலே அவர் அமர்ந்திருந்தார். அவர் மடியிலே முகம் வைத்து அவள் படுத்திருந்தாள். அவரை விழுங்கிவிடுபவள் போல் பார்த்தாள். அவர் அவள் கூந்தலை லேசாகக் கோதினார்' — இதையும் சொல்லேன்."

"போங்கள் ! இதையெல்லாம் யாராவது......"

"போய் வருகிறேன், வள்ளி."

"நினைவிருக்குமல்லவா ?"

"மறந்து விட்டாலல்லவா உன்னை நினைக்க வேண்டும்? நீதான் நெஞ்சை விட்டு அகல மறுக்கிருயே!"

எழுந்து அவளருகே சென்ருன். வள்ளிநாயகி ஒதுங்கி நின்ருள். பெரியதம்பிதான், தந்தை பார்த்திருக்கும் மணவாளன் என்று தெரிந்தது முதல் அவளை அறியாமல் நாணம் கவ்விக் கொண்டது. மாங்கனியை மறந்தே விட்டாள்! பெரியதம்பி அவள் கரத்தைப் பற்ற முயன்ருன். அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டு, "கிணற்றுத் தண்ணீரை வெள்ளமா கொண்டுபோய் விடும்?" என்ருள்.

"வெள்ளம் கொண்டுபோய் விடாது; ஆனல் கிணற்று மேட்டிலுள்ள தொலைகல் இடிந்து விழுந்து கிணற்றையே மறைத்து விடுவது முண்டு" என்ருன் அவன்.

"கிணற்றுக்குச் சொந்தக்காரர்கள் ஜாக்கிரதை யாய் இருந்தால் அந்த ஆபத்தெல்லாம் நிகழாது" என்ருள் அவள்.

அவள் கருத்தைப் புரிந்துகொண்ட பெரியதம்பி அவளை விட்டுப் பிரிய மனமில்லாமல் வெளியே வந்து குதிரைமீது ஏறினன். வள்ளிநாயகி வாயில் தூணைக் கட்டிக்கொண்டு அவனையே உற்று நோக்கிக்கொண் டிந்தாள்.

சாதாரண நேரங்களில் குதிரை இடக்குச் செய்தால் கோபிக்கும் பெரியதம்பி, 'குதிரை இடக்குச் செய்யாதா; அதனல் கொஞ்சம் தாமதமாகாதா; அதற்குள் இரண்டு மூன்று முறை திருட்டுப் பார்வை பார்த்துவிடலாமே' என்று எண்ணினன்,

குதிரைக்கு வள்ளிநாயகியின் மனமிலே இருந்திருந்தால் அவன் கருத்துப்படி நடந்திருக்கும். பெரியதம்பி கடிவாளத்தைப் பிடித்ததும் அது காற்று வேகத்தில் பறந்தது. திருப்பத்தில் மறைவதற்குள் அவன் இரண்டு மூன்று முறை திரும்பிப் பார்த்தான்.

வள்ளிநாயகி குதிரை சென்ற திசையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். நெடுநேரமாகியும் அந்தத் தூணைவிட்டு அவள் நகரவேயில்லை. அவள் காதுகளில் குதிரையின் குளம்படிச் சத்தம் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

பெரும் வெற்றிக் களிப்பில் பெரியதம்பி ஊர் திரும்பினன். போரிலே எதிரிகளை முறியடித்து வெற்றிவாகை சூடி வீடு திரும்பும் நேரத்தில் மகளிரெல்லாம் அவன் பவனிகண்டு மகிழ்ந்து ஆரத்தி எடுத்திருந்தால் கூட அவ்வளவு மகிழ்ந்திருக்க மாட்டான்.

சின்னமலையைக் கண்டான். ஏதேதோ சொல்ல வேண்டுமென்று வந்தவன் வாயடைத்து நின்ருன். நா எழவேயில்லை.

அமைதியாக இருந்த சின்னமலை முத்துவேலப்பர் மாளிகையில் ஏதோ அசம்பாவிதம் நடந்து விட்டதோ என்று அஞ்சினன். பெரியதம்பி பேசாமல் இருப்பதைக்கண்டு அவனே துவங்கினன்.

"என்ன தம்பி! முத்துவேலப்பரைக் கண்டாயா? நான் தான் தவறு செய்துவிட்டேன். உன்னை ஒரு வார்த்தை கேட்டிருக்க வேண்டும். அவசரப் பட்டுவிட்டேன். நான் தான் அவசரக்காரனென்ருல் நீ அதைவிட அவசரக்காரனகிவிட்டாய். என்ன கூறினய்? அவர் என்ன சொன்னர்? அண்ணனுக்கு,

'பெண்' கேட்டாயா ? விசித்திரமான தம்பியப்பா நீ !" என்று அடுக்கிக்கொண்டே போனான்.

முந்தின நாள் கண்ட சின்னமலைக்கும் இன்று காணும் சின்னமலைக்கும் பெரியதம்பி பெரிய வித்தியாசத்தைக் கண்டான்.

"முத்துவேலப்பர் ஊரிலில்லை. நான் அவரைச் சந்திக்கவில்லை" என்றான் பெரியதம்பி.

"நல்ல வேளை ! என்னை இக்கட்டான நிலையில் விடாமல் இருந்தாய். நான் பார்த்துக் கொள்கிறேன். நீ கூறிய பெண்ணைப்பற்றி, பேர், ஊர், விவரம் ஒன்றுமே தெரியவில்லையா ?" என்றான் சின்னமலை. தான் திருமணம் செய்துகொள்ள விரும்பாததற்குக் காரணத்தைத் தம்பியிடம் விளக்கவேண்டிய வேலை குறைந்தது என்று நிம்மதிப்பட்டான்.

எப்படி ஆரம்பிப்பது என்று திக்குமுக்காடிக் கொண்டிருந்த பெரிய தம்பிக்கு, ஒரு பிடிகயிறு கிடைத்தது.

"முத்துவேலப்பரின் மகள்தான் நான் குறிப்பிட்டிருந்த பெண்" என்று தட்டுத் தடுமாறி நிறுத்தினான்.

சின்னமலைக்கு ஏதோ கதைகளிலே கேட்பது போல இருந்தது. அதிசயமும் ஆச்சரியமும் அவனைப் பின்னிக் கொண்டன.

"சரியாகப் பார்த்தாயா தம்பி? தவறிருக்காதே?" என்றான்.

"இல்லை. அவளே என்னிடம் பேசினாள். முத்துவேலப்பர் ஊரிலில்லை என்று அவள்தான் கூறினாள்" என்று சொல்லி நிறுத்தினான் பெரியதம்பி.

'தம்பியின் ஆசையும் நிறைவேறுகிறது. என் வாக்குறுதியும் நிறைவேறுகிறது. ஒரே கல்லில்

இரண்டு மாங்கனி' என்று மனத்திற்குள்ளே சொல்லிக்கொண்டான் சின்னமலை.

"சரி தம்பி, அண்ணுவைக் கலந்துகொண்டு மற்றதை நான் கவனிக்கிறேன்."

"அண்ணியாரிடம் சொல்லி வருகிறேன்" என்று கிளம்பினுன் பெரியதம்பி.

"அவர்கள் இங்கு இல்லை. ஊருக்குச் சென்று விட்டார்கள்" என்று நிறுத்தினுன் சின்னமலை.

"விடியற்காலை இருந்தார்கள். என்ன காரணம்? ஊரில் ஏதாவது..." என்ருன் பெரியதம்பி.

"ஊரில் ஒன்றுமில்லை; எல்லாம் உள்ளத்தில்தான்" என்று சொல்லிவிட்டு, "நீ போய்ச் சாப்பிடு" என்று சிந்தனையிலாழ்ந்தான் சின்னமலை.

# 11

ஆரியப்பட்டி ஆறுமுகக் கவுண்டர் எதையும் ஆழமாக ஆராய்ந்து பார்க்கும் போக்குடையவரல்ல. படபடத்த சுபாவக்காரர். வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை யென்றாலும் தங்கை வீடு தன் வீட்டிற்கு உயர்ந்தது என்ற லேசான பொறாமை இருந்தது. கெம்பாயம்மாள் அடிக்கடி அதிருப்திப் பட்டுக் கொண்டதை ஆறுமுகக் கவுண்டர் அறிவார். குடும்பம் என்றால் காலாகாலத்தில் ஒத்துப்போய் விடும் என்ற மேற்போக்கிலே இருந்தார்.

குழந்தை குட்டிகள் சகிதம் புருஷன் வீட்டிலிருந்து அவள் வந்துவிட்டது, அவருக்குப் பிடிக்கவில்லைதான். வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருந்தார்.

கெம்பாயம்மாளுக்கு மைத்துனர்கள்மீது ஏற்பட்ட கோபம் தனிமையில் வேகமாக வளர்ந்தது. ஏறக்குறையப் பழியுணர்ச்சியாகவே மாறிவிட்டது! அவள் புலம்பலும் அழுகையும் ஆறுமுகக் கவுண்டரிடம் பலிக்கவில்லை.

"குடும்பத்தில் இதுவெல்லாம் சகஜமம்மா! நீதான் அந்தக் குடும்பத்திற்குத் தலைவிபோல. குற்றம் குறை இருப்பதுதான்; கொஞ்சம் அனுசரித்துக் கொண்டு நடக்க வேண்டுமம்மா" என்று சொல்லி வைத்தார்.

கெம்பாயம்மாளுக்கு ஆத்திரம் தாங்கவில்லை.

"என்னை வற்புறுத்தாதீர்கள் அப்பா! தொந்தரவு செய்வீர்களானால் என்னையும் குழந்தை குட்டிகளையும் கிணற்றிலோ, குட்டையிலோதான் பார்க்கவேண்டியிருக்கும்!" என்று புதுப் பாணியைத் துவக்கினாள் கெம்பாயி. ஆறுமுகக் கவுண்டரின் பாச உணர்ச்சி, 'இவ்வளவு வெறுப்பாக மகள் கூறுவதற்குக் காரணம் இல்லாமல் இருக்க முடியாது' என்று எண்ணியது.

"என்ன வேண்டுமானால் இம்சிக்கட்டும். சொத்துக்களை வேண்டுமானால் நாசமாக்கட்டும். உங்கள் மருமகனுக்குத்தான் அக்கறையில்லை. நான்தான் வாழ்க்கைப் பட்டுவிட்டேன். உங்களை அவமானப் படுத்தினால் என்னால் சகித்துக்கொள்ள முடியுமா, அப்பா? சொல்லக்கூடாது என்றுதான் அடக்கி, அடக்கி வைத்தேன். முடியவில்லை" என்று தேம்பித் தேம்பி அழுதாள் அவள்.

"என்னம்மா! மூன்று குழந்தைகளுக்குத் தாய். சிறு பாப்பாபோல் அழுகிறாய். விஷயத்தைச் சொல்லு" என்றார் கவுண்டர்.

அவள் பீடிகையிலிருந்து தன் குடும்பத்தைப்பற்றி ஏதோ தாறுமாறுகப் பேச்சு நடந்திருக்கிறது; அதனுல் மகள் கோபித்துக் கொண்டிருக்கிருள் என்று முடிவு செய்துகொண்டார்.

அவருடைய ஆவலைக் கண்ட கெம்பாயம்மாள், "அப்பா! உங்கள் பேத்தி நல்லாத்தாளுக்கு என்ன வாம்! அவளைக் கட்டிக்கொள்ளக் கூடாதாம்! நம் குடும்ப சம்பந்தமே அவர்கள் அந்தஸ்துக்குக் குறை வாம்! அத்தோடு விட்டார்களா! உங்களையும் நம் குடும்பத்தையும் வாய்க்கு வந்தவாறெல்லாம் ஏசினுர்க ளப்பா, என் எதிரிலேயே! உங்கள் மருமகன்தான் சகித்துக் கொள்கிருர். நான் எப்படியப்பா சகிப்பது? உங்களுக்குப் பிறந்தவளாயிற்றே! என்னையும் உங்களையும் அவமானப்படுத்துவதற்கென்றே பெரிய தம்பிக்குச் சென்னிமலையில் பெண் பார்த்திருக் கிருர்கள்!" என்று உருக்கத்துடன் சொன்னுள்.

ஆறுமுகக் கவுண்டருக்கு நறுக்கென்று பட்டது.

'இருக்குமா, இருக்காதா?' — இதுபற்றியெல்லாம் சிந்தித்து அவருக்குப் பழக்கமில்லை. நல்லாத்தாளைத் திருமணம் செய்ய மறுத்ததுகூட அவருக்குக் கோப மில்லை. தன் குடும்பத்தை இழிவுபடுத்திப் பேசினுர்கள் என்பதை அவரால் பொறுக்க முடியவில்லை.

"அந்தப் பயல்களுக்கு அவ்வளவு அகங்காரமா? ஆரியப்பட்டியானைச் சரியாகத் தெரிந்துகொள்ள வில்லை. சிறுபிள்ளைகள்! அவர்களை ஒருகை பார்க் கிறேன். எல்லாம் புரிந்துவிடும்" என்று ஆணை யிட்டார், ஆறுமுகக் கவுண்டர்.

# 12

சென்னிமலைத் தேர் என்றால் தெரியாதவர் இருபது கல் தொலைவிலே இல்லை. ஆண்டுதோறும் அவ்வளவு சிறப்பாகத் தேர் உற்சவம் நடைபெறும்.

அக்கம்பக்கத்திலுள்ளோர் கட்டுச்சோற்று மூட்டையுடன் இரண்டு நாட்கள் முன்னதாகவே கிளம்பி வந்து திருவிழாவில் பங்குகொள்வர். ஊரைச் சுற்றிக் காடு கரைகளெல்லாம், பொட்டல் வெளியெல்லாம் வண்டிகளும் மாடுகளுமாய்க் காட்சியளிக்கும். சமையல் சாமான் செட்டுகளுடன் குடும்பம் குடும்பமாக நிலாச் சோறு விழாப்போல் குழுமுவர்.

சென்னிமலை முருகனுக்கு இவ்வளவு செல்வாக்கை ஏற்படுத்தியவர்களுக்கு அந்த ஊரார்

நன்றி செலுத்திக் கொண்டிருந்தனர். "எல்லா ஊர் களிலும்தான் தேர் இருக்கிறது. இந்தத் தேருக்கு ஈடாகுமா?" என்று பெருமையாகப் பேசினர்.

அருகே அமைந்துள்ள மலை முகட்டை, சவாலுக்கு அழைப்பதுபோல் சிறு குன்றமாய் அது அமைந் திருந்தது; அந்தச் சக்கரங்களின் உறுதியும் மேல் தட்டும், ஆயிரம் வேலைப்பாடமைந்த சிற்ப வேலைகளும், மரத்தின் வலிவும் தேர் செதுக்கியவரின் பக்தியின் அளவைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

தேரின் வடக்கயிற்றைத் திரிப்பதற்கு எவ்வளவோ மிஞ்சியும் தேங்காய்மூட்டையும் செலவாகி யிருக்க வேண்டும். தேரை இழுப்பதற்குப் பக்கத்திலே யிருக்கும் கிராமங்களிலிருந்து படைவீரர்கள்போல் ஆட்கள் வருவர். ஒவ்வொரு கிராமமும் இவ்வளவு ஆட்களை அனுப்பவேண்டும் என்ற விகிதாசாரக் கணக்கு இருந்தது. அந்தக் கட்டாய முறைபோய், தேரை இழுப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பதே கொடுத்து வைத்த பாக்கியம் எனக் கருதத் தலைப் பட்டனர்.

முற்றிலும் பூவால் அலங்கரிக்கப்பட்ட தேர் அசைந்து வருவதே மலை ஊர்ந்து வருவதைப்போல் காட்சியளிக்கும். ஆண்டவன் விக்ரகமும், அதன் அருகே தூபதீப கூட நைவேத்தியத்துடன் காட்சி யளிக்கும் பட்டர்களும் தனிப் பிரகாசத்துடன் மக்கள் கண்ணுக்குப் பட்டனர். எப்படியோ ஒரு பெரும் சிறப்பைப் பெற்றது சென்னிமலைத் தேர்.

கோவில் குருக்கள் குருசாமி ஐயரின் பாட்டி பர்வதத்தம்மாள் தனது கணவர் கணபதி சாஸ்திரிகள் தான் சென்னிமலை க்ஷேத்திர மகிமையை உலகறியச் செய்தவர் எனப் பெருமைப் பட்டுக்கொண்டாள்.

அருமைக்காரர் மகன் தனது தாத்தாக்களின் பெருந் தனத்திலேதான் சத்காரியம் பிராபல்யம் அடைந்தது என்று பண்ணையாட்களிடம் குடும்பக் கீர்த்தியைக் கூறுவான். யாரும் யாரையும் மறுக்க வில்லை.

அன்று தேரோட்டம். அலங்கார வேலைக ளெல்லாம் முடிந்துவிட்டன. வடக்கயிறு மலைப்பாம்பு போல் தரையிலே கிடந்தது. வட்டாரத்து மக்க ளெல்லாம் தேரோடும் வீதியில் திண்ணைகளிலும் மாடிகளிலும் நின்றனர்.

வாத்ய கோஷங்கள் முழங்கின. தேர் நகர ஆரம்பித்தது. திடகாத்திரம் மிகுந்த மல்லர்கள் தேர்க் கயிற்றைப் பிடித்து இழுத்தனர்.

குருசாமி ஐயர் அனைவருக்கும் மேலாக ஆண்டவ னருகே நின்றார். அவரது சிவந்த முகத்திற்குத் திருநீற்றுப்பட்டை அழகு கொடுத்தது; திருநீறுக்குமேல் சந்தனப் பொட்டு, அதன்மேல் குங்குமப் பொட்டு உட்கார்ந்திருந்தது. குடுமியை மேலே மடித்துக் கட்டி யிருந்தார். அவரருகே அவரது வாரிசுகள் பயிற்சி பெற்றனர்.

தேர் நகர ஆரம்பித்தது. மேல ரத வீதியில் பாதி சென்றிருக்கும். எள்போட்டால் எள்விழ இடமில்லை. இரண்டு நாழிகைக்கு ஆயிரம் அடிகூட நகரவில்லை. முன்னும் பின்னும் ஒரே ஜனத் திரள். இருமருங்கும் மகளிர் கூட்டம். குழந்தைகளை வைத் திருந்தோர் மிகச் சிரமப்பட்டனர்.

திடீரென ஐந்தாறு குதிரைகள் தேரை நோக்கி வந்தன. அவைகளில் நல்ல முரடர்கள் வல்லயத்துடன்

அமர்ந்திருந்தனர். அதனைக் குத்திக்கொண்டே தேரை அணுகினர். கூட்டம் திகைத்தது. கொஞ்சம் விலகியது.

ஒரு குதிரையில் ஒரு வாலிபனின் கைகள் பின்னாலே கட்டப்பட்டிருந்தன. அவன் சுய நினைவோடு இருந்தான் என்று சொல்ல முடியாது. அவனைக் கீழே இறக்கினான் ஒருவன். தேர்க்காலைப் பிடித்தான் வேறொருவன். தேர் உருண்டுகொண்டே இருக்கிறது.

கரங்கள் கட்டப்பட்டிருந்தவன் சுருண்டு கீழே விழுந்தான். அவனை ஒருவன் எடுத்து நிறுத்தினான்; மற்றொருவன் கயிறு வீசினான். இன்னொருவன் தேர்க் காலில் அவனைக் கட்ட முயன்றான். மடமடவென்று தேரின்மேல் ஏறிக் குடையைச் சாய்த்தான் ஒரு முரடன். குடை சாய்ந்தது; மக்கள் சிதறி ஓடினர்.

குருக்கள் குருசாமிஐயர் கீழே குதித்தார். உற்சவ மூர்த்தி புழுதியில் புரண்டது. ஐயரைக் கூட்ட நெரிசல் மிதித்துத் துவைத்தது. அருகே வர அஞ்சினர். தேர்க்காலில் அந்த வாலிபன் கட்டப்பட்டு விட்டான். தேரை இழுத்தவர் திரும்பிப் பார்த்தனர்.

பெண்கள் கதவுகளைச் சாத்திக்கொண்டு சாளரத்தின் வழியே பார்த்தனர். அவ்வளவு கூட்டமும் எங்கு ஓடி ஒளிந்ததோ தெரியவில்லை. வெற்றி விலாசத்துடன், "நமது வேலை முடிந்துவிட்டது" என்றான் முரடர்கள் தலைவன்.

இவ்வளவு நேரமும் யார் அந்த வாலிபன் என்பதை எவரும் கவனிக்கவில்லை. துணிந்தவன் ஒருவன் முன்னே வந்தான்.

"சின்னமலை அண்ணன்! சின்னமலை அண்ணன்!" என்று கத்தினான்; தேர்க்கால் அருகே பாய்ந்தான்,

முரடர்கள் தடுத்தனர். கொஞ்ச நேரம்தான் ஆர்ப்பாட்டம் பலித்தது. துணிந்தவனின் துணைவன் வந்தான். முரடர்கள் இருப்பது ஆபத்து என்று கம்பி நீட்டினர்.

கட்டை அவிழ்த்தனர். சின்னமலைக்கு இப்போது தான் ஏமாந்ததும் ஏளனத்திற்கு ஆளானதும் கொஞ்சம் புரிநதது.

தண்ணீர் தெளித்துப் படுக்க வைத்தனர். இபபோது கூட்டம் மொய்த்தது.

'சின்னமலையை யாரோ தேர்க்காலில் கட்டி விட்டனர்' என்ற சேதி காட்டுத்தீ போல் பரவியது.

சின்னமலையின் தங்கை மயிலாத்தாள் வாழ்க்கைப் பட்ட உலகபுரம் சென்னிமலைக்கு அருகேதான் உள்ளது. திருவிழாவிற்கு வந்த தங்கைக்குச் சேதி எட்டியது. ஓடோடி வந்தாள்.

"அண்ணா !" என்று கோவெனக் கதறினாள். அவனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கல்லும் உருகக் கண்ணீர் விட்டாள்.

"என் உடன் பிறப்பே ! உங்களைப்பற்றி எத்தனை தேனூறும் சேதிகளைக் கேட்டேன். 'தீரன் சின்னமலை யென்றால் திக்கெட்டும் பணியக் காத்திருக் கிறது. அவன் கோவைக் கோனாகும் நாள் வெகு தூரத்தில் இல்லை. சுட்டுவிரல் காட்டினால் போதும்; பட்டாளத்து வீரர் பாங்குடன் வருவர். இனி எத்தரின் கொட்டம் அடங்கும். ஆனூர் மரபில் இவனோர் அரிமா !' என்றெல்லாம் என்னிடம் புகழ்ந்தார்க ளண்ணா. அவர் பிறந்த வயிற்றில் பிறந்த தங்கை என்று கர்வம் கொண்டிருந்தேன். உங்களுக்கா இந்த

அவமானம்! அய்யோ! என்னுல் தாங்கமுடிய வில்லையே!

"எப்படியண்ணு இந்த இழிவைச் சகித்துக் கொண்டீர்கள்? என்ன வேதனைப் பட்டீர்களோ? இதற்குக் காரணமான தருக்கரைத் தண்டிக்காமல் மயிலாத்தாளின் மனம் அமைதியடையாது!

"ஊரறிய, உலகறிய உங்களைத் தாழ்த்தி விட்டதாக இறுமாப்புக் கொண்டுள்ள எதிரி யார் என எனக்குத் தெரியும்.

"ஆரியப்பட்டியானின் வேலை! தாய் மாமனும் மாமன்! தடியன்!

"அப்படியென்ன அவர் வீட்டு முதலைக் கொள்ளை யடித்தீரா? கொலை செய்தீரா? குற்றம் புரிந்தீரா? ஆரியப்பட்டியானுக்கே இந்த ஆணவம் என்றல் ஆனூர் மரபுக்காரிக்கு ஏன் ஆத்திரம் கொப்புளிக் காது? ஆரியப்பட்டியானே! தூங்கும் புலியை விழிக்கச் செய்துவிட்டாய். விளைவை அனுபவிப்பதற் குத் தயாராகிக்கொள்!

"நெருப்புடன் விளையாடுகிருய்! அது உன் வாழ்வையே சாம்பலாக்க இருக்கிறது. அந்தச் சாம்பலைப் பத்திரப்படுத்தி, சென்னிமலைத் தேருக்குத் திருநீருகக் கொண்டுவர இருக்கிருள் சின்னமலையின் தங்கை!

"இந்தக் கிழட்டு நரியைப் பழிக்குப் பழி வாங்காமல் வேறு வேலையில் ஈடுபட என் அண்ணனை அனுமதியேன்!" என்று வெறிபிடித்தவள்போல மயிலாத்தாள் கூச்சலிட்டாள்.

# 13

உலகபுரம் மயிலாத்தாள் வீட்டுத் திண்ணையில் கயிற்றுக் கட்டிலில் சின்னமலை படுத்திருந்தான். மயிலாத்தாள் துணியால் நனைத்து வெந்நீரை ஒத்தடம் கொடுத்துக்கொண் டிருந்தாள்.

சின்னமலையின் உடலில் ஏற்பட்ட இரத்த வரந்தைகள் மாடத்துச் சுட்டி விளக்குகளின் ஒளியில் பளிச்சென்று தெரிந்தன. பலமான காயம் ஏற்பட்டுள்ளது என்பதை மயிலாத்தாள் புரிந்துகொண்டாள். முதுகு முழுதும் வடக் கயிற்றின் முத்திரை பதிந்திருந்தது.

சின்னமலையைப் போன்ற திடகாத்திரனாய் இல்லாவிட்டால் முரடர்களின் தாக்குதலில் இந்நேரம் மாண்டிருப்பான் என்று எண்ணியபோது அவளையும்

அறியாமல் நாலு சொட்டுக் கண்ணீர் மளமளவென உதிர்ந்து அவள் கரங்களில் தெறித்தன. ஒத்தடம் கொடுத்த வெந்நீரைவிட அவை சூடாக இருந்தன. நல்லவேளையாகச் சின்னமலேயும் கவனிக்கவில்லை; வாசலிலே உலவிக்கொண்டிருந்த மயிலாத்தாளின் கணவன் பழனியப்பனும் கவனிக்கவில்லை.

பழனியப்பனுக்கு வயது முப்பது, முப்பத்திரண்டுதான் இருக்கும். ஆனால் ஐம்பது, அறுபது வயதுள்ள பெரியவர்களின் நிதானம் அவனிடம் இருந்தது. மைத்துனருக்குத் தான் வாழும் இடத்திற்கருகே அவமானம் நேர்ந்துவிட்டதே, தன்னால் தடுக்க முடியவில்லையே என்று மனம் புழுங்கினான். மயிலாத்தாளின் கொதிப்பும் அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. இவ்வளவு சாதுவான மயிலாத்தாளின் நெஞ்சத்தில் வீர உணர்வு கொழுந்து விட்டெரிவதை நினைத்த நேரத்தில் அவனை யறியாமலே பெருமைப் பட்டுக் கொண்டான்.

அதே நேரத்தில் சின்னமலேயும் தங்கையின் ஆத்திரத்தையும் உடன் பிறந்தவர்களிடம் அவளுக்கு இருக்கும் பற்றினையும் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. உடல் காய்ந்து கொண்டிருந்தது.

நிலைமைகள் சின்னமலைக்குப் புரிந்தன. ஆரியப் பட்டியானின் விபரீதச் செயல் தன்னுடைய முன்னேற்றப் பாதையில் இவ்வளவு பெரிய தடைக் கல்லாக வந்துவிட்டதே என்று வருந்தினான். ஒரு பெண்ணின் காரணமில்லாத கோபம் எவ்வளவு இடைஞ்சலை ஏற்படுத்திவிட்டது என்பதை நினைத்த நேரத்தில் அவன் சிந்தனையே அறுபட்டது.

'பெண்ணின் மனம் மென்மையானது என்கிறார்கள். அவ்வளவு மென்மையான மனத்தில் பகை உணர்வு முளை விட்டால் எவ்வளவு பயங்கரமாகி விடுகிறது! எதற்கும் துணிந்து விடுகிறார்கள். விளைவுகளைப்பற்றிக் கவலையே இருப்பதில்லை. அண்ணியின் கோபம் எவ்வளவு ஆபத்தில் இறக்கி விட்டு விட்டது! சேச்சே!

'அப்படியென்ன அவர்களுக்குக் கெடுதல் செய்து விட்டோம்? பாவம்! 'செய்வது என்ன; அது எத்தகைய விபரீதத்தை விளைவிக்கும்' என்பதையே தெரியாமல் விதைத்திருக்கிறார்' என்று மனத்திற்குள்ளேயே முனகிக் கொண்டான்.

மயிலாத்தாளின் மனநிலையே அவனுக்கும் இருந்தாலும் எத்தனையோ உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டான். உடல் வலியைவிட உள்ள வலி அதிகமாகத் தேவைப்பட்டது. அவ்வளவு நாளைய குடும்ப கீர்த்தி, மனத்திரையில் தீட்டியிருந்த எதிர்கால எழிற் சித்திரம் எல்லாம் தவிடு பொடியாவதாகப்பட்டது. உடல் முழுதும் கிடுகிடுவென ஆடியது. அப்படியே கண்ணயர்ந்து தூங்கிவிட்டான்.

விழித்தபோது வானம் வெளுத்துக்கொண்டிருந்தது. தலைமாட்டில் பெரியதம்பி சோகமும் கோபமும் கொப்புளிக்க நின்றுகொண்டிருந்தான். மயிலாத்தாள் கட்டில் காலருகே அமர்ந்திருந்தாள். பழனியப்பன் பழையபடியே உலவிக்கொண்டிருந்தான். 'இரவு முழுதும் யாரும் அங்கே தூங்கவில்லை; நமக்காகக் கண்விழித்துக் கொண்டுள்ளார்கள்' என்பதை அறிந்தபோது சின்னமலைக்குச் சிரமமாக இருந்தது.

பெரியதம்பி, சென்னிமலைத் தேர்க்கால் சம்பவத்தைக் கேள்விபட்ட உடனேயே காற்ருய்ப் பறந்து வந்தான். அவன் வந்து சேர்ந்த நேரம் சின்னமலை கண்ணயர்ந்து இருந்ததால் அந்த இடத்திலேயே வாய் பேசாது விடியும் மட்டும் நின்ருன்.

"அண்ணு ! அவ்வளவு கொழுப்பா அந்த ஆரியப் பட்டிக் கிழவனுக்கு ! இந்த அவமானம் நேர்ந்தும் நான் உயிரோடு உலவிக்கொண்டிருக்கிறேன், உங்கள் எண்ணத்தை மீறக்கூடாதே என்ற முறைக்காக. ஒரு வார்த்தை சொல்லுங்கள் ! இன்று சூரிய அஸ்தமனத்திற்குள் பனங்குலை போல் அவர்கள் தலையை வெட்டி வருகிறேன். உங்களைக் கயிற்ருல் கட்டிய கயவர்களின் கரங்களைக் கத்தையாகக் கட்டிக்கொண்டு வருகிறேன். எவ்வளவு திமிர், நெஞ்சழுத்தம் இருந்தால் இந்த விபரீதத்தில் ஈடுபட்டிருப்பார்கள் ! சின்னமலை அண்ணன் ! அந்த அற்பர்களுக்கு எங்கே தெரியும் உங்கள் அருமை ! அவ்வளவு சாமான்யமாக நினைத்து விட்டார்கள் ! இரவு வருவதற்குள் யாருடன் மோதிக் கொண்டார்கள் என்பதை நிரூபிக்கிறேன் !" என மளமளவென வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டேயிருந்தான். கொலை செய்யப் போகிறவனின் தோற்றம் அவன் முகத்திலே பிரதிபலித்தது.

"உன் தங்கைக்கு இளைக்காத அண்ணனுய் இருக்கிருய் ! கொஞ்சம் பொறுமை வேண்டும் தம்பி" என்ருன், இவ்வளவு நேரமும் வாய் திறக்காத பழனியப்பன். வாசலில் வந்து நின்ற குதிரை வண்டிச் சத்தம் யாருடைய வருகையையோ அறிவித்தது.

பழனியப்பன் வண்டியைநோக்கி, வந்தவரை வரவேற்கப் போஞன். முத்துவேலப்பர் வண்டியிலிருந்து இறங்கிஞர்.

மயிலாத்தாள் எழுந்து ஜமுக்காளத்தை எடுத்துத் திண்ணையில் விரித்து விட்டுக் கதவிற்குப் பின்புறம் ஒதுங்கி நின்ருள்.

"முத்துவேலப்பர்! முத்துவேலப்பர்!" என்று கூறிவிட்டுப் பெரியதம்பி கொஞ்சம் தூரமாகப் போனுன்.

சின்னமலை படுக்கையிலிருந்து எழுந்து உட்கார முயன்ருன். அதற்குள் முத்துவேலப்பர் அவனருகே வந்துவிட்டார்.

"படுத்துக்கொள் ளப்பா! சிரமப்பட வேண்டாம்" என்ருர்.

"ஒன்றும் சிரமமில்லை" என்று கூறிக்கொண்டே எழுந்து அமர்ந்தான் சின்னமலை. முத்து வேலப்பரையும் கட்டிலிலே உட்காரச் சொன்ஞன்.

முத்துவேலப்பரும் பெரியதம்பி பாணியிலே இருந்தார் என்பது அவரின் பேச்சுத் துவக்கத் திலேயே சின்னமலைக்கு விளங்கிவிட்டது.

"எல்லா விஷயமும் தெரிந்துதானப்பா வந்தேன். விடியட்டும் என்று காத்துக்கொண் டிருந்தேன். எங்களுடைய ஊர் எல்லையில் உனக்கு ஓர் அவமானம் என்ருல் எங்களுக்கே அவமானம். இருந்தாலும் துணிச்சலாகச் செய்திருக்கிருர்கள்.

"மாமன் — மருமகன் சண்டை; குடும்பத் தகராறில் மற்றவர் பிரவேசிக்கக்கூடாது என்ப தெலலாம் வாஸ்தவம்தான். ஆனல் இந்த விவகாரத்தில் நானும் சம்பந்தப்பட்டிருக்கிறேன். என் வீட்டில் பெண் பேச இருக்கிறீர்கள் என்ற பொருமையால்தான் இவ்வளவும் நடந்தது என்று சொன்ஞர்கள்.

"பெண் வைத்திருப்பவர்களும்தான் நாலு இடத்தில் விசாரிப்பார்கள்; கட்டிக் கொள்பவர்களுந்தான் எட்டு இடத்தில் விசாரிப்பார்கள். இதிலே என்ன புதுமை நடந்துவிட்டது! இருந்தாலும் என்னைக் கேலி செய்ய வேண்டுமென்றே சென்னிமலையில் அசம்பாவிதமாய் நடந்திருக்கிறார்கள்.

"முத்துவேலப்பன் என்றால் கொங்குநாட்டுப் பாளையங்கள் அத்தனையிலும் ஓர் அத்து இருந்தது. அதைத் தவிர்க்க முயன்றிருக்கிறார்கள்.

"சின்னமலை! ஆரியப்பட்டியார் உனக்கு மாமனாக இருக்கலாம். இதற்கு ஒரு பாடம் கற்பிக்காவிட்டால் நான் வெளியிலே தலைநீட்ட முடியாது. நீ தவறாக நினைத்துக் கொள்ளக்கூடாதே, உன் காதிலும் ஒரு வார்த்தை போட்டு விட்டு ஆகவேண்டியதைக் கவனிப்போம் என்று தான் வந்தேன்" என்று நிறுத்தினார்.

பாலும் வெற்றிலை பாக்கும் தட்டத்தில் கொண்டு வந்து வைத்தாள் மயிலாத்தாள்.

வழக்கம்போல் பழனியப்பன் வாய்பேசாது கவனித்துக் கொண்டே இருந்தான். பெரியதம்பி முத்துவேலப்பரைப் பார்த்ததில்லை.

"பாலை அருந்துங்கள். இவன் தான் பெரியதம்பி!" என்று அறிமுகப் படுத்தினான் சின்னமலை. பெரியதம்பியும் மரியாதைக்கு வணக்கம் செலுத்தினான்.

முத்துவேலப்பர் நுழைந்தது முதல் எப்போதும் இல்லாத சங்கோஜம் அவனைப் பிடித்துக்கொண்டது.

"இவன்தான் பெரியதம்பி!" என்று சொன்ன மூன்று வார்த்தைகளில் எவ்வளவோ பொருள்

அடங்கியிருந்தது. அந்த ஒரு கணத்தில் சின்னமலையின் உள்ளத்தில் எவ்வளவோ எண்ணங்கள் மின்ன லிட்டன. அதனைப் பெரிய தம்பியும் புரிந்து கொண்டான்.

சின்னமலை, இனிமேல் நடக்கவேண்டியவை குறித்து ஒரு முடிவுக்கு வந்தவன் போல் தென்பட்டான். ஆனால் முத்துவேலப்பரிடம் அவன் ஒன்றும் கூறவில்லை. அவரையும் அமைதிப் படுத்தினன். அவர் விடைபெறும்போது, "நாளை பெரிய தம்பியை அனுப்பி வைக்கிறேன். ஊரில் இருக்கிறீர்களல்லவா ?" என்றான்.

"அவசியம் வரச் சொல். காத்திருக்கிறேன்" என்று கூறி முத்துவேலப்பர் புறப்பட்டார்.

அண்ணனை அவமானப்படுத்திய செயல் பெரிய தம்பியின் மனத்தில் பெரும் புயலைக் கிளப்பி விட்டிருந்தது. முத்துவேலப்பரின் வருகை வள்ளி நாயகியின் இன்ப நினைவுகளைச் சுமந்து வந்தது. புயல் ஓய்ந்து தென்றல் வீசுவது போன்று அவனுக்குப் பட்டது. ஆனால் ஆரியப் பட்டியானின் தலையைக் கொய்துவா என்று ஆணையிடவேண்டிய அண்ணன் நாளை பெரிய தம்பியை அனுப்பி வைக்கிறேன் என்று முத்துவேலப்பரிடம் கூறி, தனது திசையை மாற்றியது ஆச்சரியமாய் இருந்தது. வள்ளிநாயகியைச் சந்திப் பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதிலே அவன் உள்ளம் மகிழ்ந்தாலும், நேர்ந்துவிட்ட அபகீர்த்தியை நினைத்து உள்ளம் துடித்தான்; சின்னமலையின் நோக்கம் தெரியாது திகைத்தான்.

முத்துவேலப்பரின் வண்டி மறைந்தது.

சிங்காதனத்தில் அமர்ந்திருக்கும் பட்டத்தரசன் போல் சின்னமலை கட்டிலில் அமர்ந்திருந்தான். ஏதோ சொல்லப் போகிருன் என்பது மட்டும் அங்கே இருந்த மூவருக்கும் விளங்கிவிட்டது.

"பெரியதம்பி! குருவி கூடு கட்டுவதைப் பார்த்திருக்கிருயா? எவ்வளவு சிரமப்பட்டு ஒவ்வொரு நாளாகச் சேர்க்கும்? கூடும் கட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொறித்திருக்கும்போது தடிகொண்டவன் கூட்டைக் கலைக்கிறன். அரைவிநாடி வேலை! ஆனல் குருவிக்கோ வாழ்வே இருண்டு முடிந்துவிடுகிறது.

"ஆத்திரம் நமது கண்களை மறைத்துவிடக் கூடாது.

"மயிலாத்தாளுக்கே அவ்வளவு ஆவேசம் என்ருல், முத்துவேலப்பருக்கே சீறும் சினமென்ருல் உன் ஆர்வம் அதிகமாகத்தான் இருக்கும்; அது தவறில்லை.

"ஆனல் நாம் தீட்டிக்கொண்டிருக்கும் எழிற் சித்திரம் என்னுவது? 'கொங்கு மண்டிலத்திற்கு வடக்கே திப்புவா, வெள்ளையரா?' என்ற போர் தீவிரமாகிறது. கொங்கு நாட்டிற்குள் இன்ருே நாளையோ போர்த்தீ பரவலாம்! தடுக்கவோ, அணைக்கவோ ஆற்றலைப் பெருக்காவிட்டால் நெருப்பின் ஆலிங்கனத்தில் வெந்து சாகவேண்டியது தான்.

"ஆரியப்பட்டி ஆறுமுகக் கவுண்டன், தீர்த்தகிரிக் கவுண்டன் என்ற வேறுபாடு பார்க்கப் போவதில்லை.

"எத்தனையோ தலைமுறைகளை அற்ப உணவுகளுக்காகச் சண்டையிட்டு இழந்துவிட்டோம்!

"ஆரியப்பட்டியானிடம் நமது முனையைத் திருப்பினால் லாபம் யாருக்கு? சிறிது நேரம் அற்ப சந்தோஷ வெறி கொண்டது நமது மனத்துக்கு நீடிக்கக் கூடியதல்ல. கொங்கு நாட்டுப் பாளையங்களை ஒன்றுக்கிக் கோவைக் கோட்டத்தில் தனிக்கொடி பறக்கவேண்டும் என்று நான் நாளும் கண்ட கனவு கனவாகவே முடியவேண்டியது தானா? ஆரியப் பட்டியானை மறக்கவேண்டியதில்லை. அந்தப் பகை நமது மனத்திலே இருக்கட்டும்.

"பெரியதம்பி! திடுக்கிடும் சேதி சொல்கிறேன் என்று கருதிவிடாதே! இன்னும் ஒரு வாரத்தில் நீயும் நானும் மைசூர் கிளம்புகிறோம். கொங்குநாட்டு மறவர்கள் ஐந்நூறு பேர்களை உடன் அழைத்துச் செல்லவேண்டும்.

"முத்துவேலப்புரை நாளைக் காலை போய் நீ சந்திக்கவேண்டும். போர்க்களத்திற்கு அஞ்சாத நூறு வாலிபர்களை ஒரு வாரத்திற்குள் அளிக்க வேண்டும் என்று என் சார்பில் கேட்டுக்கொள்! நிச்சயம் உதவுவார்.

"மகளின் திருமணம் ஒத்தி வைக்கப்படுகிறதே என்ற சஞ்சலம் இருக்கும்; எந்தத் தகப்பனுக்குத் தான் இருக்காது? பெரியதம்பி, அண்ணனின் சுபாவம் உணராதவனல்ல நீ. வேறு மார்க்கமில்லையடா!

"ஓர் ஆண்டுக் காலம்தான் போர் முறைகளில் தேறுவோம்; நல்ல படை வீரர்களாக மாறுவோம். பயிற்சி பெற்றதாயும் அமையும்; அந்நியனை விரட்ட உதவியதாகவும் முடியும்.

"திப்பு இப்போது தன் பக்கம் போரிடும் வீரர்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். நன்றி

புடன் வரவேற்பார். ஐந்நூறு பேர்கள் சேருவ தென்றால் போரின் போக்கே கூட மாறக்கூடும்!

"தம்பி! மணக்கோலத்திலிருக்க வேண்டிய உன்னைப் போர்க்கோலம் பூணச் சொல்லுகிறேன். முத்துவேலப்பரைச் சந்தித்தவுடன் மற்றக் கோட்டங் களில் நம்முடன் வருவதற்குத் தகுதியான நானூறு பேர்களைத் தயார் செய்து புறப்பட ஆயத்தப்படுத்து. அடுத்த வாரம் இதே நாளில் கொங்குநாட்டு மறவர் திப்புவின் படையில் சேர மைசூர் கிளம்பவேண்டும்" என்றான்.

# 14

சின்னமலை தன் புதிய திட்டத்தைச் சொல்லி விட்டான்.

பெருமழை பெய்து ஓய்ந்தமாதிரி இருந்தது. யாரும் வாய் திறக்கவில்லை.

மயிலாத்தாளின் ஆவேசம் கொஞ்சம் தணிந்திருந் தது. சின்னமலையின் உறுதியையும், எடுத்துக் கொண்ட முடிவில் அவன் காட்டும் பிடிவாதத்தையும் சிறு வயது முதலே மயிலாத்தாள் உணர்ந்திருந்தாள். அவனது முடிவை அவளால் மாற்ற முடியாது என்பது அவளுக்கு நன்ருகத் தெரியும். இப்போது அவளுக்கு இருந்த கவலையெல்லாம், ஆரியப்பட்டியானைப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணமல்ல. 'அண்ணன்

மார்கள் எங்கோ தொலைதூரத்தில் பட்டாளத்தில் சேரச் செல்லுகிறார்களே, இனி எப்போது அவர்களைக் காண்போம் !' என்பதுதான். அந்த நினைவுச் சுழலிலே அகப்பட்டுக் கொண்டு திண்டாடினாள்.

பழனியப்பன் முகத்தில் எந்த மாறுதலையும் காணோம். தான் எதிர்பார்த்தது நடந்ததுபோல் காணப்பட்டான்.

சின்னமலை முத்துவேலப்பரிடம் நாளை பெரிய தம்பியை அனுப்பி வைக்கிறேன் என்று சொன்ன போதே தனது திசையை மாற்றுவதாக உணர்ந்தான். அவர் சென்றதற்குப் பிறகு சின்னமலை கூறிய காரணங்கள் அவன் சிந்தையைக் கவர்ந்துவிட்டன. அண்ணனின் சொல்லுக்கு மறுசொல் கூறி அறியாதவன். கொஞ்ச நாட்களுக்கு முன்பு முத்துவேலப்பரிடம் சின்னமலை கொடுத்த வாக்குறுதி சம்பந்தமாய் அண்ணனிடம் முரண்பட வேண்டி வந்ததே என்று வருந்தியவன். மேலே அவன் யோசிக்கவில்லை.

"ஒரு வாரத்தில் கிளம்பவேண்டும் என்கிறீர்கள் ! இடையிலே இருப்பது ஐந்து நாட்கள்தான். நாளை வரை நான் இங்கு இருக்க வேண்டியதில்லை. இப்போதே கிளம்பிச் சில பாளையங்களில் நமது நண்பர்களைக் கண்டு உங்கள் கருத்தை எடுத்துச் சொல்லிவிட்டு நாளை முத்துவேலப்பரைச் சந்திக்கிறேன். அவரைப் பார்த்து விட்டு மற்றவர்களையும் திரட்டிக்கொண்டு ஆறும் நாள் ஓடா நிலைக்கு வந்து விடுகிறேன். ஏழாம் நாள் தங்கள் கட்டளையைச் சிரமேற்கொள்ள ஐந்நூறு பேர் காத்திருப்பார்கள்" என்றான்.

அவன் பேசிய உரையாடல் தலைமைத் தளபதி யிடம் துணைத் தளபதி சொல்லும் கூற்றாக இருந்ததே தவிர அண்ணன் தம்பி பேச்சாக இல்லை.

மயிலாத்தாளுக்கு ஏதோ நாடகத்தின் மத்தியில் இருப்பதாகப் பட்டது; சின்னமலை, பெரியதம்பியின் கருத்தை ஆமோதித்தான்.

பெரியதம்பி நிறைவேற்ற வேண்டிய கடமையின் பளுவை அவன் குதிரை எப்படி உணர்ந்ததோ ! அது மின்னல் வேகத்திலே பறந்தது.

கொங்கு நாட்டின் பல்வேறு ஊர்களிலும் சிலம்பக் கூடங்கள் இருந்தன. அங்கெல்லாம் இயற்கையிலேயே கட்டுமஸ்தான தேகம் படைத்த வாலிபர்கள் உடற் பயிற்சி பெற்றனர்.

கொத்திவிட்ட செம்மண் நிலத்தில் ஒருவரோ டொருவர் மல்லுக்கட்டிப் புரண்டு மல்யுத்தம் செய்து வலிமை பெற்றனர். ஓடி, தாண்டி, குதித்து, பாய்ந்து பல்வேறு வகை விளையாட்டுகளிலும் பயிற்சி பெற்றனர்.

கவணெறிதல், குறிபார்த்துச் சுடுதல் ஆகியவை களில் கவனம் செலுத்தினர். பளுவான கட்டைகளால் செதுக்கப்பட்ட மரத்துண்டுகள், இரும்பு குண்டுகள் ஆகிய கருவிகளெல்லாம் பயன்படுத்தப்பட்டன.

சிலம்பக் கலையில் சிறப்பான ஒன்று தடிவீச் சென்பது. தடிகாரர் என்ற ஒருவகை வீரர் உண்டு. தமிழகம் கண்ட படை முறைகளில் வாள் வீரர், குதிரை வீரர் ஆகியவர்களைப் போல் தடிகாரர் என்ற பிரிவினரும் பெரும் செயலாற்றியுள்ளனர்.

ஒரு வாலிபன் ஆறு அல்லது ஏழு அடி நீளமுள்ள நல்ல திடமான குச்சி ஒன்றைக் கையில் பிடித்துச்

சுழற்றிச் சுழற்றிப் பழகுவான். நல்ல பயிற்சியாளன் ஒருவன் முறையோடு தேர்ந்தவனாய் இருந்தால் பதினாறு மூலைகளிலிருந்து பதினாறுபேர் தாக்கினாலும் அவனை நெருங்கி அடிக்க முடியாது. அவனை அண்ட முயற்சிப்பவர்களைச் சுழற்றிச் சுழற்றித் துரத்துவான். அவனைத் தாக்க நினைப்பவர்கள் வேல்களையோ, ஈட்டிகளையோ, வீசி யெறிந்தாலும் அவன் உடம்பைத் தைக்காதபடி சுழல் குச்சி தடுத்துத் தடுத்துத் தூர எறியும் கலையில் கொங்குநாட்டு இளைஞர்கள் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர்.

அதேபோல் குச்சிக்குப் பதில் கத்தி, சுழல் கத்தி ஆகியவற்றைச் சுழற்றியும், அவை கொண்டு ஒருவரோ டொருவர், போரிட்டும் சிலம்பக் கலையை வளர்த்தனர்.

குச்சிக்குப் பதிலாகப் பந்தங்களைக் கொளுத்தி, நெருப்பு ஜுவாலை விட்டு எரியும் போதே சுழற்றும் முறையையும் தெரிந்திருந்தனர். பெரும் குழப்பங் களிலும், எதிரியின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் போதும், தற்காப்பிற்கும் தப்பிக்கவும் இந்த வழிவகைகள் பேருதவி புரியும் என்று நம்பினர்.

இத்தகு சிலம்பக் கூட வாலிபர்களின் இதயத்தில் சின்னமலை சகோதரர்கள் கொலுவீற்றிருந்தனர். அவர்கள் விரும்பாமலும், முயற்சி யெடுக்காமலுமே, அவர்களைத் தங்கள் தலைவர்களாகக் கருதத் தலைப் பட்டனர். அவர்களின் ஆணைப்படி நடப்பதற்குத் தங்கள் ஆருயிரையும் காணிக்கையாக்கத் தயாராக இருந்தனர்.

இந்தச் சூழ்நிலையைச் சின்னமலை நல்லவகையில் உணர்ந்திருந்தான். அவர்களோடு ஒரு சங்கிலித் தொடர்பு ஏற்பட்டது. பழக்கத்தால் ஏற்பட்ட பற்றும் பாசமும் அந்த நெருக்கத்தை இறுக்கின.

அன்று இரவே பெரியதம்பி, அண்ணனின் திட்டத்திற்கிருக்கும் அமோக ஆதரவைத் தெரிந்து கொண்டான். ஐந்நூறுபேர்களென்ன, ஆயிரம்பேர் கூட ஏழாம் நாள் காலையில் சின்னமலை குதிரை ஓடும் அடிச்சுவட்டைப் பின்பற்றத் திரண்டுவிடுவார்கள் என்ற நம்பிக்கை பிறந்தது.

முத்துவேலப்பரிடம் நூறுபேரை அனுப்பி வையுங்கள் என்று கேட்டிருக்க வேண்டியதில்லை என்று நினைத்தான். ஒருகண நேரம்தான்! ஆனால் முத்துவேலப்பரைச் சந்திக்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதால் வள்ளிநாயகியைக் காண முடியும் என்று நினைத்த நேரத்தில் எங்கோ கற்பனை லோகத்தில் பறந்து கொண்டிருந்தான்.

வள்ளிநாயகியைக் காணப்போகிறோம். ஆனால் மீண்டும் பிரியப்போகிறோம் என்று நினைத்த நேரத்தில் அவன் உடம்பெல்லாம் சில்லிட்டது.

'ஒரு வருடம் எத்தனை யுகங்களாகத் தோன்றும் அந்த யுவதிக்கு! நான் திரும்பி வரும்வரை காத்திருப்பாளா? எத்தனை வேதனை என்னால்! இன்பம்தான் அளிக்க முடியவில்லை ஏந்திழைக்கு. துன்பமாவது தொடராமல் இருக்க வழி செய்ய முடிந்ததா? சேச்சே!

'வள்ளிநாயகி விவரம் புரியாதவளல்ல. நான் மேற்கொண்டுள்ள கடமையின் சிறப்பைக் கண்டு பெருமை கொள்வாள். நான்தான் கலங்குகிறேன். என் காதலி கலகலவெனச் சிரித்து, 'சென்று வாருங்கள் கண்ணாளா. காலமெல்லாம் தங்கள் வருகைக்காகக் காத்திருப்பேன். தமிழ் மறக்குடி மகளிர் வீரத்தின் விரோதிகளல்ல. தங்கள் தலைவர்கள் போகக்

களத்திலே புரளட்டும்; போர் முகமே செல்லக் கூடாது என்று கூறும் இன்பம் நாடிகளல்ல; ஒப்புக்காகச் சொல்லவில்லை; என் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து கூறுகிறேன்' என்று சொல்வா ளென்றும் அவன் மனத்திலேயே வேருேர் குரல் ஒலித்தது. அன்று இரவு முழுதும் அவன் தூங்கவில்லை.

இருள் நீண்டுகொண்டே இருந்தது. விடிவதாகக் காணேம். அவன் எண்ணங்களும் நீண்டுகொண்டே யிருந்தன.

நேரம் ஆக ஆக, வள்ளிநாயகியை ஒருவேளை சந்திக்க முடியாத நிலை ஏற்படலாம் என்ற பயம் தொத்திக் கொண்டது. அந்தப் பாதையைத் தொடர்ந்து அவன் சிந்தனை ஊர்ந்தது.

'வள்ளிநாயகி என் கண்ணில் கூடப் படலாம். ஆனுல் அவளிடம் நான் நிதானமாய் உள்ளத்தைக் கொட்டுவதற்கு உரிமை ஏது? யார்தான் அனுமதிப் பார்கள்?' என்று கேள்விகளைத் திட்டிக்கொண்டான்.

பதில் அளிக்க வேறு யார் இருக்கிருர்கள்? அவனேதான் விடை கண்டுபிடித்தாக வேண்டும்! விசாரம் அவனைக் கவ்வியது.

இருளின் ஆதிக்கம் நீடித்துக்கொண்டே இருக்க முடியுமா? விடிந்துதானே ஆகவேண்டும்?

அருணேதயத்தின் ஒளிக் கீறல்கள் கிழக்கு வானத்திலே தோன்றின.

உதய சூரியனுக்கு ஆயிரம் நன்றி கூறினுன். முத்து வேலப்பரின் மாளிகையை நோக்கிப் புறப் பட்டான். எவ்வளவோ துடிப்புடன் கிளம்பினுன். ஆனுல் மாளிகையை நெருங்க நெருங்க ஏதோ

தவிர்க்க முடியாத கடமையை நிறைவேற்றுபவன் போல் காணப்பட்டான்.

ஏற்கெனவே முத்துவேலப்பரின் மாளிகைக்கு வந்துள்ளான், பெரியதம்பி. இருப்பினும் முத்து வேலப்பரிடம் அப்போதுதான் புதிதாக வருவதுபோல் பாவனை செய்ய வேண்டிய பொறுப்பு அவனிட மிருந்தது. அதற்குத் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டான்.

முத்துவேலப்பர் வரவேற்புக்குக் காத்திருந்தார். ஆனால் பெரியதம்பி என்ன சேதி கொண்டுவரப் போகிறான் என்பதிலே அவருடைய யூகம் சரியாக அமையவில்லை. விஷயத்தைக் கூறி, “நூறுபேரை அனுப்பி வைக்க வேண்டும்” என்றான்.

முத்துவேலப்பரின் தலை சுற்றியது. நூறு ஆட்க ளென்ன, முன்னூறு ஆட்களைக் கூட அனுப்ப முடியும் அவரால். ஆனால் ஓர் ஆண்டு வள்ளிநாயகியின் திருமணம் ஒத்திப்போடப்படுகிறது. அதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவசரக்காரராய் இருந்தால் உளறிக் கொட்டியிருப்பார்கள். ஆனால் முத்து வேலப்பர் அனுபவம் மிக்கவர். சாமர்த்தியமாகத் தனது உணர்வுகளை மறைத்துக்கொண்டார்.

அதுவரை கதவிடுக்கிலே நின்று கொண்டிருந்த இரண்டு விழிகளைக் காணோம். விம்மி யாரோ அழும் குரல் கேட்டது. முத்துவேலப்பருக்கும் பெரிய தம்பிக்கும் விஷயம் புரிந்தது. முத்துவேலப்பர் உள்ளே ஓடினார்.

“என்னம்மா சத்த அசடாக இருக்கிறாயே!” என்றார் முத்துவேலப்பர்.

வள்ளிநாயகி விக்கி விக்கி அழுதாள், சிறு குழந்தை போல. அவர் பாடு தர்மசங்கடமாகி விட்டது.

"முகத்தை அலம்பிக்கொண்டு சிற்றுண்டி பரிமாறம்மா" என்றார் முத்துவேலப்பர்.

இதுவரையில் இல்லாத புதுமுறைதான். எனினும் அழுதது வள்ளிநாயகியல்ல என்பதை நிரூபிக்க இந்த வழியைக் கையாண்டார்.

வள்ளிநாயகி சமாளித்துக் கொண்டாள். சிற்றுண்டி முடிந்தது. முத்துவேலப்பர் நகருவதாய் இல்லை. பெரியதம்பியிடம் தனியாகப் பேசமுடியாது என்ற முடிவுக்கே வந்துவிட்டாள் வள்ளிநாயகி.

நல்லவேளை! பண்ணையாட்கள் வாயிலிலே வந்து நின்றார்கள். அதுவரை வாயைத் திறக்காத வள்ளிநாயகி, "அப்பா, ஆள்காரர்கள் வாசலில் வந்திருக்கிறார்கள்!" என்றாள்.

"தம்பி! இதோ வந்து விடுகிறேன்" என்று வெளியே போனார். வள்ளிநாயகியும் அவர் பின்னாலே வந்தாள். அந்த நேரம் வள்ளிநாயகியின் கரத்தில் சிறு ஓலையைப் பெரியதம்பி நீட்டினான். அந்த ஓலையை வாங்கி முன்றானையால் மறைத்துக் கொண்டு ஓடி விட்டாள்.

முத்துவேலப்பர் திரும்பி வந்தார். உள்ளே ஓடிய வள்ளிநாயகி புதையல் கண்டெடுத்தவள் போல் என்ன எழுதியிருக்கிறது என்று பரபரப்புடன் படித்தாள்.

"நாளை இரவு இரண்டாம் சாமத்தில் மாமரச் சோலையில் சந்திக்கிறேன்.

—உன் அத்தான்,"

ஓலையை உடனே மடியில் செருகிக்கொண் டாள். வெளியே ஓடி வந்தாள்.

சந்தேகம் வந்துவிட்டது. திரும்பவும் போய் ஒரு முறை படித்தாள். ஓலையை மறைத்து வைத்துக் கொண்டாள். பெரியதம்பி போய்விடுவாரே, அதற்குள் அவரைக் கண் குளிரக் காண வேண்டுமென்று ஓடி வந்தாள்.

"சரி, தம்பி, சின்னமலையின் விருப்பப்படி நூறு வீரர்கள் முந்தின நாளே ஓடா நிலைக்கு வந்து விடுவார்கள்" என்று பெருமூச்சுடன் கூறினார்.

பெரியதம்பிக்கு வள்ளிநாயகியிடம் ஓலையைக் கொடுத்துவிட்டோம் என்ற பூரண திருப்தி. அவன் புறப்பட்டான்.

'நாளை இரவு இரண்டாம் சாமத்தில் மாமரச் சோலையில் சந்திக்கிறேன்'.

இந்த வாசகங்களை நூறு முறை படித்திருப்பாள். ஆயிரம் முறை மனத்திலே உச்சரித்திருப்பாள். அந்த நாள் இரவுக்காகக் காத்திருந்தாள்.

அது வழக்கப்படி வந்தது. ஆனால் அவளுக்கோ மெதுவாக ஊர்ந்து வந்ததாகப் பட்டது.

'நாளை இரவு' வந்தது. ஆனால் அவன் வரவில்லை; கோபம் வந்தது. ஓலையைப் படித்தாள். 'நாளை இரவு......சந்திக்கிறேன்' என்றிருந்தது. மறுநாளும் நட்ட நடுநிசியில் காத்திருந்தாள், அவன் வரவில்லை.

# 15

மூன்றும் நாளும் வள்ளிநாயகி மாமரச் சோலை யிலே காத்திருந்தாள். அவன் வரவில்லை.

எத்தனை நாள்தான் சலிப்புடன், 'நாளை இரவு இரண்டாம் சாமத்தில் மாமரச் சோலையில் சந்திக் கிறேன். உன் அத்தான்' என்ற ஓலையைப் படித்தாள்! 'நாளை இரவு......'என்று துவங்கிய வாசகங்களுக்குப் புதிய பொருளைக் கண்டுபிடித்தாள்.

'ஒருவேளை அத்தான் குறிப்பிட்டபடி வர இயலாமல் போனால் 'நாளை இரவு' என்ற நம்பிக் கையிலே நான் மறுநாளும் காத்திருக்க வேண்டும் என்ற கருத்திலே எழுதியிருக்கலாம். இருந்தாலும் நான் அவசரக்காரி! போன இடத்தில் என்ன சிரமங்களோ! வேலை முடிந்திருந்தால் அப்படி என்ன

பொழுதுபோக்கிக் கொண்டா இருப்பார்? எத்தனை காத தூரமானாலும் பறந்து வந்துவிட மாட்டாரா? நாளை படை மைசூர் கிளம்ப இருக்கிறது. இன்று பகலே நம்முடைய வீரர்கள் அப்பாவிடம் விடைபெற்றுச் சென்றனர். எப்படியும் இன்று கட்டாயம் வருவார்' என்று மனத்தைச் சமாதானப் படுத்திக்கொண்டாள்.

இரண்டாம் சாமம் வந்ததும் அவளை யறியாம லேயே கால்கள் மாமரச் சோலைப்பக்கம் நகர்ந்தன.

கொஞ்ச நேரம்தான் காத்திருந்தாள். ஏற்கெனவே அவள் உள்ளத்திலே ஏற்பட்டிருந்த ஏமாற்றத்தினால் நெடுநேரம் ஆகிவிட்டதுபோல் அவளுக்குத் தோன்றி யது. ஓலையை எடுத்து மீண்டும் படித்தாள். எங்கே படித்தாள்? அதுதான் அவளுக்கு மனப்பாடமாய் இருந்ததே! 'நாளை இரவு' என்ற வார்த்தைகளை உச்சரித்தாள்.

"நாளை இரவு எப்படி சந்திக்க முடியும்? இனியும் நான் ஏமாற்றிக்கொள்ளப் போவதில்லை. நாளை இரவு அவர் மைசூர் மண்டிலத்தைச் சந்திப்பார்" என்று சொல்லிக்கொண்டே ஓலையை வெறிபிடித்தவள்போல் கசக்கி வேகமாக எறிந்தாள்.

'கொஞ்சதூரம் சென்று கீழே விழும்; மீண்டும் எடுத்துக்கொள்ளலாம்' என்ற கள்ள எண்ணம் அவளுக்கு இருந்தது.

அவள் கோபத்தில் எதிரே நடந்ததைக் கவனிக்க வில்லை ஓலை கீழே விழவில்லை. வீசியெறிந்த ஓலையைப் பந்தைப்போல் பெரியதம்பி பிடித்தான்.

"என்மீது காட்டிட வேண்டிய கோபத்தை ஓலை மீது காட்டினால் பாவம், அந்த ஓலை என்ன செய்யும்? உனக்குக் கொஞ்சமாவது நன்றியிருந்ததா? இந்த

நாலு நாளும் 'நாளை இரவு,' 'நாளை இரவு' என்று கூறி எவ்வளவு நம்பிக்கையூட்டும் நண்பனாய் இருந்தது! அதற்கு நீ செய்யும் உபகாரம்...'' என்று சொல்லி நிறுத்தினான்.

பெரியதம்பியின் வேடிக்கையை அவள் ரசித்த தாகத் தெரியவில்லை.

அவன் மார்பின்மீது தலையைப் புதைத்துக் கொண்டு சிறு குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுதாள்.

இந்தப் புதிய கட்டத்தை அவன் எதிர்பார்த்து வந்தவனல்ல. சமாளிக்கத் தெரியாது விழித்தான்.

"நான் அப்படித்தான் உங்களை வீசியெறிவே னுக்கும்! நீங்கள்தான் என்னை வீசி எறிந்து விட்டீர்கள்! இல்லாவிட்டால் இவ்வளவு தவிக்க விட்டிருப்பீர்களா? இங்கேயே, கொங்கு நாட்டி லிருந்தே உங்கள் வாக்குப்படி நடக்க முடியவில்லை. இனி மைசூர் மண்டிலமும் சென்றுவிட்டால் அவ்வளவு தான்! அய்யோ! பெண்ணாகப் பிறக்காமல் இருந் தாலே எவ்வளவோ நன்றாயிருக்கும்!''

''ஏன், பெண்ணாகப் பிறக்காமல் இருந்தாலே நன்றாயிருந்திருக்கும்; பிறந்தாலும் பெரியதம்பியைச் சந்திக்காமல் இருந்தால் நன்றாய் இருந்திருக்கும்; சந்தித்தாலும் அவன்மீது காதல் கொள்ளாமல் இருந்தால் நன்றாய் இருந்திருக்கும்; காதல் கொண்டாலும் அவன் ஓர் போர் வீரனாய் இல்லாமல் இருந்தால் நன்றாய் இருந்திருக்கும்; அதையும் சொல்லேன்!''

"நான் ஏன் அப்படிச் சொல்லப் போகிறேன்? புறநானூறு படித்தவள். என் காதலர் போர் வீரர் என்பதிலே எனக்கு எவ்வளவோ இறுமாப்பு!

"முதுகிலே காயம் பட்டு இறந்தான் தன் வயிற்றி லுதித்த மகன் என்று கேட்டபோது பதறி எழுந்து, 'அப்படியாயின் அந்தப் பேடிக்குப் பாலூட்டிய மார்பகத்தை அறுத்திடுவேன் !' என்று களம் நோக்கி ஓடினளாமே ஒரு தாய் !

"முதல்நாள் அருமை அண்ணன் இறந்தான். இரண்டாம் நாள் ஆருயிர் மணாளன் இறந்தான். இருப்பினும் மூன்றும் நாள் போர்ப்பறை கேட்டவுடன் பாறு மயிர் குடுமி எண்ணெய் நீவி, தான் பெற்ற ஒரே மகனைச் செருமுகம் நோக்கிச் செல்க என அனுப்பினளாமே வேறோர் அன்னை !

"எதிரியின் அம்பால் தாக்குற்ற வீரன் ஒருவன் தரைமீது சாயப்போனான். ஓடி வந்தாள் அவனது இதயராணி. வெறி நிறைந்த காதலி அவள். தனது தலைவனை அணைய நிலமடந்தைக்கு இடம் கொடுக்கக் கூடாதாம் ! தானே அணைத்துத் தாங்கினள்.

"நாதனின் ஆவி பிரிந்தது. அரை விநாடி பொறுக்கவில்லை. தனது உயிரையும் விட்டாள். ஏனென்றால் வீரனாகிய அவள் கணவனுடைய ஆவி யுடன் தேவலோக மாதர்கள் கூடிவிடுவார்களாம் ! அதற்காக அவனுக்கு முன்னே அவள் ஆவி இருக்க வேண்டுமாம் ! என்ன பொறாமை அவளுக்கு ! கலிங்கத்துப் பரணியிலே வரும் இந்தக் காட்சியின் பாடலாகிய,

தரைமகள் தன்கொழு நன்றன் உடலந்தன்னைத்
தாங்காமல் தன்னுடலாற் றாங்கி விண்ணாட்டு
அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்
ஆவிஒக்க விடுவாளைக் காண்மின் ! காண்மின் !

என்ற வரிகளை அப்பா அடிக்கடி சொல்லி ஆனந்தப் பட்டுக்கொள்வார்!

"மகளே! கவிஞனின் கற்பனை என்று கருதி விடாதே. நீ பிறந்த தமிழகத்துத் தாய்க்குலத்தினது உள்ள நிலையின் படபிடிப்பு என்று விளக்கம் கூறுவார். இன்னுமொரு கருத்தையும் திரும்பத் திரும்ப வீரம் ததும்பச் சொல்லுவார். வெற்றியன்றி வேறறியா வீரன் வீழ்ந்து விட்டானும். காதலி தேடி வந்தாளாம். தலை மட்டும்தான் கிடைத்ததாம்! வீரக் கரங்களைக் காணவில்லை. வெற்றி வாளைக் காணவில்லை. குன்று போன்ற தோளைக் காணவில்லை. குலவும் கோல மார்பைக் காணவில்லை. துடித்தாள். பித்துப் பிடித்தவள்போல் அரற்றினுள்.

பொருதடக்கை வாளெங்கே? மணிமார்பெங்கே?
போர் முகத்தில் எவர்வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே? எங்கே?
என்று கேட்பாளைக் காண்மின்! காண்மின்!

என்று அப்பா கூறும்போது ஆவேசம் பிடித்தவராக ஆகிவிடுவார்!

"அத்தான்! இத்தகு தங்கத் தாய்மார்கள் பிறந்த மண்ணிலேதான் இந்த வள்ளியும் தோன்றி யிருக்கிருள். அவர்களது பாரம்பரியம் எனது இரத்தத்திலும் சிறிதாவது ஊறியிருக்காதா?" என்ருள்.

"வள்ளி! நான் என்னவோ நினைத்தேன்! போர்க்களத்துக்கே கிளம்பிவிடுவாய் போலிருக் கிறது!"

"அத்தான்! உங்கள் அனுமதியிருந்தால் அங்கும் இந்த வள்ளி தொடருவாள்."

"நல்லவேளை ! கொங்கு நாட்டில் குமரர்களுக்குப் பஞ்சம் வந்துவிடவில்லை. கோதையர் போரிட்டு நாட்டைக் காக்க வேண்டிய நிலை வந்துவிடவில்லை."

"பார்த்தீர்களா ! கோதையர்கள் என்றால் ஒருபடி இறக்கமாகத்தான் தெரிகிறது, ஆண் குலத்திற்கு. 'அன்பே ! ஆருயிரே ! நீ வேறு, நான் வேறல்ல. நம்மிலே உயர்வு தாழ்வு கிடையாது' என்றெல்லாம் ஒப்புக்குப் பெண்ணை மயக்கப் பேசுவர் ! ஆனால் தாங்கள் மட்டும் உயர்வு என்ற எண்ணம் இதயத்தின் அடித்தளத்திலே பதுங்கி யிருக்கிறது. அவர்களையும் அறியாமல் காட்டிக் கொடுத்துவிடுகிறது" என்றாள் வள்ளிநாயகி.

"விவாதத்தில் இறங்க நேரமில்லை, கண்ணே ! விடியப்போகிறது. எல்லா வீரர்களும் நேற்று மாலையே ஓடாநிலை வந்து சேர்ந்துவிட்டனர்.

"வேடிக்கை ஒன்று கேள் ! நான் வரும் வழியில் உன் அப்பா அனுப்பி வைத்த நூற்றுவர் எதிரே போய்க் கொண்டிருந்தனர். தூரத்திலேயே கவனித்து விட்டேன். அவர்களைத் தாண்டி வர முடியாது. பக்கத்திலே குதிரையைத் திருப்பினேன். அவர்கள் மறையும் வரை புதரின் பின்புறம் ஒதுங்கி நின்றேன். உடம்பெல்லாம் வியர்த்து விட்டது. திருடன்போல் எனது மனநிலை இருந்தது ! அவர்கள் ஏதோ பேசிச் சென்றார்கள். என்னைத்தான் கண்டு கொண்டு குறும்பு பேசுவதாக எனக்குப் பட்டது."

"திருடர்தான் ! அதிலே உங்களுக்குச் சந்தேகம் வேறா ? அர்த்தராத்திரியில் அன்னியரின் மாளிகையில் அனுமதியின்றித் திருடர்கள்தான் நுழைவார்கள் ! எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. இந்தத் திருட்டு வாழ்க்கைக்குச் சீக்கிரம் முற்றுப்புள்ளி வையுங்கள்."

"கண்மணி! வாழ்வு ஓடை குறித்த கோட்டில் ஓடுவதில்லை. எதிர்பாராத நிலைமைகள் எதிர்பாராத விளைவுகளைத் தருகின்றன. ஆனால் நாம் குறித்தபடியே நடப்பதாக இருந்தால் மனித சமுதாயமே கால அட்டவணைப்படி நடக்கும் இயந்திரக் கூட்டமாய் ஆகியிருப்பார்கள். பழனியில் கார்த்திகை தீபத்தின் போது நான் வந்தது வேறு வேலைக்கு. எதிர்பாராமல் உன்னைச் சந்தித்தேன். அப்படிச் சந்திக்காவிட்டால்..."

"போதும்! போதும்! 'போருக்குச் செல்ல வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. எதிர்பாராமல் வந்துவிட்டது. பொறுத்திரு கண்ணே! விரைவில் வெற்றியோடு வருகிறேன்' என்று சமாதானப்படுத்த முயல்கிறீர்கள்!"

"என் வேலையைத் தான் குறைத்து விட்டாயே! தாய்க் குலத்தின் வீரத் தியாக குணத்தை மட்டும் சுட்டிக் காட்டினாய். ஆனால் போர்க்களத்திலே வெற்றி மாலையுடன் வீடு திரும்பும் தலைவனை வரவேற்கக் காத்திருக்கும் வனிதாமணியின் பெருமிதத்தையும் நீ கற்றுத்தான் வைத்திருப்பாய்! காத்திரு என் கருத்திலமர்ந்தவளே! ஓர் ஆண்டு — அதாவது பன்னிரண்டு திங்கள். ஒரே நொடியில் பறந்துவிடும். நம் வாழ்வில் இருளே சூழாது. விடிவெள்ளியும் தோன்றிவிட்டது. விடியப்போகிறது. அவர்களெல்லாம் விழிப்பதற்கு முன்பு நான் சென்று ஆயத்தமாக வேண்டும். விடை கொடு கண்ணே!" என்றான்.

இவ்வளவு நேரம் வீரமாகப் பேசினவள் மீண்டும் அவன் மார்பில் முகத்தை புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

அடிபட்ட புறாவை மெதுவாகத் தடவுவது போல அவ்வளது கூந்தலை விரல்களால் மெல்லக் கோதினான்.

வள்ளிநாயகியின் இதயபாரம் அவனுக்குப் புரிந்தது. அவன் கரங்களில் இருசொட்டுக் கண்ணீர் பொல பொலவென உதிர்ந்தது. முன்றானையால் அவளது கன்னங்களில் வழிந்த விழி நீரைத் துடைத்தான்.

"போகும்போது புன்னகையுடன் வழியனுப்ப வேண்டும். கண்ணீர் கூடாது!"

"சரி அத்தான்! சென்று வாருங்கள்."

கண்ணீரும் புன்னகையும் ஒன்றையொன்று மருவ, பெரியதம்பி, கடமை உந்த, அவளிடம் பிரியா விடை பெற்றான்.

ஓடாங்கலை எல்லை வந்து சேரும்போது விடிவதற்கு இரண்டு நாழிகைகள் தான் இருந்தன.

விரைவாக எழுந்துவிட்டவன் போல் வீரர்கள் தங்கியிருந்த ஒய்வுச்சாலைப் பக்கம் குதிரையை ஓட்டினான். பலர் அந்த நேரத்திலே விழித்துக் கொண்டிருந்தனர்.

சின்னமலை முந்தின நாள் இரவே உலகபுரத்தி லிருந்து மயிலாத்தாளிடமும் பழனியப்பனிடமும் கூறி விட்டு வந்து சேர்ந்தான். அவன் உடல் முழுதும் புதிய உற்சாகம் பரவியிருந்தது. சின்னமலையின் கண்கள் நம்பிக்கை ஒளியை உமிழ்ந்தன. வீரர்களையெல்லாம் பார்வையிட்டான். மேலும் தெம்பு பெற்றான்.

காலை மலர்ந்தது. நொய்யலாற்றில் நீராடி வீரரெல்லாம் சின்னமலையின் உத்தரவுக்குக் காத்திருந் தனர். பலர் குதிரைகளுடன் வந்திருந்தனர். வேறு பலரிடம் பளபளக்கும் வாட்கள் இருந்தன. இன்னும் சிலர் தடிகாரர்கள் என்பதைக் காட்டிக் கொண்டனர்.

அவர்களெல்லாம் திரண்டவுடன் அரசமரத்தின் மேடைமீது சின்னமலை ஏறினன். பேச ஆரம்பித்தான்.

"வீரர்களே! கொங்கு நாட்டின் இளங்கொழுந்துகளே! உங்கள் எல்லோரையும் வருக, வருக என வரவேற்கிறேன். உங்கள் வருகையால் நான் இன்று புதிய மனிதனுக ஆகியுள்ளேன். உங்களை எதற்காக அழைத்தேன் என்பதைத் தெரிந்தே வந்துள்ளீர்கள்.

"உங்களைப் பொன்னும் மணியும் நவநிதியும் உள்ள மாநகரங்களுக்கு நான் அழைத்துச் செல்லவில்லை.

"இந்தக் கருவூலம் இனி உங்கள் உடைமை என்று சொல்லத்தக்க கொள்ளைத் திட்டத்திற்கல்ல. பொன்னும் பொருளும் வேண்டியவர் என்னைப் பின் தொடராதீர்கள். தாயகத்தின் மானம் பறிபோகிறது. நம் தன்னுரிமை மிதித்துத் துவைக்கப்படுகிறது. தாயகத்தின்மீது பற்றுள்ளவர், அதன் விடுதலையில் அக்கறை கொண்டவர் மட்டும் இந்த அணியில் இருக்கலாம்.

"மரணப் பள்ளத்தாக்கிற்கு அழைக்கிறேன். இரத்தத் தடாகத்தில் நீந்த வேண்டிவரும். பிணமலைகளுக்கு மத்தியில் உலவவேண்டும். ஆசை மனைவியை, அருமைப் பெற்றோரைச் சில நாட்கள் மறந்திருக்கும் ஆற்றலாளர் எனக்குத் தேவை. அந்த நெஞ்சுறுதி இல்லாதவர் ஊர் திரும்பலாம். உவகையுடன் அனுப்பி வைக்கிறேன்" என்ருன்.

# 16

சின்னமலையின் உறுதி நிறைந்த உரை கூடியிருந்த வீரர்களை மெய் சிலிர்க்கச் செய்தது. மௌனத்தைக் கிழித்துக் கொண்டு முன் வரிசையிலே யிருந்த ஒருவன், "தலைவா! நீங்கள் காட்டும் திசை செல்லக் காத்திருக்கிறோம். உயிர் எங்களுக்கு வெல்லமல்ல" என்றான்.

"ஆம் ஆம்" என்று பல குரல்கள் எழுந்தன. எல்லோரும் தலையசைத்தனர்.

"நாம் திரும்பும்போது பலரை இழந்திருக்கலாம்" என்றான் சின்னமலை.

"தேள் கடித்தோ பாம்பு கடித்தோகூட சாவு வருகிறது. போர்க்களத்தில் சாகக் கொடுத்து வைக்க

வேண்டும்'' என்றான் துடிப்புள்ள இளைஞன் ஒருவன்.

''எதிரிகளின் கையில் சிக்கிச் சித்ரவதைக்கு ஆளாகலாம். வாழ்நாள் முழுதும் சிறைக் கைதியாகச் சிரமப்பட நேரலாம்'' என்றான்.

''வேற்றுநாட்டானின் அரசின் கீழ் இருப்பதும் சிறைச்சாலையிலே இருப்பதுதான். அதைவிட, கட்டப்பட இருக்கும் பெரும் சிறைச்சாலையை உடைத்தெறியும் முயற்சியில் ஆபத்தை அணைத்துக் கொள்வது நல்லது'' என்றான் வேறொருவன்.

''பட்டினியாலே வருந்த நேரலாம். கட்டாந்தரை தான் படுக்கையாக அமையலாம். கண்ணெதிரே வெட்டுண்டு கிடக்கும் வீரனை அப்புறப்படுத்தவும் இயலாது போகலாம். கழுகுக்கும் நரிக்கும் விருந்தாக நேரலாம்'' என்று பயமுறுத்தும் பாவனையில் சின்னமலை அடுக்கிக் கொண்டே போனான்.

அங்குக் குழுமியிருந்த வீரர்கள் அவற்றிற்கு அஞ்சுவதாகத் தெரியவில்லை. உண்மையில் சின்ன மலையும் அவர்கள் அஞ்சக்கூடாது என்றுதான் விரும்பினான்; அஞ்சமாட்டார்கள் எனவும் நம்பினான். எனினும் தனது துணைவர்களின் உறுதிப்பாட்டைச் சோதனை செய்ய விரும்பினான்.

வீரர்கள் கிளம்ப இருக்கும் சேதி பக்கத்துப் பட்டிதொட்டிகளிலேயெல்லாம் காட்டுத் தீ போல் பரவிப் பெருங் கூட்டத்தைச் சேர்த்து விட்டது. வழியனுப்பக் கூடியிருந்தவர் போல், பெரும் திருவிழா போல் காட்சியளித்தது. தாய்மார்கள் குழந்தைகளை இடுப்பிலே தாங்கித் திண்ணையோரங்களிலே நின்று வேடிக்கை பார்த்தனர்,

சின்னமலை குதிரை மீது அமர்ந்தான். அவன் நிழல் போல் பெரியதம்பியும் குதிரையில் அவன் பின்னுலேயே நின்ருன். தடிகாரர்கள் அணியணியாக நின்றனர். வேறு சிலர் புரவிகள் மீது ஏறினர். மெதுவாகச் சின்னமலை முன்னே செல்ல, அவனைப் பெரியதம்பி பின்தொடர, மற்றக் குதிரை வீரர்களும் கால்நடையாக வருபவர்களின் வேகத்தை ஒத்து நகர, ஊர்வலம்போல் படை ஓடாநிலையிலிருந்து ஊர்ந்தது.

பலநாட்கள் வழி நடந்தனர். சில இடங்களில் ஒற்றையடிப் பாதைதான் இருந்தது. காடும் மேடும் சூழ்ந்திருந்தன. பல ஓடைகள் குறுக்கிட்டன. வழி நீண்டு கொண்டே இருந்தது.

உடன் எடுத்துச் சென்ற உணவுப் பொருள் களும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்தன. பல காததூரம் நீரே காட்சியளிக்கவில்லை.

புறப்படும்போது சின்னமலை ஆற்றிய உரையின் பொருள் கொஞ்சம் விளங்க ஆரம்பித்தது. சிலர் சிரமப்பட்டனர். ஆனல் மற்றவரின் திட சித்தத்தைப் பார்த்துத் தாங்களும் தைரியப்படுத்திக் கொண்டனர்.

வழி நீண்டு கொண்டே இருந்தது. கடைசியாக, சீரங்கப்பட்டினத்தின் கோட்டை மீது பறந்த திப்புவின் கொடி அவர்கள் கண்ணிலே தென்பட்டது.

"சீரங்கப்பட்டினம் வந்து விட்டோம்."

"புதுமுறுக்குடன் நடந்து கொள்ளுங்கள்! நம்மைப் பஞ்சைகளாக நினைத்துவிடப் போகிருர்கள்!" என எச்சரித்தான் சின்னமலை.

சீரங்கப்பட்டினம் கோட்டை! அங்குத்தான் திப்புவின் தலைநகரம் இருந்தது. பெரும் அகழியுடனும்

எவரும் அண்ட முடியாத போர்க்கருவிகளுடனும் சீரங்கப்பட்டினம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

வெள்ளையருக்கு சீரங்கப்பட்டினம் என்ருல் சிம்ம சொப்பனமாய் இருந்தது. மராட்டியரையும் நைஜாமையும் மயக்க முடிந்தது. ஆனுல் திப்புவிடம் அண்ட முடியவில்லை. அவன் ஐதரின் வாரிசானுன். ஆங்கிலேயரின் பரம வைரியாய் அமைந்தான். மைசூர் மண்டிலத்திற்குத் தன்னை அதிபதியென்று பிரகடனப் படுத்திக் கொண்டான்.

மராட்டியரிடமும் நைஜாமிடமும் வெள்ளையர் செய்த சாகசங்கள் திப்புவிடம் பலிக்கவில்லை. திப்பு ஒழியும் வரை தங்களுக்கு விமோசனமில்லை என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். சிண்டு முடியும் வேலையிலும் ஆரம்பத்தில் அவர்களால் வெற்றி பெற முடியவில்லை.

திப்பு அசகாய சூரனுக விளங்கினுன். எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வெள்ளைக்காரன் தத்துவத்தைத் தானும் நடைமுறையில் செய்து காட்டினுன்.

பிரஞ்சு நாட்டுக்கும் கான்ஸ்டாண்டிநோபலுக்கும் காபூலுக்கும் அரேபியாவுக்கும் தனது தூதுவர்களை அனுப்பினுன். அங்கெல்லாம் தென்னகத்திற்கு அனுதாபம் தேடினுன். மேல் நாட்டு ராணுவ முறைகளைத் தனது படைகளுக்குக் கற்றுக் கொடுத்தான். பிரெஞ்சுக்காரனின் போர் முறைக் கலையைப் பயின்றுகொள்வதில் வெட்கப்படவில்லை.

சீரங்கப்பட்டினத்தைப் பல ஆண்டுகளாகக் கைப்பற்ற வேண்டுமென்ற வெள்ளையனின் முயற்சி கைகூடாத ஒன்ருகவே யிருந்தது.

காரன்வாலிஸ் என்பானின் சீரங்கமுற்றுகையின் விளைவாய்த் திப்பு மூன்று கோடி ரூபாய் வெள்ளையருக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டி வந்தது. தனது புதல்வர்கள் இருவரையும் அவர்கள் கண் காணிப்பில் ஒப்படைக்க வேண்டிய துர்க்கதி ஏற்பட்டது. மேற்கே மலபார் பகுதிகள் வெள்ளையன் கைக்கு மாறின.

ஆத்திரம் கொண்டான் திப்பு. வெள்ளையரைக் கருவறுக்கக் காலம் நோக்கிக் கொண்டிருந்தான். அவன் உள்ளத்திலேயிருந்த பகைமைத் தீ அணைந்து விடவில்லை. சாம்பல் பூத்திருந்தது.

படையைப் பலப்படுத்துவதிலும், புதிய சக்தி களைத் திரட்டுவதிலும் கவனமாய் இருந்த நேரத்தில் தான் சின்னமலையின் படை சீரங்கப்பட்டினத்துக் கோட்டை மைதானத்தை நெருங்கிக்கொண்டிருந்தது.

காவலாளி ஓடிப்போய்க் கோட்டை நாயகனிடம் கூறினான். கோட்டை நாயகன் விவரம் புரியாது கலவரமடைந்தான். ஆனால் அவன் ஒரு முடிவுக்கு வருவதற்கு முன் வேறோர் ஆள், "கொங்கு நாட்டிலிருந்து ஐந்நூறு வாலிபர்கள் வந்திருக்கிறார்கள். நமது படையில் சேர அனுமதி விரும்புகிறார்கள். அவர்களின் தலைவன் தங்களைச் சந்திக்கக் காத்திருக் கிறான்" என்றான்.

கோட்டை நாயகனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. 'ஒருவேளை வெள்ளையர்களால் அனுப்பப்பட்ட வேவுகாரர்களாய் இருந்தால் என்னவது?' என்று யோசித்தான்.

படையிலே ஆள் சேர்த்துக்கொண்டிருந்தார்கள். வீரர்கள் தேவையாய் இருந்தனர், எனினும்

எதிர்பாராத விதமாகக் கட்டுப்பாட்டுடன் ஐந்நூறு பேர் வருவதென்றல் அவனல் நம்ப முடியவில்லை. திப்புவிடமே கலந்து ஒரு முடிவுக்கு வருவது என்று திட்டமிட்டான். "அவர்கள் நமது தெற்குப் பாசறை முகாமில் தங்கட்டும். தலைவனை வரச்சொல்" என்றன்.

சின்னமலை கோட்டை நாயகனிடம் பேசினன். மைசூர் அரசு மீண்டும் சுடர் விடும் என்ற நம்பிக்கை பிறந்தது. திப்புவின் தீர்ப்பிற்காகக் கொங்குநாட்டு வீரர்கள் காத்திருந்தனர்.

யூகம் நிறைந்தவன் திப்பு. மைசூர் மண்டிலத்திற்கு முன்பே கட்டுப்பட மறுத்த காங்கேய வட்டாரத்தி லிருந்து கட்டிளைஞர் கிடைப்பது, தான் பெற இருக்கும் வெற்றியின் மணியோசை என்று நினைத்தான்.

"நல்லது. சின்னமலை, அந்த வீரர்களுக்குத் தளநாயகனக இருக்கட்டும். பயிற்சிகள் ஆரம்ப மாகட்டும். சந்தேகப்படுவதற்கு ஒன்றுமில்லை" என்று கட்டளையிட்டான்.

கொங்கு நாட்டுப்படை விரைவில் போர்ப் பயிற்சி களில் தேறியது. ஓய்வுக்கு நேரமில்லை.

போர் மேகங்கள் குவிந்தன. சின்னட்களில் கொங்குப்படை தனித்தன்மை பெற்றது. தளபதி களிடம் பாராட்டுதலைப் பெற்றது.

சின்னமலையும் பெரியதம்பியும் பிறவிப் போர் வீரர்கள் போல் வெகு விரைவில் தங்கள் ஆற்றலைப் பெருக்கினர்.

பட்டாளத்து வீரர் மத்தியிலும் பெரியதம்பிக்கு வள்ளிநாயகியின் கட்டாணி முத்தம் நினைவு

வராமலில்லை. ஆனால் காலம் கனியும் எனக் காத்திருந்தான்.

சின்னமலை படைப் பயிற்சியை ஒரு சிறந்த அனுபவமாகவே கருதினான். அடிக்கடி கொங்கு நாட்டில் அமைக்கப்பட வேண்டிய பாதுகாப்புப் படையைப் பற்றிச் சிந்தனை செய்தான்.

கொங்கு வீரர்கள் மத்தியில் எப்படியோ ஒரு குடும்ப உணர்ச்சி தழைத்தது. தங்கள் சுக துக்கங்களைப் பின்னிக் கொண்டனர். சின்னமலையின் மீது, அவர்களையுமறியாமலே பற்றும் பாசமும் பணிவும் வளர்ந்தன.

ஈஜிப்ட் நாட்டில் நெப்போலியன் நுழைந்து விட்டான்; அங்கிருந்து இந்திய மண்ணில் நுழையப் போகிறான் என்ற திட்டம் அவர்களுக்கு எட்டியது. பீதியடைந்தனர்.

திப்புவின் வலிமை ஏற்கெனவே குறைக்க முடியவில்லை. நெப்போலியன் வரவு திப்புவுக்குச் சாதகமா பாதகமா என்பதைவிட, தென்னகத்தில் வெள்ளையர் கொட்டத்தின் இறுதி அத்தியாயம் எழுதப்பட வேண்டிய பரிதாபம் நிகழ்ந்துவிடும் என்று அஞ்சினர்.

அவர்கள் அச்சத்திற்குக் காரணமிருந்தது. திப்புவுக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் பிடிப்பு நெருக்கமாயிருந்தது. இதைத் துண்டிக்கும் முயற்சியில் தோல்வியே பெற்றுவந்தனர்.

திப்புவை ஒழிக்கும் போர்ப்பறை ஒலித்தது. ஒரே நேரத்தில் மைசூர் மண்டிலத்தை நோக்கி இரு திசைகளிலிருந்து படையெடுப்பு ஆரம்பமாகியது.

கிழக்கேயிருந்து கிளம்பிய மூலப்படைக்கு ஜெனரல் ஹாரிஸ் என்பான் தலைமை வகித்தான்.

அவனுடன் வெல்லெஸ்லியும் வேறோர் படையுடன் துணைக்கு வந்தான்.

மேற்குப் பக்கமாக பம்பாய்ப் பகுதியிலிருந்து ஜெனரல் ஸ்டுவர்ட் என்பான் தலைமையில் மற்றுமொரு படை திடீர்த்தாக்குதலை ஆரம்பித்தது.

எதிர் பாராத இந்த சம்பவத்தைத் திப்புவால் சமாளிக்க முடியவில்லை. ஸ்டுவர்ட்டின் படை வெற்றி கொண்டது. திப்பு பின் வாங்கினான். மாலவல்லி எனும் இடத்தில் களமமைந்தது. ஜெனரல் ஹாரிஸ் அங்கு வந்துவிட்டான்.

வெட்டுண்ட தலைகள் கிடந்தன. குருதி வெள்ளம் ஓடியது. இருபக்கமும் வெறியுடன் போரிட்டனர்.

மாலவல்லிப் போர்க்களத்திலே சின்னமலையின் கொங்குப் படை வெள்ளையரைச் சந்தித்தது. கொங்கு நாட்டு வீரர்களுக்கு அளித்த பயிற்சி வீண் போக வில்லை என திப்பு உணர்ந்தான்.

களத்தின் மத்தியில் உயிரைத் திரணமாக மதித்து சின்னமலையின் படை போரிட்டது. எனினும் ஆங்கிலேயர் எண்ணிக்கையில் மிகுந்திருந்தனர். திப்புவின் அணி குலைய ஆரம்பித்தது. ஹாரிஸ் துரைமகனின் நாட்குறிப்பில் மாலவல்லியில் வெள்ளை யருக்குவெற்றி நாள் என்று எழுதப்பட்டது.

தளபதி ஹாரிஸின் படை சூறாவளி வேகத்தில் சீரங்கப்பட்டினம் கோட்டையை முற்றுகையிட்டது.

திப்பு ஏற்கெனவே கோட்டைக்குப் பறந்தான். கோட்டை அமைப்பும் ஆயுத தளவாடங்களும் ஆட் பெருக்கும் தனக்கு உதவும், ஆங்கிலேயரின் முடிவை

சீரங்கப்பட்டினம் கோட்டை வெளியிலே நிர்ணயிக்க லாம் என மனப்பால் குடித்தான். எல்லாப் படை பலமும் கோட்டைக்குள்ளே திரண்டிருந்தன.

ஆங்கிலேயர் தூதனுப்பினர். சரண் புகுமாறு நிபந்தனைகளை எடுத்துரைத்தனர். திப்பு காறியுமிழ்ந் தான்.

"யார், யாருக்கு நிபந்தனை போடுவது? உங்கள் வெடிமருந்து தீரும் மட்டும் பீரங்கிகள் முழங்கட்டும். திப்பு அடிமை சாசனத்திலே முத்திரையிட மாட்டான்!" என கர்ஜனை புரிந்தான். "அவமானத் திற்கு எனது கைச் சாத்திடேன்" என ஆர்ப்பரித் தான்.

1799ம் ஆண்டு மே திங்கள் நான்காம் நாள் தளபதி ஹாரிஸின் படை சீரங்கப் பட்டினம் கோட்டையைக் கைப்பற்றியது!

வஞ்சகர் வெள்ளையரிடம் காட்டிக் கொடுத்தனர். துரோகம் வெற்றி பவனி வந்தது.

அஞ்சா நெஞ்சன் திப்பு ஓடிவிடவில்லை. கோட்டையைக் காக்கும் போரில் சமர் செய்தான். படுகாயமடைந்தான். வெள்ளையன் ஒருவனால் கொல்லப்பட்டு மாண்டான். கோட்டைக் கொடிமரம் சாய்ந்தது. வெள்ளையர் எஞ்சியிருந்த திப்புவின் வீரரைச் சிறை பிடித்தனர்.

கோட்டையைக் காக்கும் முயற்சியில் சின்னமலை யின் படையும் பங்கு கொண்டது. ஆனால் வெற்றி மாற்றானையே அணைத்தது.

நிலைமை சின்னமலைக்குப் புரிந்தது. ஒன்று, கொங்குப்படை வெள்ளையனிடம் சாகவேண்டும்; அல்லது சிறைக் கைதியாகப் பிடிபடவேண்டும்,

இரண்டில் ஒன்று தனக்கும் கொங்கு வீரருக்கும் எதிரே காத்திருப்பதாகப்பட்டது. ஒரு யோசனை உதித்தது.

கொங்கு வீரரையெல்லாம் கோட்டையிலிருந்து வேகமாக வெளியேறச் செய்தான். தெற்கு நோக்கிச் சின்னமலை படை சென்றது. காவிரியாறு குறுக்கே ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றின் பாதியைப் படை கடக்கும்போது எதிர்க்கரையிலே வெள்ளைப்படையொன்று அவர்களைப் பிடிக்க நீரிலே இறங்கியது.

# 17

"பட்டத்துக் கத்தி பளபளெனச் செல்லும்
பாளையக் காரர்கள் முன்னடக்க
வெட்டுந் துரைமகன் சின்ன மலேவரும்
வேடிக்கை தன்னையும் பாருங்கடி."

—சின்னமலேக் கும்மி.

காவிரியாறே தங்களுக்கு நீர்க்கல்லறையாகி விடுமோ, அல்லது நீந்திக் கொங்குநாடு போய்ச் சேருவோமோ என்ற அச்சம் சின்னமலேயின் வீரர் களின் உடலெங்கும் காவிரி நீரைவிட சில்லிட்டது.

பழக்கமில்லாத நதியில் ஆங்கிலேயர் விரைவாக முன்னேற முடியவில்லே. கோவைப் படை எதிர்த்

கரையிலே ஏறி அடர்ந்த முட்காடுகளிலே மறைந்தது. துரத்திய ஆங்கிலப்படை அவர்களைத் தொடர முடிய வில்லை. சிறுபடையுடன் மேலும் முயலுவது நல்லதல்ல என்று வந்தவழியே திரும்பினர்.

கொங்குப்படை வழி நடந்தது. சின்னமலையின் உள்ளம் துயரச் சுமையைத் தாளாது தத்தளித்தது. 'திரும்பும்போது வெற்றி வீரனாய்க் களிப்புடன் கொங்கு மண்டிலத்தை மிதிப்போம்' என்று கனவு கண்டவன் கோட்டையை எதிரியிடம் விட்டுவிட்டு, ஆற்றைக் கடந்து உயிருக்குத் தப்பி ஓடிவருவது அவனுக்கு என்னவோபோல் இருந்தது. எனினும் தன்னை நம்பி வந்தவர்களைக் கூண்டோடு மரண பூமிக்கு அனுப்ப அவன் தயாராயில்லை.

கொங்குநாட்டிற்குச் சென்று விட்டால் மீண்டும் தனது எதிர்ப்பைக் கூர்மைப்படுத்த முடியும் என்று நம்பினான்.

மைசூர்ப்படையில் அவன் பணியாற்றிய நாட்கள் அவனது தாங்கும் சக்திகளை விழிப்படைய செய்தன. ஏமாற்றங்களினால் அவன் இதயம் நொறுங்கிவிட வில்லை. தோல்வி கண்டு துவளாத மனம் படைத் திருந்தான். களைத்திருந்த வீரர்களைத் தங்கள் தங்கள் ஊருக்குச் சென்று வருமாறு விடை கொடுத்தான். ஒரு குறிப்பிட்ட நாளில் ஓடா நிலையில் சந்திக்கவேண்டும் என்ற கட்டளையும் பிறப்பித்தான்.

வீரர்கள் தத்தமது வீடு திரும்பினர். வெற்றி வாகை சூடவில்லையானாலும் ஓர் ஒப்பற்ற தலைவனின் கீழ்ப் பணிபுரிந்தோம் என்ற பெருமிதம் நிறைந் திருந்தது.

அப்போதும் உடன் தொடர்பவர்களை ஓடா நிலைக்கு அனுப்பிவிட்டுப் பெரியதம்பியை நோக்கி,

"தம்பி, நாம் ஓடாநிலை செல்லவில்லை. உலகபுரம் செல்கிறோம். மைத்துனரையும் மயிலாத்தாளையும் கண்டு சில முக்கிய விஷயங்கள் பேசவேண்டும்" என்றான்.

பெரியதம்பிக்கு அவன் குறிப்பு விளங்கியது. அண்ணன் தனது திருமணம் சம்பந்தமாய்த்தான் அவ்வளவு அவசரம் காட்டுகிறார் என்பதைப் புரிந்து கொண்டான்.

அவன் உள்ளம் மகிழ்ச்சிப் பெருக்கிலே பொங்கினாலும் அவனையும் அறியாமல், 'வள்ளிநாயகி இந்தக் கொடும் பிரிவை எப்படி சகித்துக் கொண்டாள்? சருகாக இளைத்தாளோ, சஞ்சலத்தால் வாடினாளோ' என்று ஆயிரம் கேள்விகளைப் போட்டுப் பதில் கிடைக்காமல் திண்டாடினான்.

மயிலாத்தாளின் மனைவாயிலிலே குதிரைகள் நின்றன. சின்னமலையும் பெரியதம்பியும் கீழே இறங்கினர். உள்ளே இருந்து மயிலாத்தாள் ஓடோடி வந்தாள். உடன் பிறந்தவர்கள் இருவரையும் கட்டிப் பிடித்துக்கொண்டு ஓவெனக் கதறி நின்றாள்.

அவள் அழுகை நிற்கவேயில்லை. கண்ணீர் வெள்ளம் பெருகியது. பழனியப்பனையும் காணோம். காரணம் தெரியாது சின்னமலையும் பெரியதம்பியும் ஒருவரை ஒருவர் நோக்கினர். அவளிடமிருந்தே விவரம் புரிய வேண்டியிருந்தது.

"அண்ணா! முத்துவேலப்பர் போய்விட்டார். வள்ளிநாயகியைக் காணோம்!" என்று சொல்லிவிட்டு மீண்டும் கதறினாள்.

இந்தச் சொற்களைக் கேட்டவுடன் பெரிய தம்பிக்கு வாழ்வின் தீபமே அணைந்து இருட்காட்டிலே

செல்வதாய்ப்பட்டது. ஆயிரம் ஈட்டிகள் ஒரே நேரத்தில் பாய்ந்திருந்தால்கூட அவன் உடலை அவ்வளவு துளைத்திருக்காது. 'வள்ளிநாயகியைக் காணோம்' என்ற சொற்கள் அவன் உள்ளத்தை அவ்வளவு துளைத்தது. தனக்கு வாழ்வே முடிந்துவிட்டதாகக் கருதினான். அவனும் குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான்.

சீரங்கப்பட்டினம் கோட்டை படுசூரணமான காட்சியைக் கண்டவன் சின்னமலை. அந்தக் கோரக் காட்சியைவிட மயிலாத்தாளின் சேதி கோரமாய்ப் பட்டது.

யார் யாரைத் தேற்றினார்கள் என்று சொல்ல முடியாது. அந்தக் குழப்பத்திலிருந்து விடுபடுவதற்கு நெடுநேரம் பிடித்தது. வெளியே சென்றிருந்த பழனியப்பன் வீடுவந்த பிறகுதான் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது.

ஆறு மாதங்களுக்கு முன் முத்துவேலப்பர் திடீரென்று மாரடைப்பால் காலமாகி விட்டாரென்றும், அவர் இறந்ததுமுதல் வள்ளிநாயகி சித்தப்பிரமை கொண்டவள்போல் மெலிந்து விட்டாளென்றும், ஒரு மாதம்வரை மயிலாத்தாள் அடிக்கடி முத்துவேலப்பர் மாளிகைக்குச் சென்று வள்ளி நாயகியைத் தேற்றி வந்தாளென்றும், தங்கள் வீட்டிற்கே வந்துவிடம்மா என்று மயிலாத்தாள் எவ்வளவோ வற்புறுத்தியும் வள்ளிநாயகி கேட்கவில்லை யென்றும், திடீரென்று நான்கு மாதங்களாய் வள்ளிநாயகி காணவில்லை யென்றும், எங்குப் போனாள் என்ன ஆனாள் என்பதே தெரியவில்லையென்றும், அக்கம்பக்கத்திலெல்லாம் அவள் மறைவு பெரிய மர்மமாகவும் பரபரப்பாகவும் உள்ளதாகவும் பழனியப்பன் நடுங்கும் குரலில், மிகவும்

கசப்பானதை அருந்தவேண்டிய நேரத்தில் கடைப் பிடிக்க வேண்டிய விதியை நினைவுபடுத்தித் தடுமாறிச் சொல்லி முடித்தான்.

மயிலாத்தாள் விட்ட இடத்திலேயே பெரியதம்பி தொடர்ந்தான். தலையைக் கதவிலே மோதிக் கொண்டான். கையைப் பிசைந்துகொண்டான். கடல் அலையைப்போல் அரற்றி அழுதான். "ஓர் அப்பாவிப் பெண்ணைக் காப்பாற்றும் அருகதையும் அற்றவனுகப் போய்விட்டேனே பாவி!" என்று அலறினுன்.

பக்கத்து வீடுகளில் இருப்பவர்களெல்லாம், பயந்துபோய் என்ன நடந்தது, ஏது நடந்தது என்று தெரிந்துகொள்ளக் கூடிவிட்டனர்.

சின்னமலைக்குப் பெரியதம்பியின் மனநிலை புரிந்தது. அவனைத் தடுக்கவில்லை. அழுது தீர்க்கட்டும்; அவன் ஆவேசம் தணியட்டும் என்று காத்திருந்தான்.

"தம்பி! உன் கண்ணீரைத் துடைத்துக் கொள். கடமையிலே கருத்தை வை. அது உன் கவலையை மாற்றும். நம்மைத் தொடரும் இன்னல்கள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. தாங்குவது சிரமம்தான். ஆனுல் இவைகளுக்கும் முடிவு உண்டு. அல்லல்களைத் தவிர வேறு மார்க்கமே யில்லையென்ருல் மனிதகுலம் இவ்வளவு நாள் வாழ்ந்திருக்காது.

"உலகம் எதிர்காலத்தை நோக்கி ஓடிக்கொண்டே யிருக்கிறது. ஆனுல் மனிதனின் மனமோ கடந்தகால நினைவுகளையே வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. எதிர் காலத்தைத் தங்களுக்குச் சொந்தமாக்க விரும்பு பவர்கள், பழமையிலே நெளிந்துகொண்டிருந்தால் இறந்துபோன காலத்திலேயே சேர்ந்து விடுவார்கள். பிரகாசமான எதிர்காலமே கிடையாது. புலம்புவதில்

பயனில்லை. புறப்படு, தம்பி" என்றுகூறி ஓடாநிலைக்குக் கிளம்பினான்.

ஓடாநிலையும் உற்சாகமற்று வெறிச்சென்றிருந்தது. கோபித்துக்கொண்டு சென்ற கெம்பாயம்மாள், கணவன் வீடு திரும்பவேயில்லை. அண்ணன் குழந்தை சாமியும் மனக்கவலையால் துரும்பாய் இளைத்துப் போனார். வீட்டிலே தங்க மனமில்லாமல் தோட்டத்திலே சாலையமைத்து அங்கேயே காலத்தைப் போக்கினார். எவருடனும் பேசுவதில்லை, எதைப்பற்றியும் அக்கறை யில்லாமல் அவரது வாழ்க்கை ஓடிக்கொண்டே இருந்தது.

சின்னமலை மயிலாத்தாள் தந்த சேதியினால் அதிர்ச்சியடைந்திருந்ததனால் தனது குடும்பநிலை அவனை ஒன்றும் பாதிக்கவில்லை.

"தம்பி! நமது வீரர்களை இங்குக் கூடும்படி கட்டளையிட்ட தினம் விரைந்து கொண்டிருக்கிறது. அன்று கொங்குநாட்டின் பாளையக்காரர்களையெல்லாம் இங்குத் திரளச் செய்ய வேண்டும். சபை கூட்டி அவர்கள் கருத்தை உணரவேண்டும். எல்லாப் பாளையக்காரர்களையும் நானே சந்தித்துக் கலந்து உரையாட வேண்டும். இந்தத் தடவை என்நிழல் போல் என் அருகிலேயே இருக்கவேண்டும்" என்றான்.

சின்னமலையும் பெரிய தம்பியும் மின்னல் வேகத்தில் பறந்தனர். எல்லாப் பாளையக்காரர்களையும் கண்டனர். சின்னமலையே நேரில் தங்களையெல்லாம் சந்தித்தது அவர்களுக்குப் பெருமகிழ்ச்சி தந்தது.

குறிப்பிட்ட நாள் வந்தது. ஓடாநிலையில் வீரர்கள் திரண்டு விட்டார்கள். பாளையக்காரர்கள் ஒவ்வொரு வராக வந்துகொண்டிருந்தார்கள்.

சபை கூடியது. இதுநாள் வரை இத்தனை பாளையக்காரர்களும் ஓர் இடத்தில் கூடியது இதுதான் முதல் தடவை.

சின்னமலை எழுந்தான். பேச ஆரம்பித்தான். "கொங்கு நாட்டின் குடிப்பிறப்புகளே! உங்கள் வரவு நல்வரவாகுக. எனது வாழ்விலேயே இன்றுதான் புத்துணர்வு கொள்கிறேன். என்மாட்டு உங்களுக்குள்ள அன்பிற்கும், நமது மண்டிலத்தைப் பற்றி உங்கள் அக்கறைக்கும் என் நன்றி உரித்தாகுக.

"உங்கள் எல்லோரிடமும் தனித்தனியே கலந்து பேசியுள்ளேன். திப்புவின் வீழ்ச்சி, சீரங்கப்பட்டின அழிவு, மாற்றானை நம் தலைவாயிலிலே நிறுத்தியுள்ளது.

"வடக்கேயுள்ள மைசூர் மண்டிலத்தில் வெள்ளையன் கொடியேற்றி விட்டான். மேற்கேயுள்ள மலையாளமும் ஆங்கிலப்படைகளின் ஆளுகையில் உள்ளது. கிழக்கே சேலத்திலுள்ள சங்ககிரிக் கோட்டை ஆங்கிலேயரின் படைவீடு.

"தெற்கே பாண்டி மண்டிலம், போர்க்கொடி உயர்த்தியவர்களைப் பலி பீடத்திற்குக் காணிக்கையாக்கிவிட்டு அந்நியனின் வேட்டைக் காடாகியுள்ளது.

"கொங்கு மண்டிலத்தில் தனிக்கொடி பறக்க வேண்டுமா? அல்லது நாமும் பரங்கியருக்குக் கப்பம் கட்டி ஓய்ந்து போக வேண்டியதுதானா என்பதுதான் நம் முன்னால் உள்ள கேள்வி.

"நாளையோ மறுநாளோ அந்நியனின் படை நமது மண்ணுக்குள் நுழையலாம். நமது பெண்டு பிள்ளைகள் மாளலாம். பயிர் பச்சைகளுக்கு அவர்கள் நாசம் விளைவிக்கலாம். நமது தானியங்களை எடுத்துச்

செல்லலாம். இதைத் தடுக்கப் போகிறோமா? அல்லது தலைகுனிந்து வரவேற்கப் போகிறோமா? என்பதுதான் நம் முன்னால் உள்ள கேள்வி.

"நானும் இங்கே குழுமியுள்ள என் ஆருயிர் நண்பர்களும் களம் பல கண்டு வந்துள்ளோம்.

"உயிரைத் திரணமாக மதித்துப் பசி, பட்டினி, சிரமம், சித்ரவதை ஆகியவற்றைக் கண்டு அஞ்சாமல் புடம் போட்ட தங்கமாக வந்துள்ளோம்.

"எங்களைப் பொறுத்தவரை கண்ஜாடை காட்டினால் ஆங்கிலேயன் விருது வழங்குவான். பட்டாளத்தில் பாங்கான பெருமை கிடைக்கும். ஆனால் எங்கள் தன்னுணர்வு அந்நியனுக்கு அடிபணியக் கூடாது என்று ஆணையிடுகிறது. எங்கள் சேவையை ஏற்றுக் கொள்வதானால் வெள்ளையனை விரட்ட நானும் என்னுடைய ஆருயிர்த் தோழர்களும் எங்கள் உயிர், உடல், வாழ்நாள் அத்தனையையும் உங்களுக்காக அர்ப்பணிக்கக் காத்திருக்கிறோம். இதைக் கூறத்தான் இவ்வளவு தூரம் அழைத்தேன்" என்று கூறி முடித்தான்.

"சின்னமலை கோவைக் கோமானாகட்டும்! எங்கள் எல்லோருக்கும் சம்மதம்" என்றான் மிகவும் வயதான பாளையக்காரன்.

"பெரியவர் சொல்வது எங்கள் எல்லோருக்கும் உடன்பாடு" என்ற குரல்கள் ஏக காலத்தில் எழுந்தன.

"ஒவ்வொரு பாளையத்திலிருந்தும் குறிப்பிட்ட படை உதவுவோம்" என்றான் ஒருவன்.

"ஓடாநிலையே தலைநகராக இருக்கட்டும்" என்றான் இன்னொருவன்.

"எதிரி அண்ட முடியாத பலமடைந்த கோட்டை நிர்மாணிக்க வேண்டும்" என்ருன் வேருருவன்.

அவர்களின் பேரார்வமும் பெருமதிப்பும் சின்ன மலைக்குக் கூச்சமாயிருந்தது. ஆனல் அந்த ஒரு கணம் அவன் ஆயாசமெல்லாம் பறந்துவிட்டது.

"உங்கள் பேரன்பு மட்டும் எங்கள் பக்கம் இருந்தால் எதிரி எங்களுக்குக் கால் தூசு" என்ருன்.

ஓடா நிலையில் பெரிய கோட்டை எழுந்தது. கொத்தளங்கள் அமைந்தன.

அகழிக்குப் பதில் முள்வேலிகளால் ஆன காவற் காடுகள் அரணுக அமைந்தன. ஆயுதசாலை, உலைக் களம், பாசறை அத்தனையையும் அடக்கிக்கொண் டிருந்தது ஓடாநிலைக் கோட்டை. அதனை விரைவாக நிர்மாணிப்பதில் பல்லாயிரவர் பங்கு கொண்டனர். அரசியல் அலுவலகமும் கோட்டைக்குள்ளேயே கட்டப்பட்டது.

கோட்டையின் உச்சியில் தனிக்கொடி பறந்தது. சின்னமலையின் எல்லை தெற்கே கருமலை வரையும், மேற்கே வெள்ளியங்கிரி வரையும் பரந்திருந்தது. கிழக்கே காவிரியாறு ஓடிக்கொண்டிருந்தது.

பாளையக்காரர்கள் மத்தியில் என்றுமில்லாத பரிவும் பாசமும் பெருக்கெடுத்தோடின. கொங்கு நாட் டிற்கு ஆபத்து அணுகாது என்று மக்கள் நிம்மதி பெற் றனர். ஆனல் சங்ககிரிக் கோட்டையில் ஆங்கிலப் பட் டாளம் அதிகரித்ததை அவர்கள் தெரிந்திருக்கவில்லை.

சின்னமலைக்கு மட்டும் அச்சம் இருந்தது. ஆங்கி லேயரின் சுபாவம் அவனுக்கு அறிமுகமாயிருந்தது. புலி பதுங்குவது பலவீனமல்ல என்பது போர் வீரனை அவனுக்கு விளக்கமாகப்பட்டது.

காவிரிக்கரைக் காவலை வலிமையுடையதாக்கி, கறுப்பச் சேர்வை என்பவனைத் தளகர்த்தனாக்கிப் பெரும் படையைக் கிழக்கு எல்லையிலே பெருக்கினான். பெரியதம்பியைக் காவிரிக்கரைக் காவற் படைக்குத் தனி அதிகாரியாக நியமித்தான். கடினமான வேலை அவன் இதய பாரத்தைக் குறைக்க உதவும் என்று நம்பினான்.

களைத்துப்போயிருந்த ஆங்கிலேயர் புது முறுக்குப் பெற்றனர். கோவைக் கோட்டம் தங்கள் பிடியிலே யில்லாதது தங்கள் கௌரவத்திற்கு அவமானச் சின்னம் என்று கருதினர். புதிதாக முளைத்துள்ள சின்னமலையின் வளர்ச்சியும் பாளையக்காரர்கள் கட்டுப் பாடும் அவர்களைக் கிலி கொள்ளச் செய்தன. காலம் நோக்கியிருந்தனர்.

ஒருநாள் காலை ஓடாநிலைக் கோட்டை வாயிலில் சங்ககிரிக் கோட்டையிலிருந்து தூதுவன் ஒருவன் வந்தான். சின்னமலையைச் சந்திக்க அனுமதி வழங்கப் பட்டது.

ஆங்கில அதிகாரியின் ஓலையைச் சின்னமலையிடம் கொடுத்துவிட்டு, "ஐயா! கோவை வட்டம்! திப்பு விடம் நாங்கள் வென்ற பூமி இது! எங்கள் ஆளு கைக்குக் கட்டுப்பட்டது. உங்களை அகற்ற வேண்டு மென்பது எங்கள் நோக்கமல்ல. நீங்களே ஆளலாம். ஆனால் இரண்டு விதிகளை நிறைவேற்ற வேண்டும். ஒன்று, கொஞ்சம் வரி தர வேண்டும். இரண்டு, எங்களால் அனுப்பப்படும் காவற் படையொன்றை இங்கே வைத்துக்கொள்ள வேண்டும். இதை நிறை வேற்றினால் நீங்களே தொடர்ந்து நிர்வகிப்பதற்குத் தடையேதுமில்லை. இதுதான் ஓலையின் சாராம்சம்" என்று கூறி நின்றான்.

சின்னமலை நெடுநாட்களாக எதிர்பார்த்த நாள் வந்துவிட்டது. அவன் கண்கள் சிவந்தன.

"தூதுவரே! அந்நியனிடம் அனுமதி பெற்று ஆள இந்த நாடு ஒன்றும் அவன் நன்கொடைப் பொருளல்ல. எங்கள் நாடு எங்களுக்குச் சொந்தம். கோட்டை அதிகாரிக்குக் கட்டுப்பட்டுக் கட்டியக்காரர்களாய் வாழ எங்களுக்கு விருப்பமில்லை. எங்கள் பிணங்களின் மீது தான் உங்கள் அதிகாரி உள்ளே நுழைய முடியும் என்று சொல்லும்" என்று கனல் தெறிக்கப் பேசினான்!

"தலைவரே! மீண்டும் யோசியுங்கள். பாஞ்சாலங் குறிச்சி கட்டபொம்மன் இதையேதான் கூறினான். பாஞ்சாலங்குறிச்சி படுசூரணமாகியது. கயத்தாறு நிகழ்ச்சி எச்சரிக்கையாய் இருக்கட்டும்."

"தூதுவரே! மரியாதையுடன் நடத்தினேன். வரம்பு மீறுகிறீர். இதுவும் உங்கள் தூது முறைகளிலே ஒன்று? இனி உம்முடன் பேசுவதாக இல்லை. சின்னமலை வரி தரமாட்டான்; உங்கள் காவற்படையையும் உள்ளே வரவிடமாட்டான் என்று சொல்லும்" என்று கூறிவிட்டு எழுந்து சென்றுவிட்டான்.

தூதுவன் திரும்பினான். ஆங்கில அதிகாரி இந்த பதிலை எதிர்பார்க்கவில்லை.

கர்னல் மேக்ஸ்வெல் எனும் ஆங்கில தளபதி பல்லை நறநறவெனக் கடித்தான். தன்னுடைய வேலை இன்னும் முடிந்துவிடவில்லை என்று உணர்ந்தான். தனது படையின் ஒரு பிரிவினரைக் காவிரியாற்றைக் கடந்து கரைமீதுள்ள கொங்குநாட்டுச் சிற்றூர்களைச் சூறையாடக் கட்டளை பிறப்பித்தான்.

கர்னல் மேக்ஸ்வெல்லின் கட்டளைப்படி வெள்ளையன் படை காவிரியைக் கடந்து கொங்குநாட்டு மண்ணில் நுழைந்தது.

# 18

"கட்டுத் தடிகாரர் முன்னடக்க வுடன்
கறுப்பச் சேர்வையும் பின்னடக்க
வட்டப் பொட்டுக்காரச் சின்னமலை யதோ
வார சவுரியம் பாருங்கடி."

— சின்னமலைக் கும்மி.

கொங்குநாட்டுக் கிராமங்களைச் சூறையாடியது ஆங்கிலப்படை. முதியவர்கள் அலறித் துடித்தனர். தாய்மார்கள் கதவைச் சாத்தி ஓடி ஒளிந்தனர். சோளக் கொல்லைகளில் மாடுகளை அவிழ்த்து விட்டனர். தானியங்கள் நாசமாயின.

பெரியதம்பியும் கறுப்பச் சேர்வையும் சமாளிக்க முயன்றனர். ஆங்கிலப் படையினர் நாசங்களைச்

செய்துவிட்டு மறுகரைக்கு அடிக்கடி ஓடி மறைந்தனர். நாடே அல்லோல கல்லோலம் ஆகிவிட்டது.

சங்ககிரிக் கோட்டையில் ஆங்கில வீரர்கள் பெருகிக் கொண்டே யிருந்தனர். ஏதோ புயல் உருவாகிறது என்று பலரும் பயந்தனர்.

சின்னமலைக்கு, சூழ இருந்த பெரும் பேராபத்து புரிந்துவிட்டது. வழக்கமாய்க் காவிரிக்கரையில் அட்டகாசம் புரிந்த வெள்ளைப்படை யொன்றை எதிர்த்துத் தாக்கினான். பெரியதம்பியும் கறுப்பச் சேர்வையும் களத்திலே நின்றனர். காவிரி வெள்ளத்தில் பல பிணங்கள் மிதந்தன.

எஞ்சிய வெள்ளைப்படை வெகுண்டு ஓடியது. ஆங்கிலத் தலைவன் தலை உருண்டது. அதனை எடுத்து வரச் சொன்னான் சின்னமலை.

கறுப்பச்சேர்வைக்கு ஒன்றும் புலனாகவில்லை. ரத்தம் ஒழுகும் தலையை இளநீர்க் காய்போல் பற்றி எடுத்துத் தலைவனின் முன் நீட்டினான்.

"ஒரு மாலை தயாராகட்டும்" என்றான். செவ்வரளி மாலையைக் கொண்டு வந்தார்கள். ஆங்கிலத் தலைவனின் வெட்டுண்ட சிரம் நன்றாகக் கழுவப்பட்டது.

சந்தனப் பொட்டிடுமாறு ஆணை பிறப்பித்தான். செவ்வரளி மாலை சூட்டப்பட்டது.

அலங்காரம் செய்யப்பட்ட தலையை ஒரு தட்டத்திலே வைத்து வீடுதோறும் சென்று தாய்மார்களுக்குக் காட்டிவருமாறு கட்டளை பிறந்தது.

வீரன் ஒருவன் தட்டத்திலே வெள்ளையனின் தலையை ஏந்தி முன்னே செல்ல, பல வீரர்கள் சூழ்ந்து செல்ல ஒவ்வொரு வீட்டு வாயில் முன்னும் காட்டினர். தாய்மார்கள் அதிசயப் பொருளைப் பார்ப்பதுபோல் குழந்தைகளை மடியில் ஏந்தி, திண்ணைகளிலும் வாசற் படியிலும் நின்று வேடிக்கை பார்த்தனர். குழந்தைகள் பயங்கரக் காட்சி பிடிக்காதது போல் வேறுபுறம் தலையைத் திருப்பிக் கொண்டனர்.

'நமது எதிரிகள் ஒழிந்தனர். இனி அமைதி தவழும். ஆபத்துச் சூழாது, அஞ்சத் தேவையில்லை'— என்ற நம்பிக்கை பிறந்தது.

"பூனைக் குலமென வெள்ளைப் படையோடப்
பூரித்து வீரப் புலிபோலச்
சேனைக் கதிபதி சின்னமலை வரும்
தீரத்தை வந்துமே பாருங்கடி"

என்று குமரிகள் வெண்ணிலவில் கும்மியடித்தனர். பெரியவர்கள் சிறிது அமைதி பெற்றனர்.

தட்டத்தில் வெள்ளைத் தலைவனின் தலையை வைத்து வீடுவீடாகக் காட்டிய சேதி சங்ககிரிக் கோட்டைக்கு எட்டியது. கேட்டவுடன் வெள்ளையர் வெகுண்டனர். "நெடுநாள் சின்னமலையை விட்டு வைப்பது நல்லதல்ல" என்ற முடிவுக்கு வந்தனர்.

சென்னைக்கு விவரம் அறிவிக்கப்பட்டது. வேலையில்லாமல் தூங்கிக் கொண்டிருந்த வெள்ளைப் பட்டாளம் சங்ககிரிக் கோட்டைக்கு மாற்றப்பட்டது.

சங்ககிரிக் கோட்டையில் ஏற்கெனவே நல்ல படைபலம் இருந்தது. அத்துடன் மைசூர்க் களங்

களிலே கைதியாகியவர்களும் படையிலே பணிபுரிய நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். சென்னைப் படை சங்க கிரிக்கு வந்ததும் கோவையை நோக்கிப் பாயுமாறு ஆணை பிறந்தது.

வெட்டுக் கிளிகள் போல் எதிர்பாராதவிதமாய் ஆங்கிலப்படை சின்னமலையின் எல்லையை நெருங்கி விட்டது.

நாசத்தின் நர்த்தனம் எங்கும் தாண்டவமாடியது. அப்பாவிகளான பொது மக்கள் கொலை செய்யப் பட்டனர். பெண்கள் கற்பிழந்தனர். குதிரைகளின் குளம்படி எழுப்பிய புழுதி மண்டலம் புகைபோல் நாட்டையே மறைத்தது. படை ஓடாநிலையை நெருங்கி விட்டது.

சின்னமலையின் படை வரிசையினர் எதிர்பாராத தாக்குதலைச் சமாளிக்கத் தயாராயினர். கோரமான போர் நடந்தது. கொங்கு வீரர்கள் பலர் களத்திலே மாண்டனர். கை கால் முறிக்கப்பட்டுக் குற்றுயிரும் குலை உயிருமாய்ப் பலர் மரணத்துடன் போராடினர். இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. சின்னமலையின் கடைசி அத்தியாயம் என்று வெள்ளையர் படை திடமாக நம்பியது.

போர் முடியவில்லை. முதல் நாள் கழிந்தது. இரண்டாம் நாள் காவிரிக்கரைப் படையும் துணைக்கு வந்து சேர்ந்தது. மூன்றும் நாளும் தொடர்ந்தது. வெள்ளையருக்கு நஷ்டம் விளைவிக்க முடிந்ததே தவிர வெற்றி கொள்ள முடியவில்லை.

சின்னமலையின் அணி குலைய ஆரம்பித்தது. படை வரிசையில் பீதி பரவ ஆரம்பித்தது. சின்னமலையின் உள்ளத்தையும் அச்சம் கவ்விக் கொண்டது.

வெளிக்குக் காட்ட முடியவில்லை. பின் வாங்கித் தாக்கு வதுதான் நல்லது என்ற முடிவுக்கு வந்தான்.

எதிரியை மேல் விழுந்து தாக்குவதை விட ஓடா நிலையை அணுகாதவாறு தற்காப்பு முயற்சியிலே ஈடு பட்டான். வெள்ளையர் இந்தத் தடவை அயர்ந்தவ ராகக் காணோம்.

சின்னமலை இறுதியான முடிவுக்கு வந்தான். வெற்றி தன்னிடமிருந்து வெகு தூரம் ஓடிவிட்டது. ஒன்று சாவு, அல்லது வெள்ளையர் கரங்களில் கைதி யாகச் சித்ரவதை செய்யப்பட்டுச் சாவு — இவை இரண்டு மட்டுமே தனக்காகக் காத்திருப்பதாக உணர்ந்து கொண்டான்.

இழிவாகக் கைதியாவதை அவன் தன்மான ரத்தம் அனுமதிக்கவில்லை. 'அந்த மரணத்தைக் களத்திலே போரிட்டுப் பெறுவேன்' என்று மனத்துக் குள்ளே சபதம் செய்து கொண்டான். வீரர்கள் மத்தியிலே உள்ள கிலியும் அவனுக்கு விளங்கி விட்டது.

முன்வரிசையிலே நிற்பது என்று முடிவுக்கு வந்தான். ஆனால் கடைசி நம்பிக்கையாகத் தடிகாரரின் கம்புவீச்சு பயன்படும் என்று நம்பினான். தடிகாரர் களின் கம்பு வீச்சு, இந்தப் போர் முறையை அறியாத வெள்ளைக்காரர்களைக் கதிகலங்கச் செய்து திக்கு முக்காட வைக்கும் என்று நம்பினான்.

இந்த முடிவுடன் தடிகாரர் படையை முன் வரிசைக்கு வரும்படி ஆணையிட்டான். அவன் யூகம் வீண் போகவில்லை. ஆங்கிலேயர் இந்த விசித்திரமான போர் முறையை எதிர்பார்க்கவில்லை. நாட்கள் நீடிக்கும் என்றும் எதிர்பார்க்கவில்லை.

கச்சை கட்டுந் தடிகாரர்களே வெள்ளைக்
காரர்களை யெங்கு கண்டாலும்
காலை யொடித்துத் துரத்துங்க ளென்றுமே
கட்டளை யிட்டானும் சின்னமலை !

— சின்னமலைக் கும்மி.

தடிகாரன் வீரத்தோடு திடீரென்று இயற்கையும் பேருதவி செய்தது. எங்கிருந்தோ வடகிழக்கு மூலையில் கருக்கல் கட்டியது. மின்னல் கண்ணைப் பறித்தது. இடி முழக்கம் வேட்டுச் சத்தம் போல் முழங்கியது. பெருமழை கொட்ட ஆரம்பித்தது. எதிரிக்கு உதவிய இந்த எதிரியை வெள்ளையர் கனவிலும் எதிர்பார்க்க வில்லை. 'கண்ணுக்குத் தோன்றிய வெற்றி கைக்கு எட்டவில்லையே !' என்று வருந்தினர்.

சேறும் சகதியும் நிறைந்தன. சின்னமலைக்குச் சின்னாட்கள் வாய்ப்பு இருக்கிறது என எண்ணி, வந்த வழியே திரும்பினர்.

கர்னல் ஹாரிஸ் சங்ககிரிக் கோட்டையில் முகாமமைத்தான்.

"சின்னமலையாம் சின்னமலை ! அசகாய சூரன் திப்புவின் திரமே நிற்கமுடியவில்லை. இந்தச் சிறுவன் துள்ளுகிறான். பொடிப் பொடி யாக்குகிறேன். வெகு விரைவில் முடியப்போகிறது !" என்று கர்ஜனை புரிந்தான். ஓடாநிலையை நோக்கி ஒரு குதிரைப் படையுடன் புறப்பட்டான்.

கொத்தளத்து மேடையிலே காவல் நின்ற இளைஞன் ஓடோடி வந்தான்.

கொலுமண்டபத்திலே சின்னமலை வீற்றிருந்தான்.

"தலைவா ! இடியோ, புயலோ, மழையோவென ஒரு குதிரைப் படை வடக்கிருந்து வருகிறது" என்ருன்.

பெரியதம்பி அவசர அவசரமாகக் கொத்தள மேடை சென்ருன். "ஆமாம். வேகமாகக் குதிரைப் படை நெருங்கிக் கொண்டிருக்கிறது" என்று சொன்னுன் திரும்பி வந்து.

ஒரு கணநேரம் யோசித்தான் சின்னமலை. ஆசனத்திலிருந்து திடீரென எழுந்தான். மடியில் எப்போதும் இருக்கும் கைத்துப்பாக்கி இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான்.

வாயிலிலே குதிரை நின்றது. நேராகக் குதிரை மீதமர்ந்தான். குதிரையை வேகமாகச் செலுத்திஞன். கூடியிருந்தவர்களுக்கு ஏதும் விளங்கவில்லை. பெரிய தம்பியும் மற்றக் குதிரை வீரர்களும் பின் தொடர, குதிரைகளைத் தேடினர்.

ஹாரிஸின் குதிரைப் படை மிக நெருங்கிவிட்டது. எதிரே வேகமாக ஒரு குதிரை வீரன் விரைந்து வருவதைக் கண்டு தளபதி வேகத்தைத் தளர்த்தி மெதுவாக வந்தான்.

சின்னமலையின் குதிரை நின்றது. வெடியோசை ஒன்று கேட்டது. தளபதியின் குதிரை மார்பில் சின்ன மலை சுட்டுவிட்டான். குண்டு பாய்ந்த குதிரை வலி தாங்காது திரும்பி எதிர்த்திசையிலே கடு வேகத்துடன் ஓடியது. மற்றக் குதிரைகளும் தளபதியின் குதிரையைப் பின்பற்றி ஓடத் தொடங்கின.

கர்னல் ஹாரிஸ் எவ்வளவோ முயன்றும் குதிரையை அடக்க முடியவில்லை. அது வந்தவழியே ஓட்டமெடுத்தது.

கர்னல் ஹாரிஸின் உற்சாகம் மங்கியது. குதிரை ரத்தம் தோய்ந்து உடல்முழுதும் சேருகியிருந்தது. ரணகளங்கள் பலவற்றைக் கண்ட சூரன் இந்தப் புது வித்தையைக் கண்டு மலேத்தான். 'நமக்கு ஈடும், இணையும் இல்லையெனக் கருதினேம். கொங்கு நாட்டானின் புத்திக் கூர்மையின் முன்பு நம் துடிப்புத் தோல்வியுற்றதே!' என நினைத்து வருந்தினன். தொங்கிய தலைகளுடன் சங்ககிரிக் கோட்டை வாயிலை அடைந்தது ஹாரிஸின் படை.

"சின்னமலையின் வெடி குண்டுக்குத் தப்பியே
சீமைப் படையின் குதிரையெல்லாம்
ஒன்றன்பின் ஞென்ருகக் குள்ளநரிபோல
ஓடு மொய்யாரத்தைப் பாருங்கடி."

— சின்னமலைக் கும்மி.

# 19

குள்ளிக்கோட்டையில் ஆங்கிலப் படையின் தனி உறைவிடங்கள் புதிதாகத் திடீரென்று எழுந்த நகரம் போலக் காட்சியளித்தன. தென்னஞ்சோலைகளும், வாழைகளும், கமுகுகளும், மாமர நிழலும் செறிந்த இயற்கைச் சூழல் போர் வீரர் முகாம் எனும் நிலையை மங்கச் செய்தது.

சுபேதார் வேலப்பன் தனது வீட்டு வாயிலிலே நாற்காலியிலே அமர்ந்து எங்கேயோ வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். தொலை தூரத்திலே கண்சிமிட்டிய நட்சத்திரங்களுக்கும் அவனுக்கும் கொஞ்சமும் சம்பந்தமில்லை. எனினும் இருண்டு போயிருந்த அவன் உள்ளத்திற்கு நம்பிக்கைச் சுடர்

ஊட்டுவதாக அவனுகக் கற்பனை செய்துகொண்டு மனச்சாந்தி தேடிக்கொண்டிருந்தான். திண்ணையிலே இருந்த மண்ணெண்ணெய் விளக்கு மினுக் மினுக் கென எரிவதும் மங்குவதுமாய் இருந்தது.

வள்ளிநாயகி சோகமே உருவானவளாய்த் திண்ணைப் படிக்கட்டிலே உட்கார்ந்திருந்தாள்.

"அண்ணு! எனக்கு வந்த அவஸ்தைகள் எந்தப் பெண்ணுக்கும் வரக்கூடாது. என் வாழ்வு துலங்கும் என்ற நம்பிக்கை போய் நெடுநாளாகிவிட்டது. எப்படி யாவது ஒருமுறை அவர் திருமுகத்தைப் பார்த்து விட்டுச் செத்துவிட வேண்டும் போல் தோன்றுகிறது. என்னல் உங்களுக்கும் எவ்வளவோ இடைஞ்சல். சொந்தத் தந்தையைவிட அன்புடன் என்னை ஆதரித் தீர்கள். நீங்கள் மட்டும் இல்லாதிருந்தால் இந்த அநாதை குளமோ, குட்டையோ தேட வேண்டி வந்திருக்கும்."

"அப்படியெல்லாம் சொல்லாதேயம்மா. நான் என்ன அன்னியனு? உன்னுடைய ஒன்றுவிட்ட அண்ணன்தானே? என் தாயாருக்குப் பெரியப்பா செய்த உதவிகளுக்கு என் வாழ்வு முழுதும் கடமைப் பட்டிருக்கிறேன். எனக்கு ஒன்றும் பாவம் இல்லை யம்மா!" என்று சொல்லும்போது அவனையும் அறி யாமல் அவன் இதயத்திலே அழுததி வைத்திருந்த துக்கம் தாரை தாரையாகக் கண்ணீராய்க் கொட்டியது.

"என்ன அண்ணு! சிறு குழந்தை போல் அழுகிறீர்கள்! யாராவது பார்த்தால்...." என்ருள் வள்ளிநாயகி.

சுபேதார் வேலப்பனின் கண்ணீர்த் திரையைத் தாண்டி அவன் வாழ்வு நாடகத்தின் ஒவ்வொரு காட்சி யும் அவன் முன்னே வந்து போயிற்று.

**வே**லப்பன் வள்ளிநாயகிக்கு ஒன்றுவிட்ட அண்ணன். தந்தையை இழந்துவிட்டான். வயோதிக அன்னையிடம் சாதாரணக் காரணத்திற்குக் கோபித்துக் கொண்டு மைசூர்ப் பட்டாளத்திலே சேர்ந்தான். அவனுடைய ஊர் நல்ல மங்கை பாளையம்.

வேலப்பனின் தாயார் மகனின் செயல் கண்டு நோய்வாய்ப்பட்டார். விசனமே அந்த அம்மையாரை அரித்தது. இடமாற்றத்தினுலாவது தேறுவார்கள் என்று கருதிய முத்துவேலப்பர் அவ்வம்மையாரைச் சென்னி மலைக்கே அழைத்துச் சென்றூர். மகனிட மிருந்து தகவலும் இல்லை, திரும்பவும் இல்லை.

தாயாருக்குச் சித்தப் பிரமை பிடித்தது. கொலைக் களத்திலே மகன் மாண்டு கிடப்பது போலவும், எதிரிகள் அவன் தலையை வெட்டுவது போலவும், ரத்தம் குபுகுபு வென்று ஓடுவது போலவும் பிதற்றிக் கொண்டேயிருந்தார்கள். முத்து வேலப்பரின் முயற்சியும், வைத்தியர்களின் மூலிகைகளும் அம்மை யாரைக் குணப்படுத்தவில்லை. அணு அணுவாகத் தேய்ந்து கடைசியிலே முத்துவேலப்பரின் இல்லத்தி லேயே உயிரை விட்டார்கள்.

வேலப்பனைத் தேட முத்து வேலப்பர் எடுத்துக் கொண்ட எந்த முயற்சியும் பலிக்கவில்லை. எந்த விவரமும் அகப்படவில்லை. சலித்துப்போய் அவரும் கண்ணை மூடினூர்.

வேலப்பன் மைசூர்ப் படையிலே பணியாற்றி சுபேதார் நிலைக்கு உயர்ந்தான்.

வெற்றிக் காற்று ஆங்கிலேயரின் திசையிலே வீசிற்று. வேலப்பன் போர்க் கைதியாகப் பிடிக்கப்

பட்டான். சங்ககிரிக் கோட்டையிலே மறுநாள் வாடினான்.

கைதிகளாக வைத்திருப்பதில் ஏற்படும் விரயத்தைக் கண்டு ஆங்கிலேயர் புது வழியைப் புகுத்தினர். தங்கள் சேனையிலே பணிபுரியக் கைதிகள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். மறுப்பவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

ஆரம்பத்தில் வேலப்பனுக்கு எதிரியின் படைவீரனாவது பிடிக்கவில்லை. சாவே மேலென்று கருதினான். ஆனால் அதுவரை கடினமாக இருந்த அவன் இதயத்தில் வயோதிகத் தாயாரைப் பார்க்கவேண்டும் என்ற பாசம் வளர்ந்தது. அதற்குப் படைவீரனாவதைத் தவிர மார்க்கம் தென்படவில்லை. சம்மதம் தெரிவித்தான். சங்ககிரிக் கோட்டையிலேயிருந்த தமிழர் படைக்குத் தலைவனானான்.

அடிக்கடி அவன் நெஞ்சில் ஏதோ முள் குத்தியது போல் வலிக்கும். எதிரிக்கே கையாளாக வேண்டிய துர்ப்பாக்கியம் வந்ததே என நொந்துகொண்டான். நடைப் பிணமாக இயந்திரம்போல் உழன்றுகொண்டிருந்தான். படையிலேயிருந்து வெளியே செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

அவன் தலைமையிலே இருந்த வீரர்களில் நம்பிக்கையான ஒருவனை அழைத்தான். அவனிடம் தனது வேதனைமிகுந்த வரலாற்றை, தனது வாழ்வின் பிடிப்பை எடுத்துரைத்தான். நல்ல மங்கை பாளையம் சென்று அவன் தாயாரைச் சந்தித்து நல்ல சேதி கொண்டுவருமாறு கட்டளையிட்டான். ஆனால் அதனைச் சொல்லும்போதே அவனது தாயார் அவனிடமிருந்து நெடுந்தூரம் சென்றுவிட்டதாக ஓர் உணர்வு அவனை அலைக்கழித்தது. அவனே கட்டளையை மாற்றினான்.

"அங்கு விவரம் கிடைக்கவில்லை என்றால் சென்னிமலை முத்துவேலப்பரின் மாளிகையில் விசாரி" என்று கூறி அனுப்பிவைத்தான்.

காங்கேயம் வட்டத்தைச் சேர்ந்தவன் அந்த வீரன். "எப்படியும் மகிழ்வூட்டும் சேதியுடன் திரும்புவேன்" என்று கூறிக் கிளம்பினான்.

நல்ல மங்கை பாளையத்திலேயே அவனுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. அவன் தேடி வந்த விவரத்துடன் முத்துவேலப்பரும் காலமாகிவிட்டார் என்று மற்றொரு வேதனைச் சம்பவமும் அவனுக்குத் தெரிந்தது.

முத்துவேலப்பர் மாளிகைக்குச் சென்றான். 'வேலப்பனின் ஆள்' என்று அறிவித்தான்.

"அண்ணாவது உயிரோடு இருக்கிறாரா? இந்தப் பாவியைத் தத்தளிக்க விட்டுவிட்டு எல்லோரும் சென்றுவிட்டார்கள்" என்று கதறிக் கண்ணீர் விட்டாள் வள்ளிநாயகி.

தலைவனுக்கு நல்ல சேதி எடுத்துச் செல்ல விரும்பிய வீரன் சோகபிம்பமாய்த் திரும்பினான். தாயாரின் மறைவைத் தட்டுத் தடுமாறிச் சொல்லி முடித்தான்.

முத்துவேலப்பரும் மறைந்துவிட்டார் என்பதையும் திணறிக்கொண்டு சொன்னான். "கண்ணீரும் கம்பலையுமாக ஒரு பெண், உங்கள் சகோதரி, உங்கள் வரவுக்காகக் காத்திருக்கிறாள். ஒவ்வொரு வினாடியும் ஆபத்துதான். அந்தப் பெண் விரக்தியின் விளிம்பிலே ஊசலாடிக்கொண்டிருக்கிறாள். அனுமதியில்லாவிட்டாலும் பரவாயில்லை. உடனே சென்று வருவது நல்லது" என்று ஆபத்தைக் கோடிட்டுக் காட்டினான்.

வேலப்பனின் குதிரை சென்னிமலையை நோக்கிப் பறந்தது. குதிரையிலேயிருந்து இறங்கிய ஆள் முற்றிலும் வேறுன ஆளாகப்பட்டது வள்ளிநாயகிக்கு. அவள் சின்னஞ்சிறு பிராயத்தில் பார்த்திருந்த வேலப்ப னுக்கும் இந்த வேலப்பனுக்கும் பெரிய இடை வெளியைக் கண்டாள். வேலப்பனும் வள்ளிநாயகி வளர்ந்து பெரியவளாகி இருப்பாள் என்று கருதினுனே தவிர, தங்கை இவ்வளவு எழிலரசியாக உருமாறி இருப்பாள் என்று எதிர்பார்க்கவில்லை.

தாயைக் கட்டிக்கொண்டு கதறுவதுபோல் கதறினுன்.

சின்னம்மாவின் துயர முடிவையும், அப்பாவின் அகால மரணத்தையும் கண்ணீரால் எழுதிக் காட்டினுள் வள்ளிநாயகி.

திரன் சின்னமலை குடும்பத்தில் பெண் பேசிய நிகழ்ச்சியையும், அவர்கள் மைசூர் சென்ற நிகழ்ச்சி யையும எடுத்துரைத்தாள்.

"அண்ணு! என்னை விட்டு விட்டுச் செல்லா தீர்கள். கடைசியாக இருக்கும் வள்ளியையும் இழந்து விடுவீர்கள்'' என்று காலைக் கட்டிக்கொண்டு கண்ணீர் விட்டாள்.

வேலப்பன் இதயத்தை எவ்வளவோ இரும் பாக்கிக் கொண்டிருந்தான். ஆனுல் வீட்டிற்குள் அவன் இதயம் பாகாக உருகிவிட்டது.

தாய்க்குச் செய்யத் தவறிய கடமை அவன் நெஞ்சத்தை வாட்டியது. அனுதையாகியிருந்த தன் அன்னைக்குக் கடைசி நாட்களில் பாதுகாப்பளித்த குடும்பத்தின் இளம் தளிர் புயலிலே சிக்கித் தடுமாறுவதை அவனுல் புரிந்து கொள்ள முடிந்தது.

அவனுல் சென்னிமலையில் இருக்க முடியாது. வள்ளிநாயகியையும் விட்டுச் செல்வது நல்லதல்ல என்று பட்டது. ஏதோ முடிவுக்கு வந்தவன் போல், "அம்மா! வள்ளி! பயப்படாதே! நான் இருக்கும் போது உனக்கு ஒரு குறையும் வராது. உனது நலனைவிட வேருேர் அக்கறை உலகத்தில் எனக்கு இல்லை; எல்லாம் மகிழ்ச்சிகரமாய் முடியும். சின்னமலை சகோதரர்கள் கண்டிப்பாக விரைவில் திரும்பிவிடுவர். உனக்குத் திருமண ஏற்பாடு செய்வது என் பொறுப்பு. அதுவரை நீ என்னுடனேயே இருக்கலாம். கவலைப் படாதே. சங்ககிரிக்கு வருவதற்குச் சம்மதம்தானே?" என்ருன்.

கடலிலே மூழ்கிக் கொண்டிருந்தவளுக்குப் பிழைத்துக் கொள்ள ஒரு கட்டை கிடைத்ததுபோல் இருந்தது வள்ளிநாயகிக்கு.

"அவரின் வாக்குக்காகத்தான் காத்திருக்கிறேன். உங்கள் உதவியை என் வாழ்நாள் முழுதும் மறக்க மாட்டேன். நான் சொல்லிக் கொண்டு புறப்படுவதற்கு யாருமில்லை. தேவையுமில்லை. வள்ளியின் விவரம் தெரியாமலே போகட்டும். இப்பொழுதே கிளம்புகிறேன் அண்ணு" என்ருள்.

"உதவியல்ல, அம்மா! கடமை" என்ருன் வேலப்பன்.

சங்ககிரிக்கு வந்து சேர்ந்தாள் வள்ளிநாயகி.

வள்ளிநாயகியைக் காணும் என்ற சேதி பத்து நாட்கள் சென்னிமலை வட்டாரத்திலே பரபரப்பாக இருந்தது. தங்கள் தங்கள் கற்பனைக்குத் தகுந்தவாறு அவள் சென்ற இடம், வீட்டை விட்டுப்போய் விட்ட சம்பவம் ஆகியவை குறித்துக் கதை பேசினர்,

வெறும் வாய்களுக்கு அவல் கிடைத்தது. நெடுநேரம் மற்றவர்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்க முடியுமா? அவரவர் வேலைகளைக் கவனிப்பதில் ஈடுபட்டனர்.

முத்துவேலப்பர் மாளிகை வேலையாட்களுக்குப் பெரும் புதிராக இருந்தது. 'மாடு, மனை, மாளிகை யெல்லாம் யாரிடம் சேர்ப்பது? யார் இதற்கு உரியவர்?' என்ற கவலையே, 'வள்ளிநாயகியைக் காணோம்' என்ற கவலையைவிடப் பெரிதாக இருந்தது.

சங்ககிரியில் வேலப்பனின் மனையில் குடியேறினாள் வள்ளி. வள்ளியின் வரவுக்குப் பின் வேலப்பனின் மனநிலையிலேயே பெரும் மாறுதல் ஏற்பட்டது. 'தங்கையின் திருமணம்' — அதுதான் அவனது ஜீவிய லட்சியமாக்கப்பட்டது.

கொங்குநாட்டு நிலைமைகளையும், திப்புவின் சண்டைகளையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். வள்ளிநாயகியும் முன்போல் பேதைப் பெண்ணல்ல. தனக்குக் கணவனாக வரவிருக்கும் வாலிபன் எவ்வளவு புனிதமான — ஆனால் ஆபத்து நிறைந்த — காரியத்திலே ஈடுபட்டிருந்தான் என்பதைத் தெரிந்துகொண்டிருந்தாள்.

வேலப்பனின் அன்பும் ஆதரவும் அவளுக்குச் சிறிது நிம்மதியைக் கொடுத்தன. அதேபோல வேலப்பனுக்கும் அவள் வருகை கொஞ்சம் அமைதியை அளித்தது.

'சின்னமலை திரும்பிவிட்டான்; ஓடாநிலையிலே கோட்டை அமைந்தது' என்று கேள்விப்பட்ட

நேரத்தில் மனம் மகிழ்ந்தான். வள்ளியின் வாழ்வில் அருணோதயம் தென்படுகிறது என்று ஆனந்தப் பட்டான்.

காவிரிக்கரையிலே வெள்ளையர் கொட்டமும் கர்னல் ஹாரிசின் குதிரைப் படையெடுப்பும் சின்னமலையின் வீரத்தின் முன்பு தோல்வியடைந்தன. சேதி அவனுக்குத் தேன் வார்த்ததுபோல் இருந்தது.

காலத்தை எதிர் நோக்கியிருந்தான். ஆனால் காலமோ கனியவில்லை. தீரன் சின்னமலைக்கு எதிராகக் கூரான எதிர்ப்பை ஆங்கிலேயர் தயாரித்துக் கொண் டிருந்தனர். சங்ககிரிக் கோட்டையே அதன் தலைமை நிலையம் ஆனது. என்றைக்குத் தானே கொங்குப் படையை எதிர்த்துச் சுடவேண்டிய நிலை வந்துவிடுமோ என்று அஞ்சிக் கொண்டிருந்தான். வள்ளியின் காரியம் தள்ளிக்கொண்டே போனது.

அந்த நேரத்தில் கள்ளிக்கோட்டைக்கு சுபேதார் வேலப்பன் மாற்றப்பட்டான். வேறு வழியில்லாமல் வள்ளியையும் கள்ளிக்கோட்டைக்கு அழைத்துச் சென்றான்.

கோவைக் கோட்டத்தின் நிலைமை ஆங்கிலே யருக்குத் 'தலைவலி'யாக இருந்தது.

கல்கத்தாவிலும், சென்னையிலும், சங்ககிரிக் கோட்டையிலும், கள்ளிக்கோட்டையிலும் அது பற்றியே பேச்சாக இருந்தது.

தீரன் சின்னமலையின் கட்சி வெற்றிபெற வேண்டு மென்ற ஆசை சுபேதார் வேலப்பனுக்கு இருந்தது. ஆனால் வெள்ளையரின் படைப் பெருக்கும் தளவாடங் களும் அவனுக்கு மருட்சியைக் கொடுத்தன.

கோவைக் கோட்டத்தின் மீது பாய்வதற்குக் கள்ளிக்கோட்டையில் ஆயத்தம் நடைபெற்றது. நெடு நாட்களாகச் சந்திக்க விரும்பாத ஒரு நிகழ்ச்சியில் பங்கு கொள்ள வேண்டிய கட்டம் தன்னை நெருங்கி விட்டதாக வேலப்பன் உணர்ந்தான். தன் உயிரைப் பற்றிக் கவலைப் படவில்லை. 'வள்ளிநாயகியை உரிய இடத்தில் சேர்க்க வேண்டும். சின்னமலை சகோதரர் களையும் ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும்' — இந்த இரண்டும் அவனுக்கு முக்கியமாகப் பட்டன. அதற்கான செயல்களுக்கு ஒரு முடிவும் எடுத்து விட்டான்.

"வள்ளி, இங்கே உள்ளே வா அம்மா! இதை மனத்திற்குள் படி. இன்னும் கொஞ்ச நேரத்தில் குதிரை வண்டி வரும். ஊருக்குக் கிளம்புவதற்குத் தயாராக வேண்டும்" என்றான்.

மளமளவென்று உள்ளே சென்றான். வள்ளி நாயகி பின்தொடர்ந்தாள். வெளிக் கதவைச் சாத்தினான்; வள்ளிநாயகியின் கையிலே ஒரு கடிதத்தை நீட்டினான். அவள் நடுங்கிக் கொண்டே வாங்கினாள்; மங்கிய விளக்கொளியிலே படித்தாள்.

"அன்புள்ள தீரர் சின்னமலை, பெரியதம்பி ஆகியவர்களுக்கு எழுதிக் கொண்டது. இந்த எதிர் பாராத கடிதம் இரண்டு சேதிகளைத் தாங்கிக்கொண்டு வருகிறது. உங்கள் மீது அக்கறைகொண்ட, கொங்கு நாட்டு விடுதலையில் பற்றுக் கொண்ட அன்பனின் ஓலை.

"சென்னிமலை முத்துவேலப்பரின் குடும்பத்தைச் சேர்ந்தவன் நான். உங்கள் குடும்பத்தரசியாய் — குல விளக்காய் — இருக்க வேண்டிய காணாமற்போன என் தங்கை இவ்வளவு நாளும் இந்த எளியவனுடன் தான் இருந்தாள். எங்கள் குடும்பம் சிதைந்த பிறகு

அவளைச் சிறப்புடன் திருமணம் செய்து அனுப்ப வேண்டுமென்றிருந்த எனது தீராத ஆசை நிறைவேறுமலேயே போய்விடுமோ என்ற அச்சம் பிறந்து விட்டது. இந்தக் கடிதம் உங்களுக்குக் கிடைக்கும் போது என் தங்கை சென்னிமலை இல்லத்தில் பாதுகாப்பாய்ச் சேர்ந்திருப்பாள்.

"நான் இதனை எழுதுவதற்கு இன்னொரு காரணமும் உண்டு. தங்கள் கோட்டையின் மீது பாய்வதற்கு முப்பத்தாறு பீரங்கிகள் கிளம்புவதற்குத் தயாராக உள்ளன. இன்னும் பத்து நாட்களில் அங்கு வந்து சேரலாம். என்னைப் போன்றவர்களை அந்தக் கசப்பான காரியத்தில் ஈடுபடும்படி கட்டளையிடப் படலாம்.

"தவறாகக் கருதக் கூடாது. பயங்கரமான பீரங்கிகள் தப்புவிக்கும் மார்க்கம் கிடையாது. அருள் கூர்ந்து தாங்களும் தங்கள் படையினரும் கோட்டையைக் காலி செய்துவிட்டுத் தலைமறைவான இடத்திற்குப்போய் விடுங்கள். தங்களைக் கைதியாக்கி விலங்கிட்டுச் செல்லத் துடித்து நிற்கின்றனர். அஞ்சுவது அஞ்சாமை பேதைமை. இதிலே கோழைத்தனமில்லை. தாங்கள் வாழவேண்டும். தங்கள் வாழ்வில்தான் கொங்குநாட்டின் கீர்த்தி இருக்கிறது. கண்டிப்பாக வேறிடம் சென்று விடுங்கள். மரணத்திற்கும் அஞ்சாமல் என் கடமையெனக் கருதி இதனைத் தெரிவித்துள்ளேன்.

இப்படிக்கு

**சுபேதார் வேலப்பன்."**

# 20

வள்ளிநாயகி சென்னிமலை வந்து சேர்ந்தாள். ஒரு காலத்தில் கலகலப்புடன் விளங்கிய முத்துவேலப்பர் மாளிகை பாழடைந்த மண்டபம்போல் காட்சி யளித்தது. ஆள் அம்புகள் யாரையும் காணோம்.

ஆண் உடையிலிருந்த வள்ளிநாயகி வண்டியி லிருந்து இறங்கியதும் உடன் வந்த ஆட்களுக்கு ஒரு பெரும் பாரத்தை இறக்கியதாகப்பட்டது. அவர்கள் முகங்களில் நிம்மதி தெரிந்தது.

"ஜாக்கிரதையாய் இருக்க வேண்டுமம்மா" என்று சொல்லிவிட்டுக் குதிரையை அதட்டினர். வள்ளிநாயகி அவர்களையும் வரவேற்கும் நிலையில் இல்லை; அவர் களிடம் சுபேதார் ஒப்படைத்துள்ள அவசர வேலையும்

அவளுக்குத் தெரியும். உபசார மொழிகள் ஏதும் கூறவில்லை வண்டி நகர்ந்தது.

உள்ளே நுழைந்ததும் தன் சொந்த வீட்டிற்குள் நுழைகிற புத்துணர்ச்சி அவளுக்கு இல்லை ஏதோ தப்புவித்த சிறைச்சாலையிலேயே மீண்டும் அடைக்கப் பட்ட கைதியின் உணர்வுதான் அவளிடம் இருந்தது.

மூடப்பட்ட பலகணிகள், தாறுமாருகக் கிடந்த பொருள்கள், சருகாகிவிட்ட மல்லிகைப் பந்தர், வாடிப் போன செடி கொடிகள், தூசி படிந்த தரை — இந்தக் காட்சியே அவளுக்கு வீட்டின் நிலையைப் படம் பிடித்துக் காட்டியது.

வேலைக்காரக் கிழவி ஒருத்தி மூலையிலே படுத் திருந்தாள். காலடிச் சத்தம் கேட்டவுடன் படுத்துக் கொண்டே திரும்பிப் பார்த்தாள். ஆணுடையிலே இருந்த வள்ளி நாயகியை அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

"இங்கே யாருமில்லையப்பா! எல்லோரும் ஊருக்குப் போய் இருக்கிருர்கள்" என்று சோர்வோடு சொன்ஞள்.

"பாட்டி! ஊருக்குப் போனவள் திரும்பி வந் துள்ளேன். என்னைத் தெரியவில்லையா?" என்ருள் வள்ளி நாயகி.

பாட்டி பயந்துவிட்டாள். காணுமற்போன வள்ளி நாயகியின் குரலை அவளால் கண்டு கொள்ள முடிந்தது. எதிரிலே ஆணுருவம். வள்ளிநாயகியின் குரல் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து ஓரமாக நின்று, அந்த உருவத்தைப் பார்ப்பதற்கே பயந்தாள்.

வள்ளிநாயகியின் முடிவைப்பற்றி அவளுக்குப் புரிந்த வகையில் கற்பனை செய்து வைத்திருந்தாள்.

பேயோ, பிசாசோ, பூதமோ என்ற அச்சம் அவளைப் பற்றிக் கொண்டது. அவள் ஒதுங்கி ஒளிவதைக்கண்ட வள்ளிநாயகி அருகே சென்று தன் தலைப்பாகையை அவிழ்த்தாள்; அவள் கூந்தல் புரண்டு நெளிந்தது. பாட்டிக்கு இன்னும் பயம் அதிகமாகிவிட்டது.

"நான்தான் பாட்டி! ஏன் இப்படி மிரளுகிருய்?" என்று அவள் கையைப் பிடித்தாள். பாட்டி அலறி விட்டாள். வள்ளிநாயகிக்கும் நடுக்கம் பிறந்தது. அவசர அவசரமாக ஆணுடையைக் களைந்து விட்டுப் பழைய வள்ளிநாயகியாக வந்தாள்.

அப்போதும் பாட்டிக்குச் சந்தேகம் நீங்கவில்லை. கடைசியாக, "குழந்தே! எப்படியோ வந்து சேர்ந் தாயே அம்மா!" என்று முடித்தாள்.

வள்ளிநாயகி ஒன்றும் பதில் கூறவில்லை. பாட்டியும் ஒன்றும் விசாரிக்கவில்லை. வள்ளிநாயகிக்கு வெறிச்சென்று தோன்றியது. சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே அங்குமிங்கும் உலவினுள்.

வள்ளிநாயகியை விட்டுச் சென்ற வண்டி ஓடா நிலை எல்லையை அடைந்ததும் திடீரென்று நின்றது.

"வண்டி இங்கேயே நிற்கட்டும். சுபேதாரின் கட்டளைப்படி கடிதத்தைக் கொடுத்துத் திரும்புவோம்" என்று இறங்கி நடந்தனர்.

கோட்டை மைதானத்தைக் கடந்து வாயிலை அணுகினர். வாயிலில் வேற்கம்பு ஏந்தி இரு வீரர்கள் நின்றனர்.

"தலைவர் கோட்டையில் உள்ளாரா?" என்றனர்.

"ஆம்! என்ன வேண்டும்?" என்று அதட்ட லாகப் பதில் வந்தது.

"எதுவும் வேண்டாம், இந்தக் கடிதத்தை அவசரமாக அவரிடம் சேர்ப்பிக்க வேண்டும்" என்று ஒருவன் கடிதத்தை நீட்டினான்.

பெற்றுக்கொண்ட காவலாளி உள்ளே சென்றான். வந்தவர் பதிலுக்குக் காத்திருக்கவில்லை. தங்களை அடையாளம் தெரிந்து கொள்வதற்கு முன் வேகமாய் மறையவேண்டுமென்று வந்த வழியே திரும்பினர். மற்றக் காவலாளிக்கு ஆச்சரியமாய் இருந்தது.

காவலாளி சின்னமலையிடம் கடிதத்தை நீட்டிய தருணம் சின்னமலை, பெரியதம்பி, கறுப்பச் சேர்வை ஆகியவர்களிடம் ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தான். கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான். மற்றவர்கள் அவன் முகத்திலிருந்து கடிதத்தில் கண்டவைகளை அறிய முயன்று கொண்டிருந்தனர்.

அவன் சாயலிலிருந்து ஏதோ ஒரு பெரிய திருப்பம் எதிர்நோக்கியுள்ளது என்பது விளங்கி விட்டது. சின்னமலை மீண்டும் மீண்டும் படித்தான். எத்தனை தடவை படித்தான் என்று சொல்ல முடியாது. விவரமும் சொல்லாமல் கடிதத்தையும் கொடுக்காமல் திரும்பத் திரும்ப அதையே படித்தது அவர்களுக்கு பீதியை உண்டுபண்ணிவிட்டது.

"பெரியதம்பி! உண்மையாக இருக்குமா?" என்று சொல்லிக் கடிதத்தை நீட்டினான் சின்னமலை.

பெரியதம்பிக்கும் உண்மை துலங்கவில்லை. கடிதத்தின் ஒருபகுதி அவன் உள்ளத்தை அழுத்திக் கொண்டிருந்த ஒரு சிக்கலை அழ்வித்தது. ஆனால் மறுபகுதி அதைவிடப் பெரிய முடிச்சைப் போட்டிருந்தது. அவனும் திணறினான். எல்லோரும் யோசித்தார்கள். கடிதம் கொண்டு வந்த ஆளை அழைத்து வருமாறு காவலாளியைப் பணித்தான்.

காவலாளி சென்று திரும்பினான். கடிதத்தை ஒப்புவித்ததும் மறைந்துவிட்டதாக பதில் கிடைத்தது.

"எங்கே மறைந்துவிட முடியும்! நாலு திக்குகளிலும் குதிரைகளை அனுப்பினால் அரை நாழிகையில் அகப்பட்டு விடுவார்கள்" என்றான் கறுப்பச் சேர்வை.

"பொறு! வேண்டாம். கடிதத்தைப் பற்றிச் சந்தேகம் இருந்தால் இவ்வளவு கவலைப்பட்டிருக்க மாட்டேன். உதவி செய்ய வந்தவர்களைத் தொடருவது முறையல்ல. நாம் என்ன செய்யவேண்டும் என்பதை யோசிப்போம்" என்றான் சின்னமலை.

"அண்ணா! அடிக்கடி சொல்வீர்கள், 'பிரச்சினையைத் தள்ளிப் போடுவதாலேயே தப்பிக்க முடியாது; அதனுடன் மோதிச் சமாளிப்பதுதான் சிக்கலை அறுக்க வழி' என்று. உங்கள் அந்தப் பொன்னுரை பொருந்துகிற நேரம் இதைவிட வேறு இல்லை. நெருக்கடியின் மத்தியில் புகுந்துவிடுவோம். ஆளைப் பின் தொடர வேண்டாம் என்று கூறிவிட்டீர்கள். வள்ளிநாயகியாவது சென்னிமலை சேர்ந்தது உண்மையா என்று தெரிந்துகொள்ள வேண்டும், அண்ணா!" என்றான் பெரியதம்பி.

"இதற்கில்லா விட்டாலும் வள்ளிநாயகியைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியதுதான். நீ உடனே சென்னிமலை சென்று விவரம் தெரிந்து அவளையும் அழைத்து வந்துவிடு. அவள் தனியே இருப்பது நல்லதல்ல. அதற்குள் மற்ற ஏற்பாடுகள் தயாராக இருக்கும்" என்றான் சின்னமலை.

பெரியதம்பியின் குதிரை சென்னிமலையை நோக்கிச் சென்றது. முன்பு சென்னிமலை செல்லும் போது இருந்த உற்சாகம், கனவுகள் இப்போது

அவனிடம் இல்லே. போர்வீரனுகத்தான் இருந்தான். தலைக்கு மேலே பெரு வெள்ளமாக அவனுக்குப் பட்டது.

முத்துவேலப்பர் மாளிகையை அடைந்ததும் நேராக உள்ளே சென்முன். வழி நெடுக அக்கம் பக்கத்திலிருந்தோர் அவனைக் கூர்ந்து நோக்கினர். அவன் யாருக்காகவும் கூச்சப்படவில்லை.

வள்ளிநாயகி திரும்பியுள்ள சேதி ஏற்கெனவே ஊர் முழுதும் காட்டுத் தீ போல் பரவி முத்துவேலப்பர் மாளிகையையே எல்லாக் கண்களும் முற்றுகையிட்டுக் கொண்டிருந்தன. அந்த நேரத்தில் பெரியதம்பியின் பிரவேசமும் மற்ருேர் நிகழ்ச்சியாகியது. இவைகளைக் கவனிக்கப் பெரியதம்பிக்கு ஓய்வான மனதில்லை.

வள்ளிநாயகி இருந்தாள். வள்ளிநாயகியைக் கண்டதால் ஏற்பட்ட களிப்பை விட, கடிதம் எவ்வளவு உண்மை என்ற பயம் அவன் உடல் முழுதும் பரவி அவன் இரத்தத்தையே உலர வைத்தது. வள்ளி நாயகியும் கடிதத்தின் உண்மைகளை உறுதிப் படுத்தினுள்.

அவர்கள் சந்திப்பு, காதலன்—காதலி சந்திப்பாக இல்லை. போர் முகத்திற்குச் செல்லும் ராணுவ தளபதிகள் திட்டம் தீட்டுவது போல் இருந்தது.

"வள்ளி! நடந்தவைகள் நடந்தவையாகவே போகட்டும். இனி நடப்பவை நமக்கு நம்பிக்கை யூட்டுபவையாக அமையட்டும். கடிதத்தின் உண்மையை அறிந்து செல்லமட்டும் நான் இங்கு வரவில்லை. நீ தனியாக இருப்பது தகாது. எந்த நேரத்தில் என்ன நிகழுமோ! கண் தெரிந்து உன்னை ஆபத்துச் சூழ அனுமதிக்க மாட்டோம். அண்ணுவின்

கட்டளை, நீ என்னுடன் கிளம்பத் தயாராக வேண்டும்'' என்றான்.

''அன்பரே ! உங்கள் அன்பில் எனக்குக் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. என் பொருட்டுக் காட்டும் அக்கறைக்கு மிக்க நன்றி ! தலைக்கு மேல் வெள்ளம் ! வெள்ளத்தில் மூழ்கி விடுவோமோ, உயிர் பிழைப் போமோ என்பதே தெரியாது தவிக்கும் நேரம். பழைய வள்ளி அல்ல நான். என் காதலர் ஈடுபட்டுள்ள ஒப்பற்ற பணியை நான் அறிவேன். இந்த அபலைப் பெண்ணுக்காகப் பெரும் பணியிலிருந்து பின் வாங்கினார் என்ற மாசுபடிய விடமாட்டேன். எனக்கு ஏதும் நிகழ்ந்துவிடாது. அது மட்டுமல்ல; நான் தங்கள் மனைவியல்ல. முறைப்படி என் இல்லம் வந்து பெண் பேசித் திருமணம் முடிந்த பின்தான் உங்களுடன் வருவது முறை. நீங்கள் சென்று வாருங்கள். காலமெல்லாம் கன்னியாகவே காத் திருப்பேன்'' என்று ஆவேசமாக மொழிந்தாள் வள்ளிநாயகி.

அவனது வேண்டுகோள்கள் வீணாயின. மிகவும் பிடிவாதக்காரியாக இருந்தாள். ''வள்ளி ! அடுத்து சந்திக்கும் போது மணமாலையுடன் சந்திப்பேன். அல்லது என் மரணச் சேதியைக் கேள்விப்படுவாய் !'' என்று கூறி விடைபெற்றான்.

''அய்யோ ! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். உங்களுக்கு ஒன்றும் நேராது. அண்ணனின் கடிதத்தை மட்டும் அலட்சியமாகக் கருதாதீர்கள். அதன்படி நடந்து கொள்ளுங்கள். ஒன்றுமட்டும் சொல்கிறேன். இந்த வள்ளிக்கு உலகத்தில் எந்த பயமும் கிடையாது ! உங்களுக்காக உயிர் வாழ்கிறேனே தவிர வேறு ஓர்

ஆசையும் கிடையாது'' என்றுள். அவள் சொல்லில் இதயத்தில் ஊறிப்போயிருந்த உறுதி தொனித்தது.

பெரியதம்பி ஓடாநிலை திரும்பினுன். வள்ளி நாயகியைக் கண்டதையும் அவள் வர மறுத்ததையும் கூறினுன். கடிதத்தின் உண்மையை மேலும் உறுதிப் படுத்தினுன்.

''கடிதத்தைப் பார்க்கும் போதே எனக்குத் தெரியும் தம்பி. வள்ளிநாயகியை அழைத்து வரட்டும் என்று தான் உன்னை அனுப்பினேன். அவள் கூறியதும் தவறில்லை. இன்றே ஓடா நிலைக் கோட்டை காலி செய்யப்படுகிறது. நமது வீரர்கள் நாட்டின் நாலா பக்கங்களிலும் சிதறிக் காவல் புரிவர். ஸ்ரீரங்கப்பட்டினத்தின் கதிக்கு நமது சேனு வீரர்களை ஆக்கக்கூடாது. எதிரியின் கை ஓங்கி நிற்கிறது. ஒதுங்கி நிற்பதைத் தவிர வழியில்லை. நாம் போகும் இடத்தை யாருக்கும் தெரிவிக்க வேண்டியதில்லை. நம்முடன் மெய்க்காப்பாளர் பத்துப்பேர் பின் தொடரட்டும். நமது சமையல்காரன் சாமியப்பனும் உடன் வருவான். நமக்கு ஆயுதங்கள் இப்போது தேவையில்லை. இரண்டு மாதங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள் ஏற்பாடு செய்யப்பட்டு, தலைமறைவாக இரண்டு திங்கள் கருமலைக் காடுகளிலே நாம் வாசம் செய்வோம். எந்த வெள்ளையனுலும் நம்மைக் கண்டு பிடிக்க முடியாது. நம்முடன் வருபவர் களுக்குக்கூட நாம் போகுமிடம் தெரியவேண்டிய தில்லை. வெள்ளையரின் வெறியாட்டம் ஓயட்டும். வெற்றி மாதா என்றும் நம்மை ஏமாற்றமாட்டாள். நான் கூறியபடி நடக்கட்டும். யோசிப்பதற்கு நேரமில்லை. கட்டளைகள் பறக்கட்டும்; கோட்டை

காலியாகட்டும்'' என்று தனது திட்டத்தைப் பெரிய தம்பியிடம் தெரிவித்தான் சின்னமலை.

ஓடா நிலையைச் சுற்றியிருந்தவர்களுக்கு எதுவும் புரியவில்லை. இரவோடு இரவாகப் பட்டாளங்கள் வேறிடம் சென்றன. ஆயுத தளவாடங்கள் எல்லா வற்றையும் வாரிச் சென்றனர். கோட்டையிலும் கோட்டையைச் சுற்றியும் மயான அமைதி நிலவியது ! சுற்றுவட்டாரத்தாருக்குப் படை வீரர்களெல்லாம் எங்குபோனார்கள், என்ன ஆனார்கள் என்பதே ஆச்சரியமாய் இருந்தது. படைவீரர்களுக்குச் சின்னமலை எந்த அணியில் இருந்தான் என்பது மர்மமாக இருந்தது.

கள்ளிக் கோட்டையிலிருந்து பீரங்கிப் படை புறப் பட்டது. பல வீரர்கள் புடைசூழ மலையாளத்தைக் கடந்து கொங்கு மண்டலத்தில் புகுந்தது. வழியெல்லாம் ஆங்கிலப் படைவீரர் அட்டகாசம் புரிந்தனர். ஆடுகள், கோழிகளெல்லாம் பறிபோயின. பீரங்கிகள் கண்ட மக்கள் என்ன பேராபத்து சம்பவிக்க இருக்கிறதோ என அஞ்சி நடுங்கினர். படை ஓடா நிலை எல்லையையும் அடைந்து விட்டது.

சுபேதார் வேலப்பனும் படையில் வந்தான். தனது வாழ்நாளிலேயே எந்தச் சம்பவம் குறுக்கிடக் கூடாது என்று கருதிக்கொண்டிருந்தானோ அந்தச் சம்பவம் அவனை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

சின்னமலை சகோதரர்கள் பாதுகாப்பான இடத்திற்குச் சென்று மறைந்திருப்பார்கள் என்ற நம்பிக்கை இருந்தாலும் அவன் மனம் கலவரம் அடைந்திருந்தது. பலி பீடத்திற்கு அழைத்துச் செல்லப்படும் ஆட்டுக் கடா போலத் தனது

கூட்டத்தினர் பின் தொடர்ந்தான். முகத்தில் மகிழ்ச்சி யில்லை. இதயத்தில் எக்களிப்பில்லை.

"கோட்டையில் யாருமில்லையாமே! கதவுகள் திறந்து கிடக்கின்றனவாமே, கேட்டாயா; சுபேதார்?" என்றான் ஆங்கிலத் தளபதி.

"தளபதி! வழிப்போக்கர்கள் பேச்சை எப்படி நம்புவது? அலட்சியம் கூடாது. போரில் வதந்தி களுக்கு மதிப்பளிப்பதில் எதிரிகளுக்குத்தான் இலாபம்" — சுபேதார் சொன்னான்.

தளபதி கோட்டை காலியாக இருந்தது என்ற தகவலை நம்பத் தயாராக இல்லை. இருந்தாலும் கேட்டுவைத்தான். சுபேதார் அவனிடம் தோற்று விடவில்லை.

கோட்டை மதிலைச் சுற்றி பீரங்கிகள் நிறுத்தப் பட்டன. சுடுவதற்கான அமைப்பில் பொருத்தப் பட்டன.

கோட்டையின் நுழைவு வாயில் திறந்துகிடந்தது! உள்ளே போவதற்குத் தைரியம் வரவில்லை. ஆங்கிலத் தளபதி சில தமிழ் வீரர்களை அழைத்து உள்ளே சென்று வருமாறு பணித்தான். சென்ற வீரர்கள் கொஞ்ச நேரத்தில் திரும்பினர். 'குருவி, காக்கைகூட இல்லை' யென்றனர். சுபேதார் வேலப்பனையும் தமிழ் வீரர்களுடன் அனுப்பினர். வேலப்பன் நெஞ்சம் குளிர்ந்தது. தனது கடிதம் நல்ல காரியத்திற்குப் பயன்பட்டது என்று நிம்மதி பெற்றான்.

ஆங்கிலத் தளபதி கோட்டைக்குள் நுழைந்தான். சுபேதார் வேலப்பன் வழி காட்டினான். கட்டுப்பாடாக் எல்லாம் காலியாக இருப்பதில் ஏதோ 'உளவு வேலை' நடந்துள்ளது என்று தளபதிக்குச் சந்தேகம் பிறந்தது.

ஒவ்வொரு பொருளையும் உற்று நோக்கிக் கொண்டே வந்தான்.

ஆலோசனை மண்டபத்தில் இருக்கைகள் தாறு மாறுகக் கிடந்தன. ஓர் இருக்கையின் காலடியில் கிடந்த காகிதத்தின் மேல் அவன் கண் பாய்ந்தது. கடிதத்தை எடுத்தான்.

சுபேதார் வேலப்பன் சின்னமலைக்கு எழுதி யிருந்த கடிதம். பெரியதம்பி வள்ளிநாயகியைக் காணக் கிளம்பிய தருணம் ஆவேசத்தில் அங்கேயே போட்டுவிட்டுச் சென்றுன்.

அந்தக் கடிதத்தை ஆங்கிலத் தளபதி தமிழ் வீரனெருவனைப் படிக்கச் சொன்னுன். மளமள வென்று அவன் வாசித்தான்.

சுபேதார் வேலப்பனின் ஏற்பாடு தான் தங்கள் ஏமாற்றத்திற்குக் காரணம் என்பது விளங்கி விட்டது.

சுபேதார் வேலப்பனின் உடலில் குண்டு பாய்ந்தது. கோட்டை முன்புற வெளியில் மரத்தின் மேல் சடலம் தொங்கியது.

கருமலைக்காடு சின்னமலை குழுவினரின் உறை விடமாகியது. மலை அடிவாரத்தில் ஒரு குடில் அமைக்கப்பட்டது. பகல் வேளையில் உணவுக்காக மட்டும் குடிலுக்கு வந்தனர். மற்ற நேரங்களில் மலைகளிலே அலைந்து திரிந்தனர். இரவு எங்கே படுத்தார்கள், பகலிலே எந்தப் பக்கம் சஞ்சரித்தனர் என்பன சமையற்காரனுக்கும் தெரியாத புதிராக இருந்தது. மெய்க்காப்பாளர் ஒருவர் இருவர் சமையற் காரனின் தனிமையைப் போக்குவதற்கு அவ்வப்

போது விடப்பட்டனர். மிக விரைவிலேயே இந்த வாழ்க்கை பயங்கரமாகத் தோன்றியது.

பெரியதம்பி அடிக்கடி கருமலைக்கு வந்து முடிவை எதிர்த்துப் பேசிக் கொண்டே இருந்தான். "இங்குக் காட்டு மிருகங்களோடும் விஷப் பாம்புகளோடும் கலந்து வாழ்வதைவிட ஓடாநிலைக் கோட்டையைக் காக்கும் முயற்சியில் உயிர் விட்டிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்" என்று, திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டே இருந்தான். தனது காதல் வாழ்வு கைகூடாத நிலைவேறு அவனைக் கசந்த மனிதனாக ஆக்கியிருந்தது.

சின்னமலை ஆரம்பத்தில் தனது நோக்கத்தை வலியுறுத்தினாலும் மெல்ல, மெல்ல அவனையும் அறியாமல் பெரியதம்பியின் பக்கம் பயணம் செய்து கொண்டிருந்தான்.

முன்பிருந்த லட்சியவெறி அவன் உள்ளத்திலே குறைந்ததாகத் தென்பட்டது. கண்களிலே பழைய ஒளி மங்கியது. வளைந்து வளைந்து செல்லும் காட்டுப் பாதை போலவே எதிர்காலம் அவனுக்கு நேரானதாகத் தென்படவில்லை. எங்கோ திசைமாறி விட்டதோ என்ற அச்சம் அவனது உள்ளத்தை அலைக்கழித்தது.

அந்த நேரத்தில் சுபேதார் வேலப்பன் கொலை செய்யப்பட்டதும், ஓடாநிலைக் கோட்டை படுசூரணமாகியதும் சின்னமலையின் செவிக்கு எட்டின.

ஆத்திரம் கொண்டான். தனது நலனுக்காக ஓர் நல்லவனின் உயிர் அர்ப்பணிக்கப்பட்ட சம்பவம் அவன் உள்ளத்திலே பெரியப் புயலைக் கிளப்பியது. காலம் நேரம் பார்ப்பது இனித் தவறு. நெருக்கடியை நேராகச் சந்திப்பதுதான் சரியானது. இப்படி

நிமிடத்திற்கு நிமிடம் செத்துக் கொண்டே இருப்பதைவிட, கடைசியாக ஒரு முயற்சியில் பலியாவதே நல்லது என்று மனத்திற்கு அடிக்கடி கூறிக் கொண்டான்.

பெரியதம்பியோ சின்னமலையையே கோபித்துக் கொண்டான். குற்றம் சாட்டினன். "அண்ணு! சுபேதார் வேலப்பனின் மரணமாவது நமது கண்களைத் திறக்க வேண்டும். அந்தத் தூயவன் தியாகமெங்கே? காலம் கனியும் என்று காட்டு விலங்குகள் போல் ஒளிந்து வாழும் நாம் எங்கே? காலம் கனிவது எப்போது? அஞ்சியவனுக்கு வெற்றியில்லை. இலட்சிய முயற்சி என்பது லாப நஷ்டம் பார்க்கும் வர்த்தகக் கணக்கல்ல. என்னைக் கேட்டால் சுபேதார் வேலப்பனைச் சுட்டுக் கொன்றவர்களில் நால்வரை ஒழிக்கும் பணியில் நான் ஒழிந்தால் மகிழ்வேன். என்ஞல் இந்த இக்கட்டான நிலையைத் தாங்கிக் கொள்ளமுடியவில்லை" என்று சீறினன்.

ஏமாற்றமடைந்த ஆங்கிலத் தளபதி கொங்குநாடு முழுவதும் ஒற்றவர் வலையை விரித்தான்.

சின்னமலை எங்கே போனன்? கண்டுபிடிக்க முடியாத அவ்வளவு கட்டுக்காவல் நிறைந்ததா இந்த மண்டிலம்? நமது திறமைக்கு இது ஓர் அறைகூவல் என்று மூலை முடுக்கெல்லாம் தேடினர்.

கெம்பாயம்மாள் மனை, வள்ளிநாயகியின் மாளிகை, படைவீடு, பாளையக்காரர்களின் அரண் மனைகள் — எங்கெங்கும் வேவுகாரர்கள் முற்றுகை யிட்டனர். எதிர்பார்த்த சேதி அகப்படவில்லை. சோர்ந்து போயிருந்த நேரம் கருமலைக்காடுகளின் அடிவாரத்தை நோக்கிச் சில குதிரை வீரர்கள் போய்வருவதாகச் சேதி தெரிந்தது.

பொறியமைக்கப்பட்டது. வெள்ளையர் போக வில்லை. சின்னமலையின் படைவீரர்களைப் போல உடையுடுத்து நான்கு தமிழ் வீரர் அடிவாரத்திலுள்ள குடிலை நோக்கி விரைந்தனர்.

சாமியப்பன் காய் நறுக்கிக் கொண்டிருந்தான். வழக்கமாக இருக்கும் மெய்க்காப்பாளரும் மலைமீது சென்றிருந்தனர். சாமியப்பன் அவனையும் அறியாமல் பயம் நீங்கியிருந்தான். எதிரிகள் கண்டுபிடிக்கவே முடியாத இரகசிய இடம் என்ற நம்பிக்கை அவனுக்கு எதையும் அலட்சியமாக நோக்குகிற அளவிற்கு வளர்ந்திருந்தது.

வந்தவர் சாதுர்யமாகக் கேள்விக் கணை தொடுத்தனர்.

"அவசரமாகச் சின்னமலையிடம் பேசவேண்டும்" என்றனர்.

"எஜமானர் நாளைப் பகல் சாப்பாட்டிற்குத்தான் கீழே வருவார். மேலே யாரையும் அனுப்பக் கூடாது என்பது கட்டளை" என்று மளமளவென்று பேசி முடித்தான் சாமியப்பன்.

உளவு தெரிய வந்தவர்களுக்குத் தேவையான விவரம் கிடைத்து விட்டது. அவர்களுக்குச் சாமியப்பனிடம் பேசவேண்டிய விஷயங்கள் முடிந்து விட்டன. ஆனால் சாமியப்பனுக்குத் தான் தவருக ஏதாவது கூறிவிட்டோமோ என்ற சந்தேகம் பிறந்தது. ஆரம்பத்திலே காட்டியிருக்கவேண்டிய அக்கறையுடன் கேட்டான்.

"நீங்கள் யார்? என்ன வேண்டும் உங்களுக்கு? கொங்குநாட்டுப் படைவீரர்கள் தானு நீங்கள்?" என்று அடுக்கிக் கொண்டே போனுன்.

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல அவர்கள் அங்கே காத்திருக்கவில்லை. புயலோ, மின்னலோ வெனப் பறந்தனர்.

சாமியப்பனுக்குப் பயம் பற்றிக் கொண்டது. எதிரிகளாக இருந்தால் என்னுவது என்று எண்ணிய நேரத்தில் அவன் சிந்தனைத் தொடரே அறுந்தது.

மாலையில் யாருமே திரும்பவில்லை. ஏதோ செய்யக் கூடாத தவறைச் செய்துவிட்டதாக அவன் நெஞ்சு உறுத்திக் கொண்டேயிருந்தது. சின்னமலையிடம் எப்படிக் கூறுவது என்பதும் அவனுக்கு அச்சமாக இருந்தது.

மாலைக் கதிரவனும் மறைந்து பூமியை இருள் கவ்வியது. அவன் மனத்திலும் ஏதோ ஓர் அந்தகாரம் சூழ்ந்துகொண்டது. இரவு முழுதும் அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. பொழுது விடிந்ததும் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் மலைமீது ஏறிச் சின்னமலையிடம் நடந்தவற்றைக்கூறி எச்சரிக்கை செய்வது என்று தீர்மானித்தான்.

குடிலுக்கு அருகே யிருக்கும் அருவியைத் தாண்டிப் பத்தடிகூட மலைமீது போனதில்லை. வழியும் தெரியாது — துணையும் இல்லை. ஆனால் அவன் வாழ்நாளிலேயே பெற்றிராத துணிவைப் பெற்றான்.

கிழக்கு வெளுத்தது. மலைமீதேறத் தொடங்கி னான், ஏறிக்கொண்டேயிருந்தான். ஒற்றையடிப் பாதைகள், செங்குத்தான சரிவுகள், படுகுழிகள் — கால்வந்த திசையில் போய்க்கொண்டே யிருந்தான்.

பட்சி ஜாலங்களின் இன்னிசை மற்ற வேளைகளில் அவனுக்கு மதுரமாய் இருந்திருக்கும். ஆனால்

அவனுள்ள நிலையில் மரணகீதம் பாடுவதாய்ப் பட்டது.

மனித வாடையே தென்படவில்லை. குரல் கொடுத்துப் பார்த்தான். காட்டு மிருகங்களின் கர்ஜனையும், எதிரொலியும் தான் பதிலாகக் கிடைத்தன.

இரவு முழுவதும் விழித்திருந்த அயர்வு — பட்டினி எல்லாம் சேர்ந்து கொண்டன. பட்டப்பகல் எனினும் சூரிய ஒளி புகாமல் இருட்காடாய் அவ்வளவு அடர்த்தியாக மரங்களும் செடி கொடிகளும் பின்னிக் கிடந்தன.

சின்னமலையை நெருங்குவதற்குப் பதிலாகச் சின்னமலை சுற்றிக் கொண்டிருந்த இடத்திலிருந்து நெடுந்தூரம் விலகிச் சென்று கொண்டிருந்தான்.

திடீரென நேரம் அதிகமாய்விட்டதாகப் பட்டது. சின்னமலை அடித்துவாரத்திற்குத் திரும்பும் வேளையைக்கூடக் கடந்துவிட்டதாக உணர்ந்தான். வந்த வழியே திரும்புவோம் என நடையைக் கட்டினான்.

திரும்பிவரவும் அவனுக்கு விளங்கவில்லை. தட்டுத்தடுமாறிப் புறப்பட்ட இடத்திற்கே திரும்பிக் கொண்டிருந்தான்.

காலம் கடந்துவிட்டது. சின்னமலையும், பெரிய தம்பியும், மெய்க்காப்பாளரும் வழக்கம்போல் குடிலுக்கு வந்து உள்ளே நுழைந்தனர்.

கொச்சை மொழியிலே வரவேற்கும் சாமியப்பனின் கலகலப்புப் பேச்சைக் காணோம். உள் அறையிலும் ஒருவரும் இல்லை. வெளியே திரும்பிய போது குடிலைச்சுற்றி நூற்றுக்கு மேற்பட்ட ஆங்கிலப் படை வீரர்கள் நீட்டிய துப்பாக்கியுடன் வளையு

மிட்டிருந்தனர். அவர்கள் முன்னால் ஆங்கிலத் தளபதி இறுமாப்புடன் வெற்றிப் புன்னகை செய்து நின்றான்.

சின்னமலையும் பெரியதம்பியும் வழக்கமாக வைத்திருக்கும் கைத்துப்பாக்கிகளைக்கூட வைத்திருக்க வில்லை. நன்றாக எதிரிகள் வலையில் அகப்பட்டுக் கொண்டார்கள். கீழே இறங்கிய வெள்ளை வீரர்கள் சின்னமலை, பெரியதம்பி ஆகியவரின் கரங்களுக்கு விலங்கிட்டனர்.

கைதாக்கப்பட்ட வீரர்கள் சங்ககிரிக்கோட் டைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். சங்ககிரிக்கோட் டையில் நுழைவதற்கு முன்பாக, முன்னும் பின்னுமாக, பீரங்கிகள் செல்லும் கட்டைவண்டியின் மீது சின்னமலை சகோதரர்களை இறுகக் கட்டி ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

கண்டவர் கண்ணீர் விட்டனர். தாய்மார்கள் காணச் சகியாது கதவுகளைத் தாளிட்டனர். கொங்கு மண்டிலத்திற்கு இனி விமோசனமில்லை என்று நல்லவர் வருந்தினர். மரணத்தைத் துச்சமாக மதிக்கும் கட்டிளங்காளைகளும் மருண்டனர். காட்டுத்தீபோல் சேதி பரவியது. செந்தேள் கொட்டுவதுபோல் துன்புற்றனர்.

வள்ளிநாயகியின் பிணம் மாளிகைத் தோட்டத் துக் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டது.

மயிலாத்தாள், சொந்தமகள் மரித்துவிட்டது போல் மாரடித்து அழுதாள். கெம்பாயம்மாள் கண்ணீரும் கம்பலையுமாய்த் தன் உடன்பிறப்பு ஒருத்தி மாண்டுவிட்டதாக மனம் விட்டுக் கதறினாள்.

இந்தக் கன்னியின் பிண ஊர்வலத்தில் வயோதிகர் முதல் சின்னஞ்சிறு பாலகர்கள்வரை ஆயிரக் கணக்கிலே கலந்து கொண்டனர். குழந்தைசாமிக் கவுண்டர் தலையிலே முக்காடிட்டுச் சோகம் ததும்பத் தலைகுனிந்து முன்னே நடந்தார்.

சங்ககிரிக் கோட்டையின் இருட்டறைகளில் சின்னமலையும் பெரியதம்பியும் சிறை வைக்கப்பட்டனர். கோட்டைக்காவல் அதிகரிக்கப்பட்டது. நடவடிக்கை களை மிக உன்னிப்பாகக் கவனித்து வந்தனர்.

சின்னமலை வாய்திறவாத சிலையானான். பெரிய தம்பியிடம்கூட அதிக வார்த்தைகள் பேசவில்லை. தன் வாழ்வு வியர்த்தமாகி விட்டதோ என்ற பெருங்கவலை வந்து விட்டது. தான் மீளவேண்டும், எதிரிகளிட மிருந்து தப்ப வேண்டும் என்ற எண்ணம் அவன் உள்ளத்திலே சிறிதும் ஏற்படவில்லை. தான் உயிரோடு இருப்பதைவிடத் தன் இறப்பினால் ஒருவேளை விழிப்பு ஏற்படுமோ என்ற சந்தேகத்தைத் தவிர வேறு சிந்தனை ஓடவில்லை.

நாட்கள் நகர்ந்தன. மாதங்களும் மறைந்தன. 1805-ஆம் ஆண்டு ஒருநாள் பட்டப்பகல். சங்ககிரிக் கோட்டையின் எல்லா வாயில்களும் சாத்தப்பட்டன. தமிழ்ப் படைவீரர்களெல்லாம் கோட்டைக்கு வெளியே அப்புறப்படுத்தப்பட்டனர்.

வெள்ளைவீரர்கள் மட்டுமே கோட்டைக்குள் இருந்தனர்.

சின்னமலையும் பெரியதம்பியும் கொட்டடி களிலிருந்து மாட்டிய விலங்குகளுடன் அழைத்து

வரப்பட்டனர். ஆங்கிலத் தளபதி ஓங்கி வளர்ந்த ஆலமரத்தடியில் அமர்ந்திருந்தான். கொங்கு நாட்டுச் சிங்கங்கள் தங்கள் கதி இப்படியானதே என்ற ஆருத்துயரில் நடைப்பிணங்களாக நின்றனர்.

ஆங்கிலத் தளபதியின் வாயிலிருந்து புகை கக்கியது. அதைவிட அவனது வார்த்தைகள் பகையைக் கக்கின.

''சின்னமலை! உன் வீரதீர பராக்கிரமத்தில் எங்களுக்குப் பெருமதிப்பு உண்டு. உன்னைப் போன்ற வீரர்கள் எங்கள் குலத்தில் பிறந்திருக்க வேண்டும். இப்பொழுதும் குடிமுழுகிப் போய்விடவில்லை. ஒரு வார்த்தை சொல்லிவிடு. கொங்கு மண்டிலத்திற்குக் குறுநில மன்னனுய் இருக்கலாம். எங்கள் மேலாட்சிக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். உன்னைவிட ஆற்றலாளர்கள், ஆள், அம்பு, ஆயுதம் பெற்றிருந்தோர் கதி என்ன ஆயிற்று என்பதை ஒரு கணம் யோசித்துப் பார். வீணுகத் திறமைசாலிகளை அழிப்பதில் எங்களுக்கு ஆசையில்லை. சம்மதித்துவிடு. சகலமும் நன்மையாய் விடும்'' என்ருன்.

ஈட்டிகொண்டு குத்தியிருந்தால்கூட அவ்வளவு வலி சின்னமலைக்கு ஏற்பட்டிருக்காது. துப்பாக்கிக் குண்டுகளினுல் துளைத்திருந்தால்கூட இவ்வளவு துன்பம் வந்திருக்காதே என்று நொந்துகொண்டான். தலை நிமிர்ந்து பேசினுன்.

''ஐயா! ஆங்கிலத் தளபதியாரே! உங்கள் கைதேர்ந்த அரசியல் தந்திரங்களைக் கேள்விப் பட்டுள்ளேன். இன்று நேரே காணும் வாய்ப்பும் பெற்றேன். உங்களின் கைதி என்பதனுலேயே

எதுவும் சொல்லலாம்; எந்த நிபந்தனையும் கேட்கலாம் என்ற இறுமாப்பு உங்களுக்கு இருக்கிறது. நீங்கள் என்ன செய்வீர்கள்! வெற்றி போதையின் மயக்கத்திலே இருக்கிறீர்கள். உங்களிடம் நான் மனிதாபிமானத்தை எதிர்பார்ப்பது என் தவறுதான்.

"எனக்குள்ள வேதனையெல்லாம் எந்தப் புனித லட்சியத்திற்காக என் வாழ்வின் சுக துக்கங்களைப் பின்னிக்கொண்டேனோ அதையே கேவலம் நீங்கள் அளிக்கும் பட்டம், பதவி, பவிசான வாழ்வுக்குப் பலியிடும் பாதகன் என்று தவறாகக் கணக்குப் போட்டு விட்டீர்கள் என்பதுதான்.

"சின்னமலை அற்ப வாழ்விற்காக நியாயத்தை விலை கூறினான் என்பது கொங்குநாட்டிலே தெரிந்தால் தாய்மார்கள் கர்ப்பத்திலே இருக்கும் சிசுக்கள்கூடக் காறியுமிழ்ந்து என்னைக் கேலி பேசும். உங்களிடம் பேச்சு எதற்கு? என்ன தண்டனை கொடுக்க வேண்டுமோ அதை நிறைவேற்றிக் கொள்ளுங்கள். நான் அதிகம் பேசப் போவதில்லை. என் தம்பி சொன்னான், 'காலம் கனிவதெப்போது? நமது கட்டவிழ்வது எப்போது?' என்று. நிச்சயம் காலம் கனியும்; எங்கள் கட்டவிழ்க்க எவனாவது தோன்றுவான். அவனுக்கு எங்கள் தியாகம் பயிராக அமையட்டும். விடுதலை வேட்கையைச் சன்மானப் பொருளால் சரிப்படுத்த முயலாதீர்!" என்று வெறி பிடித்தவன்போல் கூச்சலிட்டான்.

ஆங்கிலத் தளபதி எழுந்து நடந்தான். மீண்டும் சின்னமலையும், பெரியதம்பியும் கொட்டடியில் அடைக்கப்பட்டனர்.

அதற்குப்பிறகு அவர்கள் வரலாறே இல்லை.

பூமிக்குள் சென்று விட்டனரா ?

மேகமண்டலத்திலே கலந்து விட்டனரா ?

தூக்குக் கயிற்றை முத்தமிட்டனரா ?

கழுகுக்கும் காக்கைக்கும் விருந்தாயினரா ?

காலமெல்லாம் காராக்கிருகத்தில் உழன்று மடிந்தனரா ?

என்ன ஆனார்கள் ? எவருக்கும் தெரியாது. எவருக்கும் தெரிவிக்கப்படவில்லை.

முற்றும்